வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1994 திங்கள் மாசி 19-ம் நாள் (3—3—1963) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 6 | இதழ் 40




# சிங்களப் பரீட்சை பகிஷ்கரிப்பு

## ஊழியர் பெரும்பாலோர் பரீட்சை எழுத மறுப்பு

## விண்ணப்பதாரர்களுக்கு தமிழரசுத் தந்தையின் தனித் தனி கடிதம்

### எழுதுவினைஞர் சங்கப் பிரசாரத்தின் விளைவு

அரசாங்க ஊழியர்களுக்கென இம்முறை நடாத்தப்படும் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள தமிழ் ஊழியர்களில் பெரும்பாலோர்—சுமார் 90 சதவிகிதம் பேர்—பரீட்சை எழுத மாட்டார்களென்று யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் முதலிய இடங்களிலிருந்து கிடைத்துள்ள செய்திகளிலிருந்து நம்பகமாகத் தெரிகிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் செய்து வரும் தீவிர பிரசார இயக்கமும், தமிழரசுக் கட்சியின் திட்டவட்டமான நடவடிக்கைகளும் தமிழ் அரசாங்க ஊழியர்களிடையே அதிசயிக்கத்தக்க மாறுதலை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் பெருமளவில் எழுதுவினைஞர் சங்கத்துக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ளனர்.

சிங்களப் பரீட்சைக்குத் தோற்றுதவர்களையும் பரீட்சையில் தேறி விட்டதாகவும், ஏராளமான தமிழ் ஊழியர்கள் சிங்களம் படிப்பதாகவும் ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்து உண்மையை மறைத்து ஊழியர்கள் கண்ணில் மண்ணைத் தூவ முயன்றனர். எல்லாம் தந்திரம், சூழ்ச்சி, உபாயம்.

ஒரு சிலர் இந்தப் பொய்ப் பிரசாரத்துக்கு மயங்கி இருக்கக்கூடும். ஆனால் பெரும்பாலோர் இந்த நெருக்கடிச் சந்தர்ப்பத்திலே சிங்களம் படிப்பது சொந்த இனத்திற்குச் செய்யும் துரோகம் என்பதை உணர்ந்து வந்துள்ளனர்.

எழுதுவினைஞர் சங்கத்தின் தொடர்ச்சியான தீவிர பிரசாரத்தால் அரசாங்க ஊழியர்கள் உண்மையை உணர்ந்து மனமாறுதல் அடைந்து வருகின்றனர்.

#### தமிழ்ப் பிரதேசத்தில்

தமிழ் ஊழியர்களை நேர் பாதையில் அழைத்துச் செல்லும் இச் சங்கத்தின் நிர்வாகிகள் தற்போது தமிழ்ப் பிரதேசத்திலே தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து ஒவ்வொரு அரசாங்கக் காரியாலயங்களுக்கும் சென்று, சிங்களத் தேர்வுப் பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள ஊழியர்களைத் தனித்

(8-ம் பக்கம் பார்க்க)




விபரம்: 8-ம் பக்கம் பார்க்கவும்

## அதிகாரி பிரசங்கம் எழுத, பிரதமர் வாசித்தாராம்

### தவறான பதப் பிரயோகத்தால் நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டம்

சமாதானத் தூதுவராகச் சீனு சென்றிருந்த இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, பீகிங்கில் நடைபெற்ற அரசாங்க விருந்தொன்றில் பேசுகையில் மேற்கு நாடுகளைத் தாக்கியதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் உட்பட பலரும், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை பற்றி வினவினார்கள். பிரதமரின் பேச்சு இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்திருந்தது. இலங்கை கொம்யூனிஸ்டு நாடுகள் பக்கம் சார்ந்து நிற்கிறதா என்று பலர் வினவினர்கள்.

பிரதமர் பீகிங்கில் நிகழ்த்திய தமது பேச்சில் "பேராசை பிடித்த மேற்கத்திய நாடுகள்" என்று மேற்கத்திய நாடுகளைத் தாக்கினர்.

இப்படியொரு நிலைமை உருவாகும் என்பதைப் பிரதமர் தெரிந்திருக்கவில்லை என்று அறியப்படுகிறது.

பீகிங் சென்றிருந்த பிரதமர் தொடர்ந்து நடந்த பல நிகழ்ச்சிகளில் பங்குகொண்டிருந்த காரணத்தினால், விருந்துபசாரத்தில் பேசுவதற்கு முன்கூட்டியே பேச்சைத் தயார் செய்யவில்லை. எனவே அன்று நடைபெற விருந்த விருந்தில் உரை நிகழ்த்துவதற்கு வேண்டிய பேச்சைத் தயார் செய்யும்படி இலங்கைத் தூதுவராலயத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரியிடம் கூறப்பட்டதாம். அந்த அதிகாரி கொம்யூனிஸ்டு மனப்பான்மை உடையவரென்றும், மேற்கு நாடுகளை வைதும் கொம்யூனிஸ்டு நாடுகளைப் போற்றியும் பேச்சைத் தயார்செய்துகொடுத்தாரென்றும் அரசியல் வட்

(9-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க உதவி கிடைக்குமா?

திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தன இலங்கையின் ஐக்கிய நாடுகள் பிரதிநிதி யாக்கப்படக் கூடும் என்ற செய்தி பலரைத் திடுக்கிட வைத்துள்ளது. திரு. பண்டாரநாயகா பிரதமராக இருந்த காலத்தில் இதே குணவர்த்தன கொரியா விவகாரத்தில் அமெரிக்காவுக்குச் சாதகமாகப் பேசியது போன்ற காரணங்களுக்காக அவர் மேற்கு நாடுகளுக்குச் சார்பானவர் என்று கணிக்கப்பட்டு திரு. பண்டாரநாயகாவால் ஐ. நா. பிரதிநிதிப் பதவியிலிருந்து அகற்றப்பட்டார் எனக் கூறப்பட்டது.

ஆனால் இன்று அவரையே திரும்பவும் அனுப்புவது சந்தேகத்தைத் தருவதாகும். அதுவும் நடு நிலைமைக் கொள்கையை நிலைநாட்ட அனுப்பிய ஓரளவு பொதுவுடைமைச் சார்புடையோர் என்று கருதப்பட்டோருக்குப் பதிலாக இவர் அனுப்.

(9-ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

ரோஸ் பிராண்ட்
சுவீட்ஸ் டொபீஸ்

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

'ரோஸ்' பிராண்ட்
என்றே கேட்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி கண்ட கனவு

—கோவை-மகேசன்—

உடலிலே ஏற்படும் நோய், காலம் போகப் போக, ஆறும். ஆனுல் உள்ளத்தில் ஏற்படும் நோய்?

நாட்பட, நாட்பட அதிகரிக்கும்.

அதுவும் காதல் நோயைச் சொல்லவா வேண்டும்?

என்றே ஒரு நாள் மன்னனைக் கண்டாள் மங்கை. மயங்கினுள், மனதைப் பறி கொடுத்தாள்.

அன்று தொடங்கி, ஒவ்வொரு நாட்கழிவதும் அவளுக்கு ஒரு யுகம் போலத் தோன்றியது.

இப்போது அவள் பூப்பந்தாடப் போவது கிடையாது. புனலாடுவது கிடையாது.

பொழுதுபோக்க, தோழிகளுடன் சோலைக்குப் போவது கிடையாது.

மன்னனையே எண்ணி எண்ணி மனம் உருகினுள்.

உடல் மெலிந்தது.

ஒரு நாள் இரவு.

ஒரு மணி இருக்கும்.

ஒரு உருவம் அவள் தூங்கும் கட்டிலண்டை சென்றது.

அவள் தூங்கினுல் தானே?

அவள் தான் தூக்கத்தை இழந்து நாட்கள் பல ஆயிற்றே!

திடீரென எழுந்திருந்தாள்.

'யாரது?'......அலறப் போன அவளை ஒருகை அணைத்தது, மறுகை அவள் வாயை மூடியது!

உற்றுப் பார்த்தாள்!

அவள் கண்களையே நம்பமுடியவில்லை.

கண்களைக் கசக்கி விட்டு மறுபடியும் பார்த்தாள்.

ஆம், அவன்தான், சந்தேகமேயில்லை.

அவள் உள்ளம் கொள்ளை கொண்ட கள்வன்தான் அங்கு வந்தது!

இதயம் நிறைய மகிழ்ச்சி.

எவ்வளவு காலம் இதை எதிர்பார்த்தாள்?

வானத்தில் வட்ட நிலவு காய்ந்தது.

சாளரத்தின் வழியாக வெளியே பார்த்தாள்.

தூரத்தில் புன்னை மரங்கள் நிறைந்த சோலைகள்.

பக்கத்திலே அழகிய தென்னந் தோட்டம்.

மன்னனைப் பார்த்தாள்!

"இவைகள் எல்லாம் தங்களுடையவை தானே" என்ருள்.

'ஆமாம்' என்ருன் மன்னன்.

"அப்போ நான்?" என்ருள் தன்னைக் காட்டி.

'நீயும் தான்' என்றபடி மிக நெருங்கி அவளை அணைத்தான்.

அப்புறம் அங்கு அமைதி நிலவியது.

திடீரென்று துடிதுடித்து எழுந்தாள்.

சுற்று முற்றும் பார்த்தாள்.

மன்னனைக் காணவில்லை.

தான் கண்டது கனவு என அறிந்தாள்.

அப்புறம் அவளுக்குத் தூக்கம் வருமா?

மறுநாள் தோழிகள் வந்தனர்.

அவள் முகத்தை உற்றுப் பார்த்தனர்.

'நேற்று இரவு எப்படியிருந்தது' என்று கேட்டனர்.

அவளுக்கு ஆச்சரியம்!

நான் கண்ட கனவு இவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்று!

அகத்தின் அழகு முகத்தில் தெரியாமலா போகும்?

புன்னுகச் சோலை புனல் தெங்கு சூழ் மாந்தை
நன்னுகம் நின்றலரும் நல் நாடன்—என் ஆகம்
கங்குல் ஒரு நாள் கனவினுள் தை வந்தான்
என்சொல் இவர் அறிந்த ஆறு.

—முத்தொள்ளாயிரம்


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


கம்பனிடமிருந்து...

# கொஞ்சமோ துன்பம்?

—சுந்தரி சபாரத்தினம்—

வாடி வதங்கி ஒளியிழந்த முகம் கடுமையாக மாறுகிறது. சுற்றிவர என்ன ஆர்ப்பாட்டம். சூலாயுதமும், வேலாயுதமும் ஏந்திய அரக்கியர் கூட்டம் அவள் மேல் பாய்வது போலவும், அவ்வாயுதங்களின் ஒளி அவளைப் பரிகசிப்பது போலவும் இருக்கின்றது.

அனுமானின் சாதுர்யத்தால் நித்திரை வசமாகின்றனர். ஒருபோதும் கண் அயராத அரக்கியர் கூட்டம் தூங்கியதை சீதை பார்த்து மகிழ்கின்ருள்.

ராகவனின் எண்ணம் ஜானகியின் மனதில் எழுந்து ஒரு நொடியில் வாட வைக்கின்றது.

துயரம் நெஞ்சை அடைக்க மரம்மேல் சாய்கிருள்.

உயிர் தரும் பசுமையடைந்த மேகம், கடல், சோலை ஆகியவைகளை ராமனுடன் ஒப்பிடுகின்ருள். இம் முப்பொருள்களின் குணங்கள் ராகவனிடத்தில் அடங்கியிருக்கின்றன. அவள் இராமனை நினைத்துப் புலம்புவதை கம்பர் வர்ணிக்கின்ருர்:

"கருமேகம், நெடுங்கடல்,
காவனையான்
தருமே தமியேயென
தாருயிர் தான்?
உருமேறு உமிழ், நெஞ்சிலே
நாண் ஒலிதான்
வருமே? உரையாய்; வலியார்
வலியே!"

பிறர் மனை புகுந்த பெண்ணை அழைப்பது கௌரவக் குறைவு என்றே இராமன் தன்னை அழைக்கவில்லை என்றெண்ணுகிருள் பேதை. அப்பொழுதும் அவளுக்குத் தன்னைப் பற்றி ஒரு கவலையும் இல்லை.

ஒரே ஒரு எண்ணம்தான் உள்ளத்தை அரிக்கின்றது. அதாவது தன்னுல் தன் நாயகனுக்குப் பழி ஏற்படலாகாது என்பதே.

இறுதியில் தான் செய்யப் போகும் காரியமே மேலோங்கி நிற்கிறது. எதிரே ஒரு மரம், அதைத் தழுவி நிற்கும் பூங்கொடி. இரண்டும் இல்வாழ்க்கைக்கு எவ்வளவு பொருத்தமான உதாரணங்கள்! அவ்வகையான இல்வாழ்வு தனக்கு இனிக்கிட்டாது என்றெண்ணி உள்ளம் நோகிருள்.

தான் இல்லாவிட்டால் தன் நாயகனின் பழி நீங்கும் என்று நினைக்கிருள்.

நாலு பக்கமும் கொம்பர்களைப் பரப்பி நிற்கும் மரம், மரணமே மேல் என்று கூறுகிறது.

நெடுநாளாக எதிர்பார்த்த சந்தர்ப்பம் கிட்டுகிறது. அரக்கிகள் அயர்ந்து தூங்குகிருர்கள்.

இதுதான் சமயம் என்று கருதும் சீதை எதிரே உள்ள புதரை நோக்கினுள். புதரை அடுத்த பூக்கள் வா! வா! என்றழைக்கின்றன!

"ஆதலான் இறத்தலே
அறத்தின் ஆறெனுச்
சாதல் காப்பவரும்
என்தவத்திற் சாம்பினுர்
சாதலா திடும்பம் வேறில்லை!
என்கொரு
போதுமாம் மாதவி
பொதும்பர் எய்தினுள்!"

இலக்கியம்:

# ஏதிலார் நோக்கு காதலார் இயல்பு!

— தேனீ —

தலைவனுக்கும் தலைவிக்கு மிடையே ஏற்பட்டு, வளர்ந்து, ஓவியமாக விளங்கும் காதற் தொடர்பினைக் கவினுறு அழகுடன், தனது இருவரிக் குறளின் மூலம் எடுத்துரைக்கும் வள்ளுவன், இடையிடையே நகைச் சுவையையும் கலக்க மறக்கவில்லை.

வாழ்க்கையின் பல்சுவைகளையும் புரிந்து கொண்ட தன்மையைத்தான் நாம் வள்ளுவனின் குறளோவியத்தில் காண்கிறோம்; கண்டு சுவைக்கிறோம்; சுவைத்து மகிழ்கிறோம்.

அவனுடைய களவியலும் அதற்கு விதிவிலக்கல்ல.

தலைவன், தலைவியைப் பற்றி என்ன என்னவோ வெல்லாம் கற்பனை செய்கிருன்.

தலைவியும், தலைவனைப் பற்றி ஏதேதோ எல்லாம் எண்ணுகிருள்.

இருவரும் சந்திக்கின்றனர்—பல தடவைகள்.

ஒவ்வொரு தடவையும் எத்தனையோ காதற் கதைகளைப் பேசி அகமகிழ்கின்றனர்.

ஆனுல், இவர்கள் இப்படிச் சந்திக்க, சந்தித்துப் பேச அவர்களுக்கு இன்றியமையாத உதவியாக விளங்குபவள், உறுதுணையாக நிற்பவள் காதலியின் தோழி.

அவளை மறக்கவில்லை வள்ளுவன்.

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் பலமுறை சந்தித்துப் பழகியும் ஒருவரை ஒருவர் நோக்குங்கால், யாரோ அறிமுகம் இல்லாதவரைப் பார்ப்பது போற்தான் பார்க்கிருர்கள்.

இதுதான் புரியவில்லைத் தோழிக்கு!

'நாளாந்தம் சந்திக்கும் காதலர்கள் இப்படி ஒருவரை ஒருவர் நோக்குவதன் அர்த்தம் தான் என்ன?' தோழி திகைக்கிருள்.

அவள் மனத்திலே இந்தக் கேள்விக் குறி தோன்றி மறைய முன்னர், பதிலும் பிறந்து விடுகிறது.

'ஓகோ! இப்படிப் பொது நோக்கு நோக்குவதுதான் காதலர் இயல்பு போலும்!' என்று தான் கேட்ட கேள்விக்குத்தானே பதிலிறுத்துக்கொள்ளுகிருள் அவள்!

காதலர் இருவரிடையே ஏற்படும் வழக்கமான அநுபவமொன்றினைத் தோழியின் மூலம் எத்துணை அழகாக, இதமாக, நகைச்சுவையும் இழையோட, எடுத்தியம்புகிருன் வள்ளுவன்.

இதுவும் அவனுக்கே உரிய இயல்பு போலும்!

இதைப் பாருங்கள்:

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

# செந்தழலாகிய சந்தனம்!

—: பனை மலர் :—

மயங்கிக் கிடக்கிருள் மங்கை யொருத்தி. கொஞ்சும் இளந்தளிர் அவள். உடலோ கோடி அழகு படைத்த கடல். மஞ்சத்தில் கை, கால் போட்டது போட்டபடி புரள்கிருள். இந்த உலகத்து நினைப்பேயில்லை அவளுக்கு. ஆறறிவும் ஒருங்கிவிட்டது போன்ற பிரமை! அருகிலே புருக் கூட்டம் போல் தோழியர். அன்னை அறிவிழந்து சோர்கிருள். ஆவி சிலிர்க்காதா அவளுக்கு! அருமையாகப் பெற்று ஆசையோடு வளர்த்த அன்பு மகளல்லவா?

திடீரென மகள் கண்விழிக்கிருள். உடல் பதற, உள்ளம் துடிக்க கத்துகிருள். ஐயோ! என் மீது தீயைக் கொட்டுகிருர்களே! என் உடல் எல்லாம் செந்தழல் வேகிறதே! தீ வாட்டுகிறதே என்று கொதிக்கிருள். எங்கள் நெஞ்சமே கொதிக்கிறதே! அட பாவி! அந்தக் கொடியுடலில் கொடுந் தீயைக் கொட்டவா? அங்கே குழுமி நின்றவர்கள் கல்மனம் படைத்தவர்களா? விழுந்தவனை மாடேறி மிதிப்பது, எரிகின்ற புண்ணிலே ஈட்டியை எறிவது என்றெல்லாம் கூறுவார்களே! அது தானு இது?

இல்லை; இல்லவே இல்லை. மயங்கிக் கிடந்த மங்கை நல்லாள் மீது சுடு தணலையா வீசுவார்கள்? மாட்டார்களே! சந்தனம் இருக்கிறதே சந்தனம். அதில் நல்ல குளிர்ந்த செழுஞ் சந்தனமாக வாங்கி, பன்னீரில் குழைத்தெடுத்து மயங்கியவளின் சோர்வு தீர அவளது தளிர்ச் சருமத்தில் தடவினுர்கள் தோழியர். ஆகா! என்ன சுகந்தமாக—சுகமாக இருக்குமே, என்கிறீர்களா? இல்லைத் தீயாகச் சுடுகிறது அவளுக்கு! நானு கூறுகிறேன்? அவள் சொல்லுகிருள் கேளுங்கள்:

'செந்தழலின் சாற்றைப்
பிழிந்து செழுஞ்சிதச்
சந்தனமென்ருரோ தடவினுர்'

ஆரோ தடவினுர்களாம். தடவியவர்கள் அவள் தோழியரே! அவளுக்கு மயக்கமல்லவா? சந்தனம் தீயாகச் சுடும் மயக்கம். பால் கசக்கிறது, நிலவு கொதிக்கிறது, என்பார்களே! அந்த மயக்கம். பாவம் அவள்!

மாவீரன் நந்தி இருக்கிருனே—ஆமாம்- அவன்தான் அந்நாட்டு மன்னன். களம் பலகண்டு, போர்பல வென்ற மன்னுதி மன்னன். மட்டுமா? தமிழாராய்ச்சி அவனது நித்திய தொழில்.

அன்றொரு நாள் அவன் வீதி வழி பவனி சென்ருன். எப்படியோ கண்டாள் இவள், அவனையே மணஞ் செய்வது என்று முடிவு கொண்டாள். தோழியர் தூது சென்றனர்.

மன்னன் அவளை விரும்பினுலல்லவா? மறுத்து விட்டான். அவள் மயங்கி விட்டாள்.

இந்த நிகழ்ச்சியைப் படம் பிடித்துக் காட்டும்—கற்குந் தோறும் தெவிட்டாக் கருத்துச் சுவையாக நின்று நிலவும், தீந்தமிழ்க் கவிதை அடிகள்தான் இவை:

"செந்தழலின் சாற்றைப்
பிழிந்து செழுஞ்சிதச்
சந்தனமென்ருரோ தடவினுர்
—பைந் தமிழை
ஆய்கின்ற கோன் நந்தி
ஆகந்தழுவாமல்
வேகின்ற பாவி யேன் மீது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மு. கருணநிதி, ஏழாலை மேற்கு.
கே: அமெரிக்காவைச் சீன வெறும் காகிதப் புலி என்று சொல்லுகிறதே?

ப: ஆனல் அதற்கு அணுகுண்டுப் பல் இருக்கிறதே!

ஃ

இ. சுந்தரலிங்கம், மல்லாகம்.

கே: ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு புதுஅம்சம் தொடங்கி அது மறு கிழமையே வந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகிறதே ஒரு தினசரியில். அந்தத் தினசரியை உங்களுக்கும் தெரியுமா?

ப: தெரியுமே! அந்தத் திடீர்அம்சங்கள் மேலதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதற்காகத் திட்டமிட்டுத் தொடங்கப்படுபவை— வாசகர்களுக்காக அல்ல. அந்தப் பத்திரிகாலயத்துள் நடக்கும் சூழ்ச்சிகளும், தந்திரங்களும், சதிகளும், உபாயங்களும், வாசகர்களுக்குத் தெரிந்தால்............

ஃ

பி. தங்கராசு, மன்னர்.

கே: நானும் என் காதலியும் ஒன்று சேருவதை விரும்பாத சிலர் வீண் வதந்திகளைப் பரப்பி விடுகின்றனர். அவளோ இந்தச் சொலகளைக் கேட்பதைவிட இறப்பது மேல் என்கிருள். இதற்கு என்ன செய்வது குயுக்தியாரே!

ப: வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வையுங்கள்—காதலியைக் கைப்பிடிப்பது மூலம்.

கே: என் வாழ்க்கையை கதையாக எழுதியனுப்பினல் பிரசுரிப்பீர்களா?

ப: அதைப் பிரசுரிப்பதற்கெனத் தனியாக ஒரு பத்திரிகையே தொடங்கிவிடுங்கள்.

ஃ

கமலாட்சி, இறக்குவானை.

கே: எனக்குச்சினிமாவில் சேர ஆசையாக இருக்கிறது. இதற்கு ஒரு வழி சொல்லுவீர்களா?

ப: ஆசை இருந்தால் மட்டும் போதாது. கொஞ்சம் நடிப்பும் தெரிய வேண்டும். அத்தோடு விட்டுக் கொடுக்கவும் தெரிய வேண்டும்.

கே: குயுக்தி மாமா! இது வரைக்கும் தாங்கள் அழுததே கிடையாதா?

ப: கிடையாது. ஆனல் சில அசட்டுக் கேள்விகளைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் சிரிப்பை ஒரு கணம் நிறுத்தியதுண்டு.

ஃ

எஸ். வி. நவம், நுவரெலியா.
கே: இக்காலத்துப் பெண்கள் ஆண்களைக் கண்டவுடன் முறைத்துப் பார்க்கிருர்களே ஏன்?

ப: முறைத்துப் பார்த்ததும் ஆண்கள் பயந்து போய் தலைகுனிகிருர்களா? அல்லது அவர்களுக்கு முறைப்பை எதிர்க்கும் துணிச்சலுண்டா என்பதைச் சோதனை செய்ய......

ஃ

இ. பா. மணியம், காலி.

கே: மந்திரி இலங்கரத்தின ஏனே யாழ்ப்பாண விஜயத்தை இரத்துப் பண்ணினர்?

ப: முதல் விஜயத்தின் அனுபவம்தான் காரணம். எதிர்ப்பு வலுவடைந்ததும் பயணத்தை இரத்துச் செய்தார்.

ஃ

எம். லூர்த்துமேரி, மூதூர்-13.

கே: மொழிப் பிரச்சினை வட்ட மேசை கூடுவதால் தீருமா?

ப: மொழிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியவர்கள் தமிழ் பேசும் மக்களே! ஆட்சியாளர்களைப் பொறுத்தமட்டில் அது தீர்ந்து போன பிரச்சினையாம்.

ஃ

திக்கம் சதாதனம், அல்வாய்.
கே: தமிழர்களுடைய சம்பள உயர்வு நிறுத்தியதையும், அமெரிக்கா உதவி நிறுத்துவதையும் எவ்வாறு ஒப்பிடலாம்?

ப: சம்பள உயர்வு ஊழியத்துக்குரிய ஊதியம்—உதவியன்று. அதனைக் கொடுக்க மறுப்பவர்கள் சுரண்டல் பேர்வழிகள். உதவி பெற அவர்களுக்கு யோக்கியதாம்சம் ஏது?

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

எம். பி. ராஜ், தெனியாய.

கே: தற்போது நம் நாட்டில் பெருகி வருவது எது?

ப: கசிப்பும் காட்டிக் கொடுக்கும் கயமையும்.

ஃ

பி. கே. சந்திரசேகரம், ஹட்டன்.

கே: அண்ணுத்துரையைத் தென்னிந்திய "காந்தி" என்கிருர்களே, அண்ணுத்துரைக்குப் பொருந்துமா? காந்தியைப் போல் அண்ணுத்துரை என்ன செய்துள்ளார்?

ப: காந்தி இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டார். அண்ணுத்துரை திராவிடத்தின் விடுதலைக்காகப் பாடுபடுகிருர்.

ஃ

தே. மகாராணி, கொழும்பு-12.

கே: பெண்கள் ஏன் உதட்டுக்குச் சாயம் பூசுகிருர்கள்?

ப: சாயம் பூசினல்போலிச் சரக்குகூட சந்தையில் விற்பனையாகுமே!

ஃ

முல்லைநாதன், முல்லைத்தீவு.

கே: வடஇலங்கையில் சீனர்கள் போர்க் கப்பல் தளம் அமைத்தால் அதில் யாருக்கு அபாயம்?

ப: 1. தமிழ் பேசும் மக்களுக்கு, 2. இலங்கைக்கு, 3. இந்தியாவுக்கு.

ஃ

கருணைக்கடல், ஏழாலை தெற்கு.

கே: இலங்கையின் பெரும் பதவிகளை தன்னுடைய சொந்தத்துக்குள்ளே நியமிக்கும் பிரதம மந்திரி எதற்காக தன்னுடன் பிறந்த சகோதரராகிய பலாங்கொடை தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருக்கு ஒரு பதவியும் கொடுக்க முன் வரவில்லை?

ப: அவருக்குத்தான் எம். பி. பதவி இருக்கிறது, அத்தோடு ஒரு பட்டின சபைத் தலைமைப் பதவியும் இருக்கிறதே!

கே: கல்வி அமைச்சர் பதவியிலிருந்து பதியுதீன் மஹ்மூத் ராஜினமா செய்தால் அம்மாவின் அரசாங்கம் நியமன அங்கத்தவர் திரு. எஸ். தொண்டமானை அப் பதவிக்கு நியமிக்குமா?

ப: நியமிக்காது. அவர் சிங்களம் படித்தாலும் சரி பௌத்தராலும் சரி மந்திரி பதவி கிடைக்காது.

ஃ

க. இராமசாமி, பலாங்கொடை.

கே: ஒரு ஆண் திருமணத்திற்குப் பின் சில வேளை நிம்மதியை இழந்து சீவிப்பதேன்?

ப: மண வாழ்க்கையைச் சுவர்க்கமாக்கிக் கொள்பவர்களுமுண்டு. அதனை நரகமாக்கி, நிம்மதியிழந்து தவிப்பவர்களுமுண்டு.

ஃ

செல்வி. பரமநாதன் ஆனந்தி, தலாத்துஓயா.

கே: அகிம்சை, அகிம்சை என்று கூறுகின்ருர்களே, அகிம்சையைப் பற்றி அறியாத அறிவிலிகள் இடத்திலே நாம் அகிம்சையையும் சாத்விகப் போராட்டத்தையும் எப்படி நடாத்தலாம்?

ப: அகிம்சையின் வலிமையையறியாதவர்களையும்கூட அடிபணிய வைத்துள்ளதே காந்திஜியின் அகிம்சையும் சாத்வீகப் போராட்டமும்.


# உவகையுடன் புறப்படுவீர்!

—கல்வயல் அருள்-வேலழகன்—

எதிர்த்துவரும் எதிரிகளை ஓடச் செய்து,
எள்ளளவும் பிறழாத கொள்கை பூண்டு,
கொதித்துவரும் பகைவர்தம் வலிமை வீழ்த்தி,
குவலயத்தில் அழியாத புகழைக் காக்க,
மதித்துவரும் மாசிலலாக் கடமை வீரர்,
மிகையில்லா தமிழ்த்தந்தை செல்வ ரோடு,
உதித்துவரும் தமிழினத்தின் சிறப்பைக் காண,
உவகையுடன் புறப்படுவீர் கடமை வீரர்!

மொழியெங்கள் உயிராகும்! மூச்சு மாகும்!
மூத்ததமிழ் நரம்போடும் இரத்த மாகும்!
அழிவடையும் நிலையழிப்போம்! மொழியைக்
காப்போம்!
அறிவொழுகும் வழிகாட்டி செல்வ ரோடு,
இழிவெதிர்த்து எமக்குரிய உரிமை நாடி,
இணையில்லா ஈழத்தில் தமிழர் வாழ
வழிவகுக்கும் தமிழ்த்தந்தை செல்வ ரோடு
வீரமுடன் புறப்படுவீர் கடமை வீரர்!

நாமிருக்கும் ஈழத்தில் தமிழர் வாழ்வில்,
நலிவுதனைப் போக்கிடவே வழியைத் தேடி!
தாமெடுத்த கொள்கையிலே சிறந்து நின்று,
தரணிபுகழ் தமிழர்தம் மானம் காக்க,
பூமணக்கும் சோலைபோன்ற ஈழ நாட்டில்!
பொலிவுடனே தமிழரினம் ஒன்று கூடி,
நாமணக்கும் தமிழினத்தின் உரிமை தேடும்,
நமதன்பர் செல்வரவர் வழி நடப்பீர்!

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கை வாய்ந்த பம்ப்.

**விங்கெட்**

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் உலகப் பிரசித்தி பெற்ற மெஸ்ஸெர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான உறுதி வாய்ந்த தண்ணீர் பம்ப்கள் அதிக காலம் மிகத் திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்ரோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை எம்மிடம் அவற்றில் பலரக உப உறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கைஉருளைகளும் கிடைக்கும்.

1½" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.
2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.
3" மொடல்-மணித்தியாலம் 4800-16809 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை.
ஆகக் கூடிய ஏற்றும் உயரம் 70 அடி
ஆகக் கூடிய உறிஞ்சும் ஆழம் 25 அடி

விற்பனையாளர்கள்

சண்முகம் ஸ்டோர்ஸ், 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
ஏ. எஸ். அரசரத்தினம் அன் கோ, 11, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
எம். எஸ். நாகலிங்கம், பிரதான வீதி, பருத்தித்துறை.
ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ, வவுனியா.

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

**கொழும்பு கொமர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்,**
([illegible] இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
தபாற் பெட்டி இல: 33. கொழும்பு.
காட்சி அறை: ஜெனரல் லேக்ஸ் ரோட், போன்: 79351.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

"தமிழர்களும் சிங்களம் படித்தால் தவறு ஒன்றும் கிடையாதே! இந் நாட்டின் இன ஒற்றுமை வளருவதற்கு வழி வகுக்குமே!" என்று ஒரு மந்திரியார் ஒரு தமிழ்த் தலைவரிடம் கூறினாராம்.

இதைக் கேட்ட தமிழ்த் தலைவருக்குக் கோபம் ஏற்பட்டுவிட்டதாம். கொதித்தெழுந்து மந்திரியாரை முறைத்துக் கொண்டாராம். 'இந்நாட்டில் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் சிங்களவர்களாக—பௌத்தர்களாக மாற்றி விடலாம் என்று ஆசைப்படுகிறீர்கள் நீங்கள். ஆனால் அந்த ஆசை ஒருபோதும் நிறைவேறப் போவதில்லை. ஏதோ சிற் சில சந்தர்ப்பவாதிகள் ஆட்சியாளர்களின் சலுகைகளுக்காக ஏதோ சிங்களம் படிக்க முனைந்தாலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை இதயமற்றவர்கள், தன்மான உணர்ச்சி இல்லாதவர்கள் என்று எண்ணி விட வேண்டாம்' என்று கூறினாராம்.

அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்த மந்திரியார் மெதுவாகச் சிரித்துவிட்டு ஒரு பெரிய உண்மையை ஒப்புக்கொண்டாராம்.

இரு.........அவர்களே! என்னைப் பாருங்கள். கடந்த மூன்று பரம்பரைக்கு முன்னர் என்னுடைய குடும்பமும் தமிழர்கள் தான். இதற்குத் தக்க ஆதாரங்கள் யாவும் இருக்கின்றன. என்னுடைய மூதாதையரே சிங்களத்தை ஒப்புக்கொண்டு சிங்களவர்களாகிவிட்டுள்ளனர். இன்று நான் ஒரு தமிழ்ப் பரம்பரையில் பிறந்தவன் என்று துணிவோடு கூற முடியாவிட்டாலும், என்னுடலில் ஓடுவது தூய தமிழ் இரத்தம்தான் என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். என் குடும்பத்தாரைப் போன்று இந் நாட்டில் வதியும் தமிழ் மக்கள் அனைவரும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழ்ந்தால் நிச்சயம் இலங்கை மக்கள் அனைவரும் ஒரே சமுதாயமாக ஒற்றுமையுடன் வாழலாம் அல்லவா?

இவ்வாறு மந்திரியார் கூறி முடித்தாராம்.

1958ம் ஆண்டு இனக் கலவரத்தின்போது தமிழ் மக்களுக்கு எதிராகத் துவேஷத் தீயை வளர்க்க முனைந்தவர் என்ற குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகிய ஒருவர், இது கால வரையும் தன் மனதுள் மூடி வைத்திருந்த ஒரு மாபெரும் குடும்ப இரகசியத்தை வெளியிட்டிருக்கிறார்.

வெள்ளையர் ஆதிக்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்த சிங்கள அரசியல்வாதிகளை அடக்குவதற்காக தென்னிந்தியா இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட மறவர் கூட்டத்தைச்சேர்ந்தவர்களின்பரம்பரையிலுதித்து இன்று சிங்களவராகி சர்வ சிங்கள மந்திரி சபையில் பிரதானமான பாகம் வகிக்கும் ஒருவர் தமிழர்களின் பெரும் துவேஷியாக ஒரு காலம் இருந்தார். (இன்று தனது நிலையை ஓரளவு மாற்றிக் கொண்டுள்ளார் என்று தெரிகிறது) தானும் ஒரு தமிழன்தான் என்பதை இப்போதுதான் உணர்ந்து விட்டார் போலும்.

சக மந்திரிமாருக்கும் இவருடைய குடும்ப இரகசியம் தெரிந்துவிட்டதனுலோ என்னவோ தெரியாது, மந்திரி சபைக்குள்ளும் இவருக்கு எதிராக ஒரு பெரிய எதிர்ப் பேற்பட்டு வருகிறதாம்.

* * *

கல்லூரி விடயங்கள் போன்ற அரசியல் சார்பற்ற சம்பவங்களில் அப்பாக்குட்டி அம்மான் தலையிடுவது விரும்பத்தக்கதல்ல என்று ஒரு மூலையிலிருந்து ஒரு சிறு புலம்பல் ஒலிப்பது நமது காதுகளுக்கு எட்டாமலில்லை.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மலிந்து வரும் தரங்கெட்ட செய்கைகளையும், இவ் வேலைகளுக்கு வித்திடுவோரையும் சந்திக்கு இழுத்துச் சாடுவது அம்மானின் தலையாய கடமைகளில் ஒன்றாகும்.

சொல் வேறு, செயல் வேறு என்று கருதிக் கொண்டு திரியும் சில தலைவர்களையும் விரைவில் அம்மான் சந்திக்குக் கொண்டு வரத்தான் போகிறார் என்பதையும் கூறி வைக்க விரும்புகிறார்.

* * *

ஏதோ ஒரு பத்திரிகையில் வெளிவந்தமைக் கமைய தமிழ்க் காங்கிரசின் வாலிப முன்னணியின் உரும்பராய்க் கிளை அங்குரார்ப்பணம், 'விமரிசை'யாக நடைபெற்றது. கூட்டத்திற்குச் சமுகமளித்தவர் தொகையினர் மொத்தம் 15 பேர். இவர்களில் பத்திற்கு மேற்பட்டவர்கள் வேடிக்கை பார்க்கச் சென்ற தமிழரசுவாதிகள். மிகுதிப் பேரில் சென்ற தேர்தல் காலத்தில் சுயநலத்தால் தமிழ்க் காங்கிரசை ஆதரித்து, நன்மையடைந்த கடனுக்காக தமிழ்க்காங்கிரசை ஆதரிப்பவர்கள். ஏனையோர் அரசியல் அரிச்சுவடியே தெரியாதவர்கள்.

அங்குரார்ப்பண விழாவில் எல்லோரையும் கவலை கொள்ளச் செய்த நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது. முன்பு அகில இலங்கை ஆனைப்பந்தி காங்கிரஸ் கௌரவ செயலாளராக விருந்த உரும்பராயைச் சேர்ந்த வழக்கறிஞர் சமுகமளிக்காததே! காரணம் என்னவென்று யாருக்கும் தெரியவில்லை.

'கோர'மில்லாத கூட்டத்தைக் கலைத்து விட்டு வேறோர் நாளில் கூடலாமே என்று பலரது அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தினசரிப் பத்திரிகைகள் நமது செய்தியை வைத்தே பெரிய தலைப்புக்கள் தீட்டப்படுவதற்கான ஆயத்தங்களெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. திறப்பு விழாவில் நடைபெற்றதாக பேச்சுக்களும் ஏற்கனவே பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில், கூட்டத்தை ஒத்திவைத்து விடலாகாது என்பதனால் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

'தமிழரசை ஆதரித்தால் தன்னலம் கெட்டுவிடும். ஆகவே நம் நயம் கருதிகளாகிய நாம், நாமாகவே தனித்து இயங்க வேண்டும்' என்ற எண்ணமுடைய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். பிரேரிக்கப்பட்ட பெயர்களை ஆதரிக்கவும் ஆட்கள் கிடைக்கவில்லை.

இந்த அங்குரார்ப்பண விழா முடிவடைந்தது. அடுத்த நாள் இந்த விழா நடந்த வீட்டுக்குஅம்மானின் நண்பர் ஒருவர் போயிருந்த போது அங்கு தமிழரசுக் கட்சி சின்னங்களான சில சலோக அட்டைகள் தென்பட்டனவாம். இவற்றைப் பிட்டு நண்பர் வீட்டுச் சொந்தக்காரரிடம் காரணம் கேட்ட போது, அவர் "நான் ஒரு தமிழரசுவாதி. ஏதோ ஒரு கூட்டம் நடத்தப்போகிறோம் என்று வந்து கேட்டனம். இடமிருக்கும் போது இல்லையென்று சொல்லமுடியவில்லை. [illegible] லவே, ஆனதனல்தான்

(9-ம் பக்கம் பார்க்க)

## ★ மந்திரியாரின் குடும்ப இரகசியம்
## ★ உதவி அதிபருக்கு உதவி புரியும் அதிபர்
## ★ வாலிப முன்னணி அங்குரார்ப்பண விவகாரம்

* * *

ஆரசாங்கத்துக்குக் கையளிக்கப்பட்ட முதல் தரக் கல்லூரி ஒன்றின் உதவி அதிபர் பதவிக்குரியவர் யார்? என்பதைத் தீர்மானிப்பதில் ஓர் சங்கடம் உருவாகியிருப்பதாக அம்மானுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

முறைப்படி உதவி அதிபராகவரவேண்டியவர் ஒருவர் சகல யோக்கிய தாம்சங்களும் பெற்றிருந்தும், அவருக்கு அப்பதவி கிடைக்காமலிருக்க வேண்டும் என்பதற்காகவும், தற்போதைய அதிபரின் உறவினர் ஒருவருக்குப் பதவி வரவேண்டும் என்பதற்காகவும் சூழ்ச்சிகளும், திரைமறைவு நாடகங்களும் நடைபெற்று வருகின்றனவாம்.

நீதிக்கும் நேர்மைக்கும், பக்திக்கும் முக்திக்கும், முக்கியத்துவம் அளித்து, 'சிறந்த மாணவர்களை உருவாக்கும் சீரான வித்தியாலயம்' என்று அகில இலங்கையில் மட்டுமல்ல கடல்கடந்த நாடுகளிலும் புகழ் பரப்பிய ஒரு கல்விக்கூடம் சுயநலத்தாலும், சூழ்ச்சியினாலும் சின்னாபின்னமாகாதிருக்க வேண்டுமென்பதே அம்மானின் அவாவாகும்.

---

# கவிதைப் பூங்கா

## வாழி நீ! நீடு வாழி!

—திமிலைக் கண்ணன்—

பணிவினிற் இனியன்; ஞானப்,
பண்பினிற் இனியன, நலல
துணிவினிற் இனியன், தெய்வத்
தோற்றங்கள் அனைத்து மாகி;
அணி மணி துறந்த ஞானி;
ஐம் புலன் தன்னைக் காய்ந்தோன்;
பணியினிற் சிறந்த மாதா!
சாரதா மணியே போற்றி!

மணி யெனத் திரண்ட முத்து;
வாசகம் மொழிந்த தீரா!
துணி வினிற் சிறந்த உந்தன்;
துறவற வாழ்க்கைக் கிங்கு;
அணிசெயுஞ் சிடர் தம்மில்;
அருள்மணி விவேகா நந்தன்;
பணி செய நட்ட சங்கம்;
பல்லாண்டு நிலைத்து வாழி!

வாழியுன் வாழ்க்கை! இந்த
வையத்து நாட்டி லெல்லாம்;
தாழ்வுற்று, துறவறத் தால்;
சகதர்ம நீதி கெட்டு;
பாழ்பட்டு நின்ற பெண்மை;
பல்லாண்டு நீடு வாழ......
வாழ் மணி! பரமஹம்ஸ,
வாழி நீ! நீடுவாழி!

## இனி வேண்டாம் உன் தாலி

—சோதி—

அத்தானென் றன்பாக அழைத்தஉன்னை
அற்பரெனக் காட்டிவிட்டீர் ஆசையாலே
பத்தாவென் றெண்ணியநான் பாவியானேன்
பகுத்தறிவும் பணத்தாலே பறந்துபோச்சோ?
செத்தாலும் செந்தமிழ்த்தாய் தன்னைவிற்றுச்
சீமாட்டி எனும்வாழ்வைச் சிறிதும்வேண்டேன்
சொத்தான தமிழனை தன்னைக்காத்துச்
சுயமதிப்பைத் தருபவற்கே சொந்தமாவேன்.

தன்மானம் தானென்ன தளர்ந்துபோச்சா?
தாலிக்குப் பணந்தேடித் தானேநீரும்
உன்மானம் தனைவிற்க உறுதிகொண்டீர்?
உணர்ச்சியெலாம் உறைந்தொடுங்கி ஒழிந்ததாலே
சொன்மானம் சுரண்டுகின்ற சூதுகண்டும்
சொற்பசுகம் தனைநாடிச் சுழலுகின்றீர்
என்மானம் இழிபட்டும் போகாதையா
இனிவேண்டாம் உன்தாலி இதுவேதிண்ணம்.

காதலித்தேன் தன்மானம் காப்பிரென்று
கல்லறையா தமிழ்த்தாய்க்குக் கட்டுகின்றாய்?
வேதனையைத் தந்துவிட்ட வினைரேயுன்
வேதனத்தை விரும்பாளிவ் வீரமங்கை
பூதலத்தில் எனையீன்ற அன்னைதந்த
பொன்னுன மொழிதன்னைப் பொசுக்கிவிட்டுக்
காதகனே! உன்தாலி கழுத்தில்தாங்க
கருத்தற்ற கபோதியல்ல காமப்பேயே!

---

## "லோகு" வுக்குப் பிரியாவிடை

இலங்கைப் பத்திரிகைத் துறையில் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சேவை செய்து வருபவரான திரு. வி. லோகநாதன் (லோகு) அவர்கள் தமது தாயகத்துக்கு திரும்பவிருக்கிறார். இலங்கையின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அவர் செய்துள்ள சேவையை நாடறியும்.

அவரது சேவையை மதிப்பதற்கடையாளமாக அவருக்கு ஒரு பிரிவுபசார வைபவத்தை நிகழ்த்தி அவரைக் கௌரவிக்கும் நோக்கத்துடன் நண்பர்களும், இலக்கிய அபிமானிகளும் சேர்ந்து ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இலங்கையில் உள்ள சகல தமிழ், சிங்கள, ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைகளிலும், பிரதான வாராந்த தமிழ்ப் பத்திரிகைகளிலும், இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய தூதராலயங்களிலும் கடமையாற்றும் ஒவ்வொருவரைக் கொண்டும் இக் குழு உருவாக்கப் பட்டிருக்கிறது.

பிரியாவிடை விருந்துபசாரத்தை இவ்வார இறுதியில் கிராண்ட் ஒறியன்டல் ஹோட்டலில் நடத்தி, கொழும்பு மாநகர மேயரைக் கொண்டு திரு. லோகநாதனுக்கு அன்பளிப்புகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இவ் வைபவத்தில் கலந்து கொள்ள விரும்புவோர், உபசாரக் குழுத் தலைவரான இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. க. செ. நடராசன் அவர்களுடனே, இணைச் செயலாளர்களான திரு. கே. பாலச்சந்திரனுடனே, அல்லது சில்லையூர் செல்வராசனுடனே தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடமை மறவாது உயிர்நீத்த ஒப்பற்ற தியாகி

## அமரர் கா. இராஜலிங்கம்

—பெ. செ. வரதராஜுலு நாயுடு—

இந்நாட்டில் வதியும், இந்திய பரம்பரையில் வந்த தமிழ் மக்களின் நல் வாழ்வை, மனத்துள் கொண்டு, உழைத்து வந்த தமிழ்த் தலைவர் பலர்.

அவருள் சீரிய நோக்கங் கொண்டோர் ஒரு சிலர். அவருள்ளும், நசுக்கப்பட்டு வந்த மலைநாட்டுப் பாட்டாளி மக்களின் அடிமைத் தனத்தை நீக்கி, வளமுறச் செய்வதற்காகத் தம் வாழ்க்கையை மனப்பூர்வமாக அர்ப்பணித்தோர் வெகு சிலர்.

அத்தகைய தலைவருள் பூரணமானவர் நம் தலைவர் இராஜலிங்கம். இவர் இன்றுள்ள தமிழ்த் தலைவருள் தலையானவர். கற்றோர் குழுவில் கல்விமானகவும், மன்றத்துள் முழுமதியாகவும், ஏழைகளுக்குள் ஏழை வழிகாட்டியாகவும் துலங்கி வந்தார். ஆனல் பணம் படைத்தோருடன் பணம் படைத்தோராக இருந்ததில்லை. தன்னிடமுள்ளதை அவசியமென்றறிந்தால் பிறர்க்கீவதில் தயங்கியதும் இல்லை.

### ஒப்பற்ற தியாகி

அவர் ஏழை பாட்டாளிகளுக்கிடையே பிறந்து, அவர்களுக்கிடையில் வளர்ந்து, கல்வி கற்று, வாடி வதங்கும் அவர்களின் துன்பத்தை நீக்குவதற்காக உழைத்து, தனது உடல், பொருள், சுகம், இன்பம் யாவற்றையும் இந்நாட்டு பாட்டாளி மக்களுக்காகவே தியாகம் செய்து, கடமை மறவாது உயிர்நீத்த ஒப்பற்ற தியாகி.

இந்நாட்டிலே எவரும் இயற்றமுடியாத பல பணிகளை தாழ்ந்த மக்களின் உயர்வுக்காக, இரவு பகல் செய்து, அந்தச் சேவையிலேயே உயிர்நீத்த தனித் தலைவர் இராஜலிங்கம்.

அன்பர் இராஜலிங்கம் அவர்களை, 1940ம் ஆண்டு கம்பளை மாநகரில் திரு. சந்திரசேகர ஐயர் எமக்கு அறிமுகம் செய்து வைத்தார். அன்றிலிருந்து எங்கள் நட்பு மாசின்றி வளர்ந்து வந்தது. மேலும் வளர்வதாக.

எந்த விடயத்தையும் நன்கு ஆராயும்திறன் உடையவர் தலைவர் இராஜலிங்கம். மற்றவர்கள் மனத்துள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை அவர் மாற்றும் திறனே அலாதி. விடயங்களை தெளிவுபெற எடுத்துக் கூறுவதில் மிகு சமர்த்தர்.

மலைநாட்டு மக்களுக்கிடையில் அவர் பேசும் பொழுது அவர்களுடன் இரண்டறக் கலந்து நிற்பார். அவர் என்ன சொல்லுகிறார் என்பது அவர்களுக்குப் புரியும். எந்த விதமான மாறுதலை கைக்கொள்ளச் சொல்லுகின்றார் என்பதையும் அவர்கள் எளிதில் தெரிந்துக் கொள்வார்கள்.



திரு. கா. இராஜலிங்கம்

### வெள்ளை உடை வெள்ளை மனம்

கடைசி வரை மாறுமல் இருந்த, அவருடைய ஆடையின் அமைப்பு தனி ரகம். பலருக்கிடையில் அவர் செல்லும் பொழுது, ஆடையின் மூலம் அவரைப் பிரித்தறிய முடியும். அவை அவருடைய மனத்தின் தன்மையை எடுத்துக் காட்டுவன போன்று சுத்தமாக வெளுக்கப்பட்ட வெள்ளை ஆடையாகும்.

அவர் பல நாட்டு, பலரக மக்களுடன் பழகும் திறனுடையவராயிருந்தார். கவர்னர் ஜெனரலுடன் கரண்டி முள்ளினல் உண்பதும், பாராளுமன்றத்துள் பலப் பரீட்சைசெய்வதும், பாட்டாளிகள் மத்தியில் இலைச் சாதம் சாப்பிடுவதும்; அவர்களை இஷ்டப்படி ஆட்டிவந்த முதலாளிகளின் திருகுதாளங்களை அம்பலப்படுத்தி, தலைகுனிய வைப்பதும் இவருக்கு மிகச் சிறிய காரியம்.

அவர் அருந்திவந்த ஆகாரம் மிக சொற்பம். அதுவும் மரக்கறி உணவாகும்.

உலக விஷயங்களை சிறந்த ஞானத்துடன் விவாதிப்பதும், உரிமை பேசிய பாட்டாளி மகனுக்கு கொடுபட்ட பற்று துண்டு வேடிக்கையை அலசிப்பேசுவதும் இவருக்கு ஒன்று போல.

இந்தத் தீவிலும் பிற நாடுகளிலும் சிறந்த நண்பர்களை உடையவர். ஒரு நாளைய பழக்கமாயிருந்தாலும் சீக்கிரம் மறவாத ஞாபக சக்தியைக்கொண்டிருந்தார்.

### அவரது அணிகலன்கள்

ஏழைகள் துயரைப் பார்க்கச் சகியார். பிறர் கோரும் உதவி, தனது சக்திக்குச் சிறிது அப்பாற்பட்டிருந்தாலும், அதைச் செய்து தரத் தயங்கியதில்லை. எதிரியை நன்குணரச் செய்யும் சாந்தமான எழுத்து, சிந்திக்கச் செய்யும் ஆணித்தரமான வாதம், கோபமூட்டாத இனிய மொழி, உண்மைக் கருத்து, பயமற்ற மனம், அறியாமையைப் பொறுக்கும் துணிவு முதலியன இவருடைய அணிகலன்களாயிருந்தன.

இவரைப் பற்றி ஒரு பெரிய புத்தகம் எழுதினலொழிய, நான் இவரிடம் கண்ட தியாகம், உண்மை, உழைப்பு, பண்பு முதலியவைகளைத் தெளிவாகக் கூறுதல் முடியாது.

அவர் அமரராகிவிட்டார். 1939ல், இலங்கை இந்திய காங்கிரஸ் ஸ்தாபனத்தை அங்குரார்ப்பணம் செய்ததிலிருந்து, மரணம் வரை, மெய் நோய் பாராது, பசி நோக்காது, கண்ணுறங்

(13-ம் பக்கம் பார்க்க)

## தோட்டமெங்கும் கிளைகள் கண்டு தோழனே விரைந்து வா!

சத்தியசீலன்—

பத்து லட்சம் தோழர்வாழ
பண்புயர் 'மலையகம்'
எத்தகைச் சிறப்பு மின்றி
இன்னும் இங்கிருப்பதேன்?
நித்த முமபிறர்க் குழைத்து
நெஞ்சலுத்த தோழனே!
புத்தமைப் புடன் தரப்
புறப்படாய்! புறப்படாய்!

மஞ்சு துஞ்சு மாமலைப்
பிறந்தி மீந்த பூம்புனர்
இஞ்சி மஞ்சள் சொண்டிலங்கும்
இன்ன லத்த சூழலில்
'கஞ்சி எஞ்ணி அஞ்சி' நாங்கள்
காலம் முற்றும் மாள்வதா?
பஞ்சை வாழ்வு விழவே
புறப்படாய்! புறப்படாய்!

போரில் உன்னை ஏந்தி நல்ல
பேறடைந்து வாழுவார்,
சாரமற்ற வாதமோது
சாதனைத் திறமிலார்
ஈரமற்ற நெஞ்சை நம்பி
இன்னுமா இருந்தனை?
தீரமற்ற வீணர் நாணத்
தென்னவா! புறப்படாய்!

தேயிலைக் கொழுந் தெடுத்துத்
தென்னவர் தேய்வதும்
போய்'உழைப்பி லாக் கொழுப்பர்'
பொன் கொழிக்க வாழ்வதும்
சாயுமாறு வீறு கொண்டு
சால்பினுய் புறப்படாய்!
"தாயினுணை" என்று ரைத்துத்
தம்பிநீ புறப்படாய்!

"வாக்குனக்கு இல்லை" என்ற
வார்த்தை சொன்ன ஆட்சியார்
நாக்கரிந்து போட, இன்னும்
நண்பனே; சுணக்க மேன்
மாக்களாக வாழ்வதோ நாம்
மானமோ டுயர்ந்திட
நோக்குயர்ந்த பாதை 'அங்கு'
நோக்கினி புறப்படாய்!

'கூட்டரசு' கேட்டிலங்கு
கொடியுயர்த்த தலைவர்கள்
தீட்டுகின்ற திட்ட முந்தன்
'திறமை' கேட்டு நிற்கடா!
வாட்ட முற்ற தமிழன் இங்கு
வாழ்வுயர்ந்து வென்றிடத்
தோட்டமெங்கும் கிளைகள் கண்டு
தோழனே! விரைந்துவா!


காட்சிக்கு விருந்தளிக்கும் கவர்ச்சி மிகு நிறங்களில் கிடைப்பது!

லதா!!!



லதா அச்சடி கிரேஸ்ட் கொட்டன்!!

கவர்ச்சி தரும் நிரந்தர பல அழகிய நிறங்களிலும்;
புகழ்ச்சி பெறும் புதிய டிசைன்களிலும்;
உயர்ச்சி மிகு உறுதிப்பாட்டுடனும் உருவானது.

லதா பொப்லின்!!

ஆடவர் தம் சேட் முதலியவற்றிற்கேற்ற அற்புத நிறங்களில் நீண்ட நாட் சேவை புரியும்படி தயாரிக்கப்பட்டது.




எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:- குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி, கொழும்பு. சில்லறை விற்பனைப் பகுதி: 110 & 114, மெயின் வீதி, —Mylads/KL.66/63—


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சினை

## தீர்ப்பதற்கு வழிதேட அரசாங்கம் தயாரில்லை

## பின்வாங்கிய வீரருக்கு பெரிய வரவேற்பு?

**கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 11ம் திகதி செனட்சபையில், இலங்கையில் உள்ள சிறுபான்மைத் தமிழர்களின் வாழ்க்கைமுறைகளையும் வசதிகளையும் முன்னேற்றுவதற்கேற்ற சில கேள்விகளை செனட்டர் நல்லையா கேட்டார். அக்கேள்விகளுக்கு பிரதமரின் சார்பில் சுகாதார அமைச்சர் ஏ. பி. ஜயசூரியா பதிலளித்தார். இப்பதில்களிலிருந்து சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றத்தில் அரசாங்கம் எத்தகைய அக்கறை கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.**

**சிறுபான்மைத் தமிழர்களின் அவல நிலையினைப் போக்க ஓர் விசாரணை சபையை ஏற்படுத்தவேண்டுமென்று செனட்டர் ஆனந்த தசநாயக்கா ஓர் பிரேரணையை செனட் சபையில் கொண்டு வரப் போவதாக அறிவித்து விட்டுப் பின்வாங்கி விட்டார். பின்வாங்கியவருக்கே வரவேற்பு வைத்து மாலை மரியாதைகள் அளிப்பது எதற்காகவோ தெரியவில்லை.**

செனட்டர் நல்லையாவின் கேள்விகள் பின்வருமாறு:—

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் சிறுபான்மைத்தமிழர்கள் சமூக, அரசியல், பொருளாதார, கல்வித் துறைகளில் பின் தங்கியுள்ளனர் என்பதைப் பிரதமர் நன்கு அறியலாம். சிறுபான்மைத் தமிழர்களுடைய நலனை அனுசரித்து மக்கள் சபைக்கு ஒருவரை நியமிக்கவோ, அல்லது அடுத்து செனட்சபையில் ஏற்படும் காலி ஸ்தானத்தை ஒரு சிறுபான்மைத் தமிழருக்கு அளிக்கவோ, முயற்சிக்குமா அரசாங்கம்?

இந்தியாவில் சிறுபான்மையினருக்கு அரசாங்க உத்தியோகங்கள் வழங்குவதிலோ, அல்லது பொது உத்தியோகங்கள் கொடுப்பதிலோ விசேட சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதே போன்று கடைசி 10 வருடங்களுக்காவது இங்குள்ள சிறுபான்மைத் தமிழருக்கு விசேஷ சலுகைகள் வழங்க முடியுமா?

காணி வழங்குவதிலும், குடியேற்றங்களிலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிறுபான்மைத் தமிழருக்கு விசேட இடங்கள் ஒதுக்கி அவர்களை முன்னேற்ற அரசாங்கம் வசதி செய்யுமா? யாழ்ப்பாண நகர சபை எல்லைக்குள் வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் இவர்களுக்கு சில சலுகைகளும் உதவிகளும் செய்ய முடியுமா?

செனட்டர் நல்லையா அவர்களினல் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அரசாங்க சார்பில் பதிலளித்த சுகாதார மந்திரி, சிறுபான்மைத் தமிழர்களுக்கு கஷ்டமான சூழ்நிலையிருந்த போதும், அவர்களை எந்த ஒரு நிலையும், மக்களால் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றம் செல்வதைத் தடை செய்யவில்லை என்று கூறினர். பின் தங்கியவர்கள் என்பதற்காக அவர்களுக்கு விசேட சலுகைகள் செய்தால், அதை வேறு பல துறைகளுக்கு விஸ்தரிக்க வேண்டிவரும். அரசாங்கம் சாதி சமய வித்தியாசம் எதுவும் பாராட்டுவதில்லை. ஆகவே தனிப்பட்ட எந்த சாதிக்கோ சமூகத்துக்கோ விசேட சலுகை கிடையாது, என்று கூறிவிட்டார்.

செனட்டர் ஜயசூரியாவின் பதிலிலிருந்து அரசாங்கத்தின் கருத்து எத்தகையது என்பதை நன்கு அவதானிக்க முடிகிறது.

### கமிஷன் வேண்டும்

"இலங்கையின் ஹரிஜனங்கள்" என்று கூறப்படும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்குப் பொருளாதார, கல்வி, சமய, சமூக ரீதியில் கிடைக்கவேண்டிய சாதாரண உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்குள்ள தடைகளை நீக்கும் பொருட்டு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுவதற்காக, அதிகாரங்களுடன் கூடிய ஒரு கமிஷன் நியமிக்கப்பட வேண்டுமென்று செனட் சபை கருதுகிறது".

மேற்கண்ட பிரேரணையை செனட் சபையில் பிரேரிக்கப்போவதாக செனட்டர் ஆனந்த தசநாயக முன்னறிவித்தல் கொடுத்திருந்தார். ஆனல் பிரேரணை கொண்டு வரவேண்டிய நவம்பர் 8ம் திகதி, தனக்கு இப்பிரேரணை சம்பந்தமாகப் போதுமான தகவல்கள் சேகரிக்க வேண்டியிருப்பதால், ஒத்திவைக்கப்போவதாக செனட்டர் தசநாயக்க கூறியதும் சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

பிரேரணையில் கண்ட சில தப்பபிப்பிராயங்களையிட்டு செனட்டர் நல்லையா விளக்கம் கொடுத்தார். அவர் கூறிய விளக்கமாவது:-

### 'ஹரிஜனர்' யார்?

"கனம் அக்கிராசனரவர்களே! இச் சபையிலே இப்பொழுது பிரேரரிக்கப்பட்டுள்ள பிரேரணையில் கௌரவ செனட்டர் ஆனந்த தஸநாயக்கா அவர்கள் சிறுபான்மைத் தமிழர்களை ஹரிஜனர்கள் என வர்ணித்திருக்கின்றார். இவ்விதம் அழைப்பதற்கு அவருக்கு யார் உரிமையளித்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இலங்கையிலே அவர் குறிப்பிட்ட விதத்தில் ஹரிஜனர்கள் என்று சொல்லப்படும் ஒரு இன மக்கள் இருக்கிறார்களென்று எனக்குத் தெரியாது. சிறுபான்மைத் தமிழர்கள் எனப்படுவார்கள் இருக்கிறார்கள். ஆனல் 'நாம் ஹரிஜனர்' என்று சொல்லிக்கொள்ள இங்கு ஒருவருமே இல்லை என்பதைக் கௌரவ செனட்டர் அவர்கள் முதலில் அறிந்திருக்க வேண்டும். கௌரவ செனட்டர் அவர்கள் இந்நாட்டில் வாழும் ஓரின மக்களை இழிவுபடுத்தும் நோக்கத்துடன் தான் இப்படிச் செய்தாரா என்றும் எனக்குத் தெரியவில்லை.

இது ஒருபுறமிருக்க கனம் அக்கிராசனரவர்களே, கௌரவ செனட்டர் அவர்கள், சிறுபான்மைத் தமிழர்களது உரிமைக்காகத் தான் பாடுபடுவதாகவும், அவர்களுக்காகப் போராடத் தயாராக இருப்பதாகவும் சொன்னது மாத்திரமின்றி, மற்றவர்கள் அனைவரும் சிறுபான்மைத் தமிழர்களுக்காகப் பேசவே தயங்குகிறார்கள் என்றும் சொன்னராம். அப்படி அவர் கூறியது உண்மை தானு என்று அவரிடம் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

செனட்டர் தஸநாயக்கா: கனம் தலைவர் அவர்களே! நான் இதை ஆட்சேபிக்கிறேன். நான் இப் பிரேரணையைஒரேயடியாக வாபஸ் பெறப் போவதாக கௌரவ செனட்டர் கூறுகிறார். அது சரியல்ல.

செனட்டர் நடேசன்: கௌரவ செனட்டர் பிரேரணையை வாபஸ் பெறவில்லை. அவர் அதைப் பிரேரித்துள்ளார். ஒரு வேளை மொழி பெயர்ப்பில் பிழை ஏதாவது ஏற்பட்டிருக்கலாம். விவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

செனட்டர் நல்லையா: கனம் அக்கிராசனர்வர்களே, கௌரவ செனட்டர் ஆனந்த தஸநாயக்கா அவர்கள் தன்னைவிட வேறு எவரொருவராவது சிறுபான்மைத் தமிழர்களைப் பற்றி இச் சபையிலே பேச ஆயத்தமாக இல்லை-அவ்விதம் பேச அவர்களுக்கு மனத் துணிவும் தைரியமும் இல்லை என்று சொல்லியிருப்பது உண்மை தானு என்பதை அறிவதற்காகத்தான் நான் இவ்விதம் கேட்கின்றேன். நான் கேட்பது உண்மையா பொய்யா என்பதற்குப் பதில் சொல்லாமல் கௌரவ செனட்டர் இந்த இடத்தைவிட்டு ஓடிப் போய் விட்டார் போல் இருக்கிறது. அவர் உண்மையானவரென்றல் இங்கிருந்து எனக்குப் பதில் சொல்லியிருக்கவேண்டும்.

கனம் அக்கிராசனரவர்களே, நான் இச் சபையிலே சிறுபான்மைத் தமிழர்களைப் பற்றி பலமுறை பேசியிருக்கிறேன். ஒருசில மாதங்களுக்கு முன் சிறுபான்மைத் தமிழர்கள் சம்பந்தமாக பிரதம மந்திரி அவர்களைப் பல கேள்விகள் கேட்டேன்.

பிரதம மந்திரி அவர்களை, சிறுபான்மைத் தமிழர்களுக்கு விசேட உதவிகள் செய்ய வேண்டுமெனக்கேட்டேன். அதற்கு அவர் எந்த இன மக்களுக்காவது—எந்த சிறுபான்மை இனத்தவர்களுக்காவது — புறம்பான முறையிலே எந்த விதமான உதவியும் செய்யத் தயார் இல்லை என்று சொன்னர். இதனை கௌரவ செனட்டர் ஆனந்த தஸநாயக்கா அவர்களும் அறிவாரென நம்புகிறேன். பிரதமரது பதில் இந்தச் சபையிலே பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டது. நான் மாத்திரம் சிறுபான்மைத் தமிழர்களின் கஷ்டங்களைப் பற்றிக் கூறவில்லை. இலங்கையிலேயுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் பலவிதமான கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகிறர்கள் என இப்பொழுதுள்ள பிரதமமந்திரி அவர்களுக்கும், இவருக்கு முன்பிருந்த பிரதம மந்திரிகள் பலருக்கும் சிறுபான்மைத் தமிழர் ஸ்தாபனங்கள் பலவிதமான மகஜர்களை—மனுக்களை— அனுப்பியிருக்கின்றன. அவற்றின் மீது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன— எடுக்கப்பட இருக்கின்றன— என்று தெரியவில்லை. சிறுபான்மைத் தமிழர்களுக்கு கல்வி விஷயத்தில் மாத்திரம் சிறு உதவி செய்திருக்கிறர்களென்று நினைக்கிறேன். ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு மாணவர்களைச் சேர்க்கும் பொழுது சிறுபான்மைத்தமிழர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, வேறென்றும் கொடுக்கப்படவில்லை. இதனைக்கூட ஒரு சில அந்தரங்க நோக்கத்துடன் தான் அரசாங்கம் செய்திருக்கக் கூடும் என்று நான் நினைக்கின்றேன். ஏனெனில் தமிழ் மக்களிடையே அநேக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கும் இந்த நேரத்திலே, சிறுபான்மைத் தமிழர்களுக்கு இச் சலுகைகளை வழங்குவதால் அவர்களும் ஆசிரியர்களாகப் பயிற்சி முடிந்து வரும் பொழுது அவர்களுக்கு பாடசாலைகளில் இடம் கிடைக்காமல் போவதால் மற்றைய தமிழர்களோடு மோதல் ஏற்படக் கூடிய நிலைமை உருவாகக் கூடும் என்ற எண்ணத்துடன்தான் இதனைச் செய்திருக்கிறர்கள் என நினைக்கிறேன்.

### உண்மை அனுதாபம் இல்லை

உண்மையிலேயே சிறுபான்மைத் தமிழர்களுக்கு அரசாங்கம் உதவி செய்ய விரும்பினல் இச் சபையிலேயே செய்து காட்டியிருக்கலாம். இச்சபையிலே அவர்களில் ஒருவரை செனட்டராக நியமித்திருக்கலாம். இவ்விதம் செய்யாததிலிருந்தே சிறுபான்மைத் தமிழர்களிடம் அரசாங்கத்திற்கு ஒருவிதமான அனுதாபமும் இல்லை என்பது தெளிவாகின்றது. இப்பொழுது வடக்கு-கிழக்கு மாகாணங்களிலே அரசாங்கக் கட்சியினருக்கோ அமைச்சர்களுக்கோ எந்த விதமான வரவேற்பும் வழங்கப்படுவதில்லையாதலால், சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் அனுதாபம் உடையவர்களைப் போல நடப்பதன்மூலம் அவர்களைக் கவர்ந்த அவர்களிடமிருந்து உபசாரங்களைப் பெறுவதற்காக இச் சலுகைகளைக் கொடுக்கிறர்கள் என்று நினைக்கிறேன். உண்மையிலேயே உதவிசெய்யவேண்டுமென்ற விருப்பம் இருக்குமேயானல் அண்டை நாடாகிய இந்தியாவில் நடப்பதைப் பார்த்தாவது நடந்திருக்கலாம். அங்கே, அரசாங்கம் அவர்களது கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்குச் சர்வ கலாசாலைகளிலே, சட்டக் கல்லூரிகளிலே, மருத்துவக் கல்லூரிகளிலே, மற்றும் பல ஸ்தாபனங்களிலே ஒரு தொகையான இடங்களை ஒதுக்கியிருக்கிறது. அது மாத்திரமல்ல; பகிரங்க சேவைகளிலும் அவர்களுக்குக் குறிக்கப்பட்ட அளவு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இத் திட்டங்களை நடாத்த சென்னை அரசாங்கத்திலே ஒரு தனி இலாகாவே அமைக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுடைய— சிறுபான்மைத் தமிழர்களுடைய—நன்மைக்காக வருடாவருடம் ஒரு தொகை பணமும் சென்னை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டு வருகிறது. அங்கே அப்படியெல்லாம் நடக்கும் பொழுது இங்கே உதவி செய்கிறேம் என்று சொல்லி போலிக் கண்ணீர் வடிப்பவர்கள் என்ன உதவி செய்திருக்கிறர்களென்று கேட்க விரும்புகிறேன். தமிழினத்தைப் பிரித்து வைப்பதற்கு வேண்டுமானல் ஒருசில உதவிகளைச் செய்ய முன் வரக் கூடுமே தவிர, அந்தரங்க சுத்தியுடன், அனுதாப உணர்ச்சியுடன், மனிதத் தன்மையுடன் உதவி செய்ய ஒரு போதுமே இந்த அரசாங்கம் முன்வர மாட்டாது.

(13-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூண்டது இனக் கலவரம்-வதைபட்டனர் மக்கள்

## 2500 பேர் வள்ளங்களில் வெளியேறினர்

### அரங்கம் 7

விடுதலை வேட்கையை வளர்த்த 'யுனைட்டட் ஐரிஷ்மன்' என்ற பத்திரிகையை நடாத்திய ஆதர் கிரிபித், அயர் குடியரசு மன்றத்தின் இரகசிய நடவடிக்கைகளை ஆதரிக்க விரும்பாதவராய் சின் பீன் என்ற இயக்கமொன்றை 1905ம் ஆண்டில் ஆரம்பித்தார். சின் பீன் என்றால் நமக்கு நாமே—அதாவது நம் கையே நமக்குதவி என்று பொருள். அயர் மக்களின் விடுதலையை அயர் மக்களே உழைத்துப் பெறவேண்டும்; அயர் மக்களை ஆதரிக்க ஆயிரக்கணக்கில் அமெரிக்க மக்கள் இருந்தாலும் அயர் மக்களுக்கு அயர் மக்களே துணை என்ற உண்மையை உணர்த்துவதாக இருந்தது இவ்வியக்கம்.

## துரோகிகளுக்குப் பட்டம் பதவி, பணம், மது, மாது

ஆங்கில அரசருக்குக் கீழ்ப்படிந்த ஒரு சுதந்திர நாடாக அயர்நாடு திகழ வேண்டும் என்பது சின் பீனின் அடிப்படைக் கொள்கை. அதன் கொள்கைகள் சில:—

"அயர்நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்கிலாந்துப் பாராளுமன்றம் செல்வதை நிறுத்துதல். அதற்குப் பதிலாக 300 உறுப்பினர்களைக்கொண்ட சபையொன்றை அயர்நாட்டில் நிறுவுதல். நீதி மன்றங்களையும் வங்கிகளையும் இச்சபையே அமைத்தல். வெளிநாடுகளில் அயர் வாணிபத்தைப் பாதுகாப்பதற்காக இச் சபை தூதுவர்களை அனுப்புதல்" என்பன.

சின் பீனுடன் திருமதி மோட் கொண் தலைமையிலுள்ள 'அயர்நாட்டின் புதல்வியர்' என்ற இயக்கமும் இணைந்தது. அழகே உருவாக அமைந்தவர் மோட் கொண். நாட்டின் விடுதலைக்காகப் பெண்களின் பங்கை ஈடேற்ற வந்த எழிலரசி; பெண்ணினத்திற்கே பெருமை தேடித் தந்த மங்கையர் திலகம் அவர்.

சின் பீன் இயக்கம் அ. கு. மன்றத்தைப் போல் இரகசிய நிறுவனமாகவல்லாது வெளிப்படையாகவே இயங்

## துரோகிகள் வாழ்க்கை பயங்கரமாகியது

கியதால் இன்னும் பலர் அதில் சேர்ந்து இயக்கத்தை நாளுக்கு நாள்வலுப்படுத்தி வந்தனர்.

அயர் இனத்தின் விடுதலைக்குப் போராட இரகசியமாக அ. கு. மன்றம் தயார் செய்தது; வெளிப்படையாக சின் பீன் தயார் செய்தது. ஆனால் இவை இரண்டும் இளைஞர்களையும் மாணவர்களையும் தம்முடன் சேர்த்துக் கொள்ளவில்லை. அதனால், மாணவர்களும் இனத்தின் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றுவதற்காக இளைஞர் சாரணர் இயக்கத்தை திருமதி கொண்ஸ்ரன்ஸ் என்ற பெண்மணி டப்ளினில் 1909ல் ஆரம்பித்தார். இவ்வியக்கத்தில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் சேர்ந்தார்கள்.

சேர்ந்த இளைஞர்களுக்கு மலைச் சாரல்களில் முகாம் அமைத்து இராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப் பயிற்சியினால் இளைஞர்களின் உள்ளங்களில் ஒருவித புத்துணர்ச்சி ஏற்படத்தொடங்கியது. தாய் நாட்டின் சுதந்திரத்துக்காக நாம் எம் உயிரைத் தியாகம் செய்வோம் என்று இளைஞர்கள் வீரம் பேசத் தொடங்கினார்கள். இவ்வா

ருகத் தாய் நாட்டின்—அன்னிய ஆட்சியிலே தத்தளிக்கும் அயர்நாட்டின் விடுதலைக்காக மக்கள் ஆதரவுடன் அ. கு. மன்றம், சின் பீன், இளைஞர் சாரணர் இயக்கம் ஆகிய மூன்று இயக்கங்களும் தம்மை ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. இந்த ஆயத்தங்களைக் கண்ட பால

ரும் வளர்ந்தவரும் விருத்தாப்பியரும் இச் சந்ததியிலேயே விடுதலை அடைவோம் என்ற நம்பிக்கை கொண்டனர். அவர்கள் நம்பிக்கையும் வீண்போகவில்லை. நாட்டினதும் இனத்தினதும் விடுதலையில் நம்பிக்கை வைத்த ஞானிகள் பலர் இருந்ததினால் அல்லவா அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகளும்

இனங்களும் இன்று சுதந்திரமாகத் தனிக் கொடி பறக்க விட்டுத் தன்மானத்துடன் திகழ்வதை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்?

### துரோகிகள் பாடு

நாட்டில் மாபெரும் கொந்தளிப்பு ஏற்படப் போவதாக ஒற்றர்கள் ஆட்சியினருக்கு அறிவித்




தனர். நிலைமையைச் சமாளிப்பதற்கு அவர்கள் வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினர். தமக்கு ஆதரவாக இருந்த அயர் இனத் துரோகிகளுக்கு மரியாதைகள் செய்து, பட்டமும் பதவியும் பணமும் மதுவும் மாதுவும் அளித்தனர். ஆனால் சுதந்திர தாகம் கொண்ட மக்கள் முன்னிலையில் இவர்கள்

எம்மாத்திரம்? அயர் மக்கள் துரோகிகளைச் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கத் தொடங்கினார்கள். நாவிதர் தலைமுடி வெட்ட மறுத்தனர். சலவைத் தொழிலாளர் பணி செய்ய மறுத்தனர். தோட்டிகள் அவர்கள் வீட்டுப் புறத்தைச் சுத்தம் செய்ய முடியாதென்றனர். சுருக்கமாகக் கூறுவதானால் இனத் துரோகிகள் வாழ்க்கை பயங்கரமாகவே விளங்கியது!

மக்களின் விடுதலை உணர்ச்சி பெருவெள்ளம் போல் பெருக்கெடுத்தோடுவதைக் கண்ணுற்ற அரசாங்கம், அயர்நாட்டை இனிமேலும் தமது கைக்குள் வைத்திருக்க வேண்டுமாயின் அயர் மக்களுக்கு—உரிமை கோரி, ஒத்துழைக்க மறுத்து நிற்கும் அயர் மக்களுக்கு ஒரு சில சலுகைகளையாவது உட

## கோரியது உரிமை—கிடைத்தது சலுகை

னடியாகக் கொடுத்துத்தான் தீர வேண்டும் என்ற முடிவுக்கு வந்தது. அதன் பிரகாரம் 12-4-1912ல் மூன்றாவது தடவையாக இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் உள்நாட்டு ஆட்சி மசோதா சமர்ப்பிக்கப்பட்டது. அம் மசோதாவில் அடங்கியிருந்த அம்சங்கள்—

"இங்கிலாந்து மன்னரின் ஆணைக்குட்பட்ட, 164 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மக்கள் சபையையும் 40 உறுப்பினர்களைக் கொண்ட

ஒரு மூதவையையும் அவர் நாட்டில் நிறுவுதல். அமைச்சரவையின் தலைவராக இருக்க வேண்டியவர் மன்னரால் நியமிக்கப்படும் அயர் நாட்டின் இராணுவத் தளபதியே! இந்த இராணுவத் தளபதியால் பொறுக்கி எடுக்கப்படுபவர்களே மற்ற அமைச்சர்கள்!!

கடற்படை, தரைப்படை, வாணிபம், வெளிநாட்டுத் தொடர்பு, போக்குவரத்து, சுங்கம், கலால் முதலியவற்றிற்குரிய சட்டங்களை வகுக்க இப் பாராளுமன்றத்திற்கு உரிமை இல்லை. அத்துடன் இப் பாராளுமன்றம் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் திருத்தவோ மாற்றவோ தள்ளுபடி செய்

'கோமகன்'
'மாமல்லன்'

யவோ இங்கிலாந்தின் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு."

அயர் மக்கள் கோரி நின்றதோ உரிமை. ஆங்கிலேயர் கொடுக்க விரும்பியதோ சலுகைகள். அயர் இனம் கோரியதோ உண்ணும் அன்னம். ஆங்கில ஆட்சி கொடுக்க விரும்பியதோ உண்ண முடியாத தவிடு. வேறு விதமாகக் கூறுவதானால் இவ்வுத்தேசப் பாராளுமன்றம் தமது கைப் பொம்மையாக இருக்க வேண்டும் என்பதுதான் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் நோக்கம்!

### அரங்கம்—8

#### இனக் கலவரம்

உள்நாட்டு ஆட்சி மசோதா 9-5-1912ல் இரண்டாவது வாசிப்பின்போது 100 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. அம் மசோதா குழுப்பரிசீலனைக்கு விடப்பட்ட பொழுது, அள்ஸ்ரர் மாகாணத்தைச் சேர்ந்த நான்கு மாவட்டங்களை அம்மசோதாவின் பிரமாணங்களிலிருந்து நீக்க வேண்டும் என ஓர் உறுப்பினர் பிரேரித்தார். அள்ஸ்ரர் மாகாணம் ஆங்கில ஆட்சியினரின் குடியேற்றத் திட்டத்தினாலும் மதமாற்றத்தி

னாலும் கத்தோலிக்க பெரும்பான்மையை இழந்தது. இதைக் காரணமாகக் கொண்டு அயர் நாட்டின் ஒரு பகுதியை என்றென்றும் தமது அதிகாரத்தினுள் வைக்க ஆங்கில ஆட்சியினர் எண்ணினர். அடிமைத் தளையை அறுத்து அயர் நாட்டு மக்கள் விடுதலை அடையும்

காலத்திலும் அவர்களது நாட்டின் ஒரு பகுதியையாவது தாம் வைத்திருக்க வேண்டும் என அதிகார வர்க்கம் விரும்பியது.

மக்கள் மொழியுரிமையை இழக்கலாம்; கல்வியுரிமையை இழக்கலாம்; குடியுரிமையை இழக்கலாம்; வாக்குரிமையை இழக்கலாம்—பின்பு தொடர்ந்து

போராடி இவற்றைப் பெறலாம். ஆனால் தம் சொந்த நிலத்தை இழந்தால், எவ்வளவு உக்கிரமாகப் போராட்டம் நடாத்தினாலும் அதைத் திருப்பிப் பெறுவது, இலகுவான செயலல்ல. இந்த உண்மையை அறிந்தவர் ஆங்கில ஆட்சியினர்! அதனால் தான் இந்தப்பிரேரணைகொண்டு வரப்பட்டது!! ஆனால் பிரேரணையோ தோல்வியடைந்தது!!!

## நாடுகாக்க 4000 தொண்டர்கள்

இத்தோல்வி அயர் நாட்டின் வட பகுதியிலிருந்த புரட்டஸ்தாந்தரைக் கோபத்துக்குள்ளாக்கியது. அவர்கள் தம் மத்தியில் வாழ்ந்த கத்தோலிக்கத் தொழிலாளர்களை இம்சைக்குட்படுத்தினார்கள். பட்டப் பகலிலே கத்தோலிக்கருடைய வீடுகளுக்கு நெருப்பு

வைத்தார்கள். தெருவில் போன கத்தோலிக்கரை அடித்துச் சாக்கடையில் போட்டார்கள். முகத்தில் திராவகங்களை ஊற்றினார்கள். பாலர்களை வீதிகளில் தூக்கி எறிந்தார்கள். கத்தோலிக்கக் குருமாரை அடித்துத் துரத்தினார்கள். கத்தோலிக்கப் பெண்களின் கற்பைச் சூறையாடினார்கள்.

## தொண்டர் படையில் பேராசிரியர் டி வேலரா

இவற்றையெல்லாம் பார்த்தும் அரசாங்கம் வாளாவிருந்தது! வாளாவிருந்தது!! இக் கொடுமைகள் காரணமாக 2,500 மக்கள் தம் சொந்த நாட்டிலேயே அகதிகளாக, பெல்பஸ்றிலிருந்து வள்ளங்களில் புறப்பட்டார்கள். சந்ததி சந்ததியாக வாழ்ந்த நாட்டிலிருந்து, தாயார் தம்மைப் பாலூட்டித் தாலாட்டி வளர்த்த நாட்டிலிருந்து, அவர்கள் அன்னியர் போல் நடாத்தப் பட்டமையால், அழுத கண்களுடனும் பசியால் வாடிய முகத்துடனும் அழுக்கு உடைகளுடனும் வெளியேறினார்கள், என்றால் விடுதலைப்போராட்டத்திலே இன்னுமோர் அத்தியாயம் ஆரம்பிக்கின்றது என்று

தான் பொருள். அந்த அத்தியாயமும் வெகு சிக்கிரத்தில் ஆரம்பித்தது என்பது நாம் அறிந்த உண்மை.

மசோதா மூன்றாவது வாசிப்பில் பிரதிநிதிகள் சபையில் 110 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேறியது. ஆனால் இரண்டு வாரங்களுக்குப் பிறகு பிர

புக்கள் சபையில் நிராகரிக்கப்பட்டது! ஒரு சில அற்ப சலுகைகளை அயர் மக்களுக்கு அளிக்கும் இம்மசோதாவையே இங்கிலாந்தின் அறிவாளிகள் நிறைந்த பிரபுக்கள் சபையே நிராகரித்ததென்றால் ஆங்கில ஆட்சியினரின் ஆசை எம்மட்டு என்பது சொல்லியா தெரிய வேண்டும்? பிரபுக்கள் சபையில் நிராகரிக்கப்பட்டாலும் ஆங்கில அமைப்புத் திட்டத்தின்படி மசோதா, பிரதிநிதிகள் சபையில் இன்னும் இரண்டு கூட்டத் தொடர்களில் நிறைவேற்றப்பட்டால் அது சட்டமாகி விடும். இதன் பிரகாரம் 6-6-1913ல் இரண்டாவது கூட்டத் தொடரில் மசோதா நிறைவேற்றப்பட்டது. இன்னும் ஒரு

கூட்டத் தொடரில் அது நிறைவேற்றப்பட விருந்தது.

மூன்றாவது தடவையும் மசோதா நிறைவேற்றப்பட்டு விடும் என்று நம்பிய அள்ஸ்ரர் மாகாணத்தைச் சேர்ந்த புரட்டஸ்தாந்து வெறியர்கள்—தாம் வசிக்கும் பகுதிகள் இங்கிலாந்தோடு இணைய வேண்டும் என்று விரும்பிய இணையாளர்கள் (யூனியனிஸ்ட்) அம்மசோதா அமுல் நடாத்தப்படுவதை ஆயுத பலத்தால் எதிர்க்கத் தயார் செய்தார்கள். இவர்களுக்கு ஆங்கில இராணுவத்தினரின் ஆதரவும் அபரிதமாகக் கிடைத்தது!

### தொண்டர் படை

இந்நிலையை அவதானித்த அயர் நாட்டின் மறு பகுதிகளில் வாழும் கத்தோலிக்க மக்கள் தங்களைப் பாதுகாப்பதற்காக 25—11—1913ல் தொண்டர்களைத் திரட்டத் தொடங்கினார்கள். தொண்டர்களைத் திரட்டும் முதற் கூட்டம், தேசிய பல்கலைக் கழகத்தில் அயர் மொழிப் பேராசிரியரான ஐன் மக்னீல் தலைமையில் நடைபெற்றது. அயர் நாடு பெற்றெடுத்த சிறந்த பேரறிஞர் மக்னீல். அவர் தலைமை வகித்த இம்

முதல் கூட்டத்தில் தம் இனத்தின் பெருமையைக் காப்பதற்காக 4,000 பேர் தொண்டர்களாகச் சேர்ந்தார்கள். அவர்களுள் ஒருவர் கியூபாவைச் சேர்ந்த கரும்புத் தோட்டக்காரருக்கும் அயர் நாட்டைச் சேர்ந்த ஒரு பெண்மணிக்கும் பிறந்த மாணிக்கம். இரண்டு வயதிலேயே தந்தையை இழந்த தனயன். விளையாட்டு வீரராகத் திகழ்ந்த பராக்கிரமன். கணிதத்திலும் பௌதிகவியலிலும் வானவியலிலும் மேதையாக விளங்கிய வித்தகர். அவர் வேறு யாரும் அல்ல-மிக இளம் பிராயத்திலேயே கணிதப் பேராசிரியர் ஆகிய ஏமன் டி வேலரா! தொண்டர் படையில் சேரும்போது அவரது வயது முப்பது.

(வளரும்)

### அடுத்த வாரம்

- ★ தொண்டர்களுக்கு இராணுவப் பயிற்சி
- ★ மகளிர் உதவிப் படை
- ★ நடுக்கடலில் ஆயுதங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1963 மார்ச் மாதம் 3-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் ஆபத்து!

பல்முறை தோல்வி கண்டாலும் மீண்டும் மீண்டும் முயன்றால் வெற்றி பெறலாம் என்பார்கள். ஏழு பத்திரிகை மசோதாக்களைத் தயாரித்துத் தோல்வி கண்ட அரசாங்கம் எட்டாவது மசோதாவையும் தயாரித்துள்ளது.

சிறிமா அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பத்திரிகைகளின் மீதுதான் சீறிப் பாய்ந்தது. இரு பத்திரிகை ஸ்தாபனங்களைத் தேசிய மயமாக்கப்போவதாக முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலே வாக்குறுதி அளித்தது.

இந்த மசோதாவில் அந்தப் பத்திரிகை ஸ்தாபனங்களைப் பற்றிய பேச்சே கிடையாது.

சிம்மாசனப் பிரசங்கத்தில் மகாதேசாதிபதி அளித்த வாக்குறுதி என்னவாயிற்று? இந்த மசோதா அந்த வாக்குறுதிக்கு மாறானதல்லவா? சிம்மாசனப் பிரசங்கத்தின் வாக்குறுதியை நிறைவேற்றாவிடில் அதனைப் பொது மக்களுக்கு அதிகாரபூர்வமாகத் தெரிவிக்க வேண்டாமா?

இந்த மசோதாவின்படி ஒரு பத்திரிகைச் சபை நிறுவப்படும். இச் சபைக்கு பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கான சகல அதிகாரங்களும் வழங்கப்படும்.

பிரசுரிக்கப்படும் செய்திகள் எங்கே எப்படிக் கிடைத்தன என்ற தகவலை வெளியிடாதிருக்க பத்திரிகைகளுக்கு உரிமை உண்டு. இது எல்லா நாடுகளிலுமே பத்திரிகைக்குள்ள ஓர் அடிப்படைச் சுதந்திரம். இந்த உரிமைக்கும் இலங்கையில் இன்று ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எங்கே, எப்படி யாரிடமிருந்து செய்தி திரட்டப்பட்டது என்பதைக் கூறும்படி பத்திரிகைகளை வற்புறுத்த பத்திரிகைச் சபைக்கு அதிகாரம் உண்டாம். இதனால் பத்திரிகைகளின் அடிப்படை உரிமையே பாதிக்கப்படும். முக்கிய செய்திகள் எதையுமே பிரசுரிக்க முடியாத நிர்ப்பந்த நிலை ஏற்படும்.

அது மட்டுமா? உழைக்கும் பத்திரிகையாளரைப் பழி வாங்கும் படலமும் இதில் அடங்கியுள்ளது. அரசாங்கம் விரும்பாத ஒரு செய்தியை எழுதிய துணை ஆசிரியர் அல்லது நிருபரின் பெயரைக் கேட்டால் பத்திரிகை நிர்வாகிகள் பெயர்களைக் கொடுக்க வேண்டுமாம்.

அதன் பயங்கர விளைவு என்ன தெரியுமா? அவர்கள் இனிமேல் பத்திரிகைத் தொழிலே செய்ய முடியாதபடி அவர்களின் பெயர்கள் பதிவுப் புத்தகத்திலிருந்து அகற்றப்படும்.

ஆட்சியாளர்களுக்குத் தீவட்டிபிடிக்கும் பத்திரிகையாளர் மட்டுமே பத்திரிகைத் தொழில் செய்ய முடியும் என்பதுதான் இதன் கருத்து.

இந்த மசோதாவின் மிக மிகக் கொடிய அம்சம் அரசாங்கம் கொடுக்கும் செய்தியைப் பத்திரிகைகள் கட்டாயமாகப் பிரசுரிக்க வேண்டுமென்பதுதான்.

உதாரணமாக, தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை உதாசீனம் செய்து, தமிழரசுக் கட்சியைத் தாக்கி, தலைவர்களைத் தூற்றி ஒரு செய்தியை அரசாங்கம் "சுதந்திரனு"க்குக் கொடுத்தால், சுதந்திரன் அதனைக் கட்டாயமாகப்பிரசுரிக்க வேண்டும். மறுத்தால் சுதந்திரனைத் தடை செய்து விடும் அந்தப் பத்திரிகைச்சபை. இதர எதிர்க் கட்சிப் பத்திரிகைகளுக்கும் இதே கதிதான் ஏற்பட முடியும்.

சிற்சில செய்திகளை வெளியிடவேண்டாமென்று பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போட இச் சபைக்கு அதிகாரமுண்டு.

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பற்றி ஒரு வரிகூட எழுத வேண்டாமென சுதந்திரனுக்கும் உத்தரவிட முடியும்.

இப்பத்திரிகைச் சபையின் அமைப்பே ஜனநாயகத்துக்கு மாறானது. சபை உறுப்பினர்களில் பெரும்பாலோர் அரசாங்கத் தரப்பினராகவே இருப்பர். அதனை அரசாங்கத்தின் கைக் கருவியாக்குவதற்கே இந்த ஏற்பாடு. எனவே இச் சபையின் மூலம் பத்திரிகைகளையும் உழைப்பவர்களையும் ஆட்டிப்படைக்கும் அரசாங்கம்.

அரசாங்கத்தின் குறைபாடுகளையோ, சிறுபான்மையோரின் உரிமைகள் நசுக்கப்படுவதையோ சுட்டிக் காட்ட எந்தப் பத்திரிகைகளுக்கும் இடம் கிடைக்காது. பத்திரிகைகள் ஆட்சியாளரின் அடிவருடிகளாக மாற வேண்டும். இல்லையேல் அழிய வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தைத் தோற்றுவிக்கும் இந்த மசோதா.

ஜனநாயகத்தின் ஆணிவேரே பத்திரிகைச் சுதந்திரம். அச் சுதந்திரம் பறிக்கப்படுமாயின் ஜனநாயகமே அழிந்துவிடும். ஜனநாயகம் அழிந்தால் பாஸிஸம் தலைதூக்கும், சர்வாதிகார ஆட்சி தோன்றும்.

தற்போதைய ஆட்சியாளர் பத்திரிகைச் சுதந்திரத்தின் எதிரிகள். ஆட்சிக்கு வந்தது முதல் பத்திரிகைகளுக்குப் பன்முறை வாய்பூட்டு போட்டு விட்டனர்.

தமிழ் பேசும் மக்களின் போராட்டங்களை நசுக்க—ஏன், ஒரு சாதாரண பஸ் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்குகூட—பத்திரிகைச் சுதந்திரத்தில் கை வைத்தனர். அவசரகாலச் சட்டத்தின் துணை கொண்டு அடிக்கடி பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு போடுகின்றனர்.

கடைசியில் நிரந்தர வாய்ப்பூட்டுக்கு மசோதாவே வந்து விட்டது. இதனை முழு மூச்சுடன் எதிர்த்து முறியடிக்க வேண்டும். ஏழு மசோதாக்களுக்கு ஏற்பட்ட கதி எட்டாவது மசோதாவுக்கும் ஏற்படட்டும். இல்லையேல் இந் நாட்டில் எந்தப் பத்திரிகையும் சுதந்திரமாக இயங்க முடியாது.

மகாதேசாதிபதி

# சிங்கள ஏகாதிபத்தியச் சின்னமே!

## கறுப்புக் கொடிகாட்டி பகிஷ்கரிப்போம்

## தமிழரசுத் தீர்மானங்கள்

இலங்கையின் மகா தேசாதிபதியாகிய திரு. வில்லியம் கோபல்லாவ இராணியின் பிரதிநிதியாக இருந்த போதிலும், உண்மையில் தமிழ்பேசும்மக்களை அழிக்க முயலும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னமாகவே விளங்குகிறார். தமிழ் பேசும் மக்களின் உரிமை நலன்களை விழுங்கி ஏப்பமிட முயலும் சிங்கள அரசின் பிரதிநிதியாகிய மகா தேசாதிபதி, தமிழ்ப் பிரதேசங்களுக்கு வரும் பொழுது அவரது வருகையையும், மந்திரிமாரின் வருகையைப் பகிஷ்கரிப்பது போல், கறுப்புக்கொடி காட்டிப் பகிஷ்கரிப்போம்.

கட்சித் தலைவர் திரு. சி.மூ. இராசமாணிக்கம் தலைமையில் கடந்த வாரம் யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள் வருமாறு:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சி நேரடியாகப் பங்கு கொண்டு போட்டியிட வேண்டுமென பலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கட்சி அபேட்சகர்களை நிறுத்த அப்பகுதிக் கட்சிக் கிளைகள் விரும்பினால் அவ்விதம் செய்ய அனுமதி வழங்குவதுடன், அதற்கான நடவடிக்கைகளுக்கு அவர்களுக்குப் பூரண அதிகாரம் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மரவரி முறை சம்பந்தமான விஷயங்களை ஆராய்ந்து பாராளுமன்ற விசாரணைக் குழுவுக்கு விரிவான ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு, உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் அவர்களுக்கு உதவியாக ஏழு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இக் குழு மரவரி முறை சம்பந்தமான அலுவல்களை ஆராய்ந்து பாராளுமன்றக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதற்கு சில முடிவுகள் எடுக்கப்பட்டன. உள்ளூராட்சி மன்றங்கள் சுகாதார அடிப்படையிலேயே இன்று தேநீர்க் கடைகளுக்கு அனுமதி வழங்கிவருகின்றன. அந்த உபவிதிகளில் சில திருத்தங்கள் செய்து தேநீர், போசனசாலைகளில் சாதி வித்தியாசம் பாராட்டினால், அக் கடைகளுக்கு அனுமதி ரத்து செய்வதற்கு உரிய முறையில் மாற்றம் செய்யும்படி உள்ளூராட்சி மன்றங்களைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை வட்டாரங்கள் பிரிப்பது பற்றி மந்திரியின் ஒருதலைப்பட்சமான முடிவு ஜனநாயக தர்மத்திற்கு விரோதமானதாகும். மாநகரசபை அங்கத்தவர்களின் ஏகோபித்த முடிவை ஏற்று இருபத்தொரு வட்டாரங்களாகப் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்படி ஆட்சியாளரைக் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் அடுத்த செயற்குழுக் கூட்டம் மார்ச் மாதம் 16ம் 17ம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறும் என்று தெரிகிறது.


## நிழல்கள்!

"சுதந்திரன்" சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற செங்கை ஆழியனும்-செம்பியன் செல்வனும் கூட்டாக எழுதும் சுவை பொதிந்த தொடர் கதை விரைவில்

சுதந்திரனில் ஆரம்பமாகிறது!!


## சிங்களப் பரீட்சை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனியாகச் சந்தித்து, விஷயங்களை விளக்கிக் கூறி, அவர்களின் மனதை மாற்றியுள்ளனர்.

இத் தீவிர நடவடிக்கையின் காரணமாக இச்சங்கம் மென்மேலும் வலுவடைந்து வளர்ந்தோங்கி வருகிறது. தமிழ் ஊழியர்கள் மத்தியில் சங்கத்துக்குப் பேராதரவு திரண்டு வருகிறது.

### பொதுக் கூட்டம்

"சிங்களம் படிக்க வேண்டாம், சிங்களப் பரீட்சை எழுத வேண்டாம்" என்று தமிழரசுக்கட்சி தொடர்ச்சியாகச் செய்து வந்த பிரசாரம் பயனளிக்கத் தொடங்கியுள்ளது.

சிங்களப் பரீட்சை எழுத வேண்டாமென்று கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக் கூட்டத்தில் உருக்கமான வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

### தந்தையின் வேண்டுகோள்

பின்னர் தமிழரசுத் தந்தை பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள ஒவ்வொரு அரசாங்க ஊழியர்களுக்கும் தனித் தனியாகக் கடிதங்கள் அனுப்பி பரீட்சைஎழுத வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்.

தமிழரசுத் தந்தையின் நேரடி வேண்டுகோள் ஊழியர்களின் உள்ளத்திலே ஒரு புரட்சியைக் கிளறிவிட்டுள்ளது. அவரது வேண்டுகோளை நிராகரிக்க எந்தத் தமிழ் ஊழியனால்தான் முடியும்?

அவர்களில் சிலர் தமிழரசுத் தந்தையின் வீடு தேடி நேரடியாக வந்து, தாங்கள் இனி அந்தச் சிங்களப் பரீட்சை எழுதுவதில்லையென்று வாக்களித்துச் சென்றனர்.

சிங்களம் படிக்க மறுக்கும் இயக்கம் இவ்வாறு வெற்றிப் பாதையிலே பீடு நடைபோடுவதால் அரசாங்கம் இனிப் பணிந்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைதான் ஏற்படும். இப்பொழுதே அரசாங்கம் இணறத் தொடங்கிவிட்டது.

ஏப்ரலில் நடைபெறவிருக்கும் உரிமைப் போராட்டமும் எழுதுவினைஞர் சங்கம் அரசாங்கத்தின் மீது தொடுத்துள்ள வழக்கும் அரசாங்க ஊழியர்களின் இந்த மனமாற்றத்துக்கு மற்றும் இரு முக்கிய காரணங்களாகும்.

## சங்கானைப் பட்டினசபை கலைக்கப்படும்?

### கொம்யூனிஸ்டு ஊழல்களின் விளைவு

கொம்யூனிஸ்டு நிர்வாகத்தின் ஊழல்களின் விளைவாக ஒரு பட்டின சபையே கலைக்கப்படவிருக்கிறது.

1963-ம் வருடத்துக்குரிய வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்காததனாலும், ஊழியர்களுக்கு ஜனவரி மாதச் சம்பளம் கொடுபடாமையினாலும் சங்கானைப் பட்டின சபையைக் கலைத்து விடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்கள் வதியும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கொம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சிக்குட்பட்ட ஓரேயொரு பட்டின சபை சங்கானைப் பட்டின சபையாகும். இப்பட்டின சபைக்கு எதிராகப் பலதரப்பட்ட புகார்கள் எழுந்துள்ளன. பெரும்பான்மையினரின் எதிர்ப்பு இருந்தும், இப் பட்டின சபைத் தலைவர் தமது பதவியிலேயே ஒட்டிக் கொண்டிருக்கிறார்.

ஊழியர்கள் சிங்களம் படிக்க வசதியாகவிருக்கும் பொருட்டு சம்பளத்துடன் லீவு வழங்க வேண்டுமென்று தலத்தாபன அமைச்சு கேட்டுக் கொண்டிருந்தது. தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள நகர சபை, பட்டின சபை, கிராம சபைகள் [illegible] அமைச்சின் வேண்டுகோளை நிராகரித்திருந்தும், சங்கானைப் பட்டின சபை அதை வரவேற்று ஊழியர் சிங்களம் பயில வசதியும் செய்து கொடுத்தது.

இதையிட்டு 10-2-63 'சுதந்திரன்' மூன் பக்கத்தில் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது. இந்தப் பட்டின சபையின் சீர்கேடுகளையிட்டு இது கால வரை அரசாங்கம் எதுவித முடிவும் செய்யவில்லை. சுதந்திரன் செய்தியின் பின்னர் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

1963-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் படாமையினாலும், ஊழியர்களுக்கு ஜனவரி மாதச்சம்பளம் கொடுக்கப்படாமையினாலும், சங்கானைப் பட்டின சபையைக் கலைத்து விட தலதாபன சேவைக் கமிஷனர் உத்தரவிட்டிருக்கிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியுடன் எதிர்த்துப் போரிட்டால் உரிமை பெறுவது திண்ணம்

## சுயநலத்துக்காகச் சிங்களம் படிக்காதீர்

### யாழ். பொதுக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை

இந்நாட்டில் நமது இனம் அழிந்தொழிந்து போகாதிருக்க வேண்டுமானால், தமிழ் மொழிக்கு உரிமை கிடைக்கும் வரை சிங்களம் மட்டும் சட்டத்தை நாம் எதிர்த்தேயாகவேண்டும். இனத்திற்குச் செய்யும் இப்புனித பணியில் ஒவ்வொருவரும் தங்கள் பங்கை மகிழ்ச்சியோடு ஏற்றுப் பணியாற்ற வேண்டும். நாம் உரிமைகளுடன் வாழ வேண்டுமானால் உறுதியான தீர்மானத்துடன் செயலில் இறங்க வேண்டும். சிங்களத் திணிப்பை எதிர்க்கக் கூடிய நல்ல நிலையில் இன்று அரசாங்க ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பு நிச்சயம் பலன் தரும். ஆகவே சுய நலத்திற்காக இனத்தைக் காட்டிக்கொடுக்கும் முயற்சியில் யாரும் முனையக் கூடாது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்கள மொழித் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றக் கூடாதென்றும், சிங்களம் படிக்கக் கூடாதெனவும் கோரும் முகமாக யாழ். கோட்டை மைதானத்தில் சென்ற 24ம் திகதி தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உரை நிகழ்த்துகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: நமக்கேற்பட்டுள்ள பிரச்சினைகளில் சிங்களம் படிப்பது முக்கியமானதாகும். இது ஒரு மொழித் திணிப்புத் திட்டமாகும். நமது உரிமைகளையும், நமது இனத்தையும் அழிப்பதற்கு அரசாங்கம் வகுத்துள்ள சதியின் உருவமாகும். சிங்களம் படிக்க வேண்டுமென்று அரசாங்க ஊழியர்களை அரசாங்கம் வற்புறுத்திவருவது தீய எண்ணத்துடனேயேயன்றி தமிழ் பேசும் மக்களுக்கு நன்மை பயக்கவல்ல.

அரசாங்கத்தின் மிரட்டலுக்குப் பயந்து தமிழ் ஆசிரியர்கள் பலர் சிங்களம் படிக்க முற்பட்டனர். இந்த நிலையில் தமிழ் ஆசிரியர்களுக்கு சிங்களம் தேவையில்லை என்ற சுற்று நிருபம் வந்தது. இதனால் சிங்களம் படித்த ஆசிரியர்கள் தமது படிப்பை நிறுத்திக் கொண்டனர். தமிழ் ஆசிரியர்கள் சிங்களம் கற்கத் தொடங்கினால் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிக்கவேண்டிய சூழ்நிலையேற்படும். இதன் பின் தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் சிங்களம்படிக்க வேண்டிய சூழ்நிலையுமேற்படும். இந்நிலையைத் தடுக்க வேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடமையாகும்.

ஒரு இனம் உரிமையுடன் வாழ வேண்டுமாயின் அந்த இனத்திடம் உறுதியான தீர்மானமும் கஷ்டத்தைத் தாங்கும் சக்தியும் இருக்க வேண்டும்.

மலையகப் பிள்ளைகளின் போதனா மொழி சிங்களமே என்று கல்விக் கமிஷன் தீர்மானித்துள்ளது. இது மேலும் நிலைமையை மோசமாக்கியுள்ளது.

## கொழும்பில் படிக்கவில்லை யாழ்ப்பாணத்தில் படிப்பதா?

அடுத்து தலைவர், திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமை உரையில் கூறியதாவது: தமிழ் அரசாங்க ஊழியர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள். தமிழ் பேசும் மக்களுக்கும்—தமிழ் மொழிக்கும் ஈனமுண்டாகும் வகையில் தமிழ் அரசாங்க ஊழியர்கள் நடந்து வருவது, நமது இனத்திற்கு ஏற்பட்ட ஒரு பெரிய துர் அதிர்ஷ்டமாகும்.

தமது உத்தியோக உயர்வுக்காக சிங்களம் படிப்பதானால், அதைப் போன்ற வெட்கக்கேடான செயல் வேறொன்றுமில்லை. தமிழ் அரசாங்க ஊழியர்கள் ஒருமித்துச் சிங்களம் படிக்காமல் விட்டால் அவர்களைப் பதவியிலிருந்து விலக்க முடியாது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் செயலாற்ற முடியாதென்றால் அரசாங்க யந்திரமே இயங்காது. தமிழ் பேசும் மக்களை அரசாங்க சேவையிலிருந்து நீக்கினால் அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதை சிங்கள மக்களே உணர்கிறார்கள்.

கொழும்பிலுள்ள அரசாங்க ஊழியரில் 95 சதவிதமானோர் சிங்களம் படிக்க மாட்டோம் என்று உறுதியாக இருக்கையில் தமிழ்ப் பகுதிகளிலிருக்கும் அரசாங்க ஊழியர்கள் சிங்களப் பரீட்சை எடுக்க முற்படுவது மிகவும் கேவலமான, வெட்கப்பட வேண்டிய செயலாகும்.

## பதவி நீக்கம் நாட்டைப் பிளக்கும்

உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரம் உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:— சுயநலனுக்காக தமிழ்பேசும் மக்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்கக்கூடாது. இனத்தைக் காட்டிக் கொடுக்கும் செயலில் அரசாங்க ஊழியர்கள் ஈடுபடக் கூடாது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க மறுத்தால் அவர்களை அரசாங்கம் பதவியிலிருந்து நீக்க முனையலாம், இந்நிலை ஏற்படும் போது, ஆட்சிபீடமே இந்நாடு பிளவுபட அத்திவாரக் கல்லை நாட்ட முனைகிறதென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு இனத்தை அடிமைப்படுத்த வேண்டுமானால் அந்த இனத்தின் பொருளாரத்தை நசுக்க வேண்டும். இதனை இந்தியாவில் ஆங்கிலேயர் கையாண்டனர். அதுபோலவே சிங்கள அரசாங்கமும் எம் பொருளாதாரத்தை நசுக்க முயல்கிறது, என்று கூறினார்.

---

மக்கள் குரல்

## வானொலியில் உலக நாடுகள்

"உலகத்தை உற்று நோக்கு" என்னும் தலைப்பின் கீழ் இலங்கை வானொலி சிங்கள ஒலிபரப்பில் திரு. ஆனந்தா என்பவரால் நடத்தப்படும் நிகழ்ச்சி உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியதாயிருக்கிறது.

உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் அரசியல் அமைப்பு, கல்வித் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சி, சமுதாய நிலை, தொழிற் துறையில் அடைந்துள்ள முன்னேற்றம், விஞ்ஞான வளர்ச்சி, சிறுபான்மையோர் பெற்றுள்ள உரிமைகள் முதலிய முக்கிய விடயங்கள் அந்த தொடர் நிகழ்ச்சியில் அடங்கியுள்ளன. உயர்தரக் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மின்றி சர்வதேச விவகாரங்களில் சிரத்தையுள்ள அனைவருக்குமே இந்த நிகழ்ச்சி பயன்படுமென்பதில் ஐயமில்லை.

இத்தகைய தகவல்களைக் கொண்ட கட்டுரைகள் வானொலியில் அடிக்கடி தமிழிலும் ஒலிபரப்பப்படுமாயின், அவை பரீட்சைகளுக்குத் தோற்றும் தமிழ் பேசும் மாணவர்களுக்கு உதவியாக இருப்பதோடு, தமிழ் பேசும் மக்களின் உலக அறிவை வளர்க்கவும் பயன்படலாம். இவ்விடயத்தில் வானொலி தமிழ்ப் பகுதியினர் சிரத்தை காட்டுவார்களா?

—எஸ். ஆர். வடிவேலு,
கண்டி.

## அதிகாரி....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாரங்களில் வதந்தி அடிபடுகிறது.

விருந்திற்கு காரில் சென்றுகொண்டிருக்கையில் பிரதமருடன் கூடச் சென்ற ஒருவர், பேச்சின் கையெழுத்துப் பிரதியைக் காரில் வைத்துப் படித்துப் பார்த்து, அதில் பல திருத்தங்களைச் செய்து கொடுத்தாராம்.

பிரதமர் விருந்தில்பேசுகையில் அவர் எழுதியதை அப்படியேபடித்து விட்டாராம். பின்னர்தான் பிரதமருடன் சென்றிருந்தவர்களுக்குவிஷயம் புரிந்ததாம்.

வெளிநாடொன்றில் இராஜாங்க விருந்துபசாரத்தில் ஒரு நாட்டின் பிரதம மந்திரி பேசும்போது மிகக் கவனமாகப் பதங்களைப் பொறுக்கியெடுத்து உபயோகிக்க வேண்டியது மிகமிக அவசியமென்றும், கவனக் குறைவாக ஏதோ ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவதைப்போல சூடான பதங்களை உபயோகிப்பதால் அயல் நாட்டாரின் பகையைத் தேடிக்கொள்ளவேண்டிய தேற்படுமென்றும், நண்[illegible] நிலை ஏற்படுமென்றும் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது.

---

சிங்களம் மட்டும் சட்டமே

## நாட்டை பிளவுபடுத்துகிறது

### தமிழ் மொழி மசோதா ஒரு கண் துடைப்பு

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட முன்னரும் சிங்கள மக்கள் தம் அலுவல்கள் யாவற்றையும் சிங்களத்திலே நடத்தப் போதிய வாய்ப்பு இருந்தது. தமிழ் மக்களுக்கும் தம் அலுவல்களைத் தமிழிலே செய்யவும் வாய்ப்பிருந்தது. இன்று சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் பேசும் மக்களுக்கு இருந்த இந்த வாய்ப்பை ஒழித்துவிட்டது.

இவ்வாறு கடந்த 24-ம் திகதி யாழ் கோட்டை மைதானத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வெளிநாட்டினரை ஏமாற்றுவதற்கே தமிழ் மொழி விசேட ஏற்பாட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்திற்குரிய பிரமாணங்கள் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட பின் சில அமைச்சர்களின் சூழ்ச்சியினால் நிறைவேற்றப்படாமல் அவை தடுக்கப்பட்டன. இந்த ஒன்றே அரசாங்கம் மொழிக்கு எவ்வித உரிமையையும் அளிக்காதென்பதை நன்கு காட்டுகிறதன்றோ?

#### யார் பிரிவினைவாதிகள்?

சிங்களம் மட்டும் சட்டமே இந்நாட்டைப் பிரிவுப்படுத்தத் தொடங்கியுளது. ஓரினம், ஒரு மொழி, ஒரு மதம் எனும் காட்டுமிராண்டிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதற்கு முதலில் எடுக்கப்பட்ட நடவடிக்கையே சிங்களம் மட்டும் சட்டம். இச்சிங்களம் மட்டுஞ் சட்டம் இலங்கையின் இருபெரும் இனங்களாகிய சிங்களர் தமிழர் என்போரைப் பிரித்துப் பிளவுபடுத்தி விட்டதை மறைப்பதற்கே கூட்டாட்சி பிரிவை உண்டாக்குமென்ற பெரும் பொய்யை இன்று சிங்களத் தீவிரவாதிகள் தம் மக்களிடையே பரப்பி வருகின்றனர். தமிழரசுக்கட்சி பிரிவினையை உண்டாக்குகிறது என்று இவர்கள் தம் மனச்சாட்சிக்கும் உண்மைக்கும் மாறாகப் பிரசாரஞ் செய்கின்றனர். இலங்கையை இரு நாடாகப் பிரிப்பது தமிழர்களுடைய நோக்கமன்று. ஆனால் சிங்கள தீவிரவாதிகள் சனநாயக தத்துவங்களுக்கும், அரசியல் தர்மத்துக்கும், மனித பண்புக்கும் மாறாகத் தமிழினத்தின் மொழியையும், அவர்களுடைய பரம்பரை பிரதேசத்தையும் அழிப்பதற்கு எடுக்கும் நடவடிக்கைகளை விரைவில் கைவிடாவிடின் அவர்களே இந்நாட்டைப் பிரித்தவர்களாவார்கள் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

#### வீட்டுக்குள் புகமுன் விரட்டுக

தமிழர்களுடைய வீடுகளிலும், பாடசாலைகளிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும், அரசாங்க ஆட்சி நிலையங்களிலும் சிங்களம்புகுந்து நிலைத்துத் தமிழையும் தமிழினத்தையும் அழிக்காமல் செய்வதற்குச் சிங்களத்தைப் படிக்க மறுப்பதும்; எல்லா அலுவல்களையும் தமிழிலே செய்வதுமே நாம் எல்லோருஞ் செய்யவேண்டியன; 1956ம் ஆண்டுக்குமுன் அரசாங்க உத்தியோகத்தர்கள் சிங்களம் படிக்க மறுத்தால், அவர்களைத் தண்டிக்கவோ வேலையினின்று நீக்கவோ இந்த அரசாங்கத்துக்குச் சட்ட முறையான, தொழில் முறையான உரிமையில்லை. அரசாங்க உத்தியோகத்தர்கள் எல்லோரும் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைகளுக்கு தோற்றாமல் இருக்கும் ஒன்றே இவர்கள் தமிழுக்கும் தமிழினத்துக்கும் இன்று செய்யும் பெருந்தொண்டாகும். இதனால் இவர்கள் எவ்வித பெரு நட்டத்தையும் அடைய மாட்டார்கள். இதனால் இவர்கள் இழக்கும் சம்பள ஏற்றத்தை மீளப் பெறும் காலம் வரும். நீதியில் நம்பிக்கை கொண்டு அறம் வெல்லும் என்ற உறுதியுடன் அரசாங்க உத்தியோகத்தர்கள் யாவரும் மார்ச்சு மாதம் நடக்கும் சிங்களத் தேர்வுப் பரீட்சைகளுக்குத் தோற்றாதிருப்பார்களாக!

---

**அடுத்த இதழில்**

புதிய பகுதி ஆரம்பம்

**நமக்குள்ளே நடப்பவை**

எழுதுபவர்:
நான் தான்

---

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் கொடுத்தேன். இது என்ட பெடியனுக்குத் தெரிஞ்சுதென்றால் விட்டிருக்கவேமாட்டான்' என்று கூறினாராம்.

அங்குரார்ப்பண விழா இவ்வாறு 'கோலாகல'மாக நடைபெற்றிருந்ததை பிரசார ஏடு ஒன்று பிரமாதமாக வர்ணித்து எழுதியிருந்தது. அதன் பிரதிகளும் உரும்பராயில் பலருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனவாம். ஆனால் விலாசதாரர்களை தபால் வினியோகஸ்தர் கண்டுபிடிக்க எடுத்த முயற்சிகள் ஏதும் பலனளிக்கவில்லையாம்.

## அமெரிக்க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பப்படுவது எவரையும் சிந்திக்க வைப்பதாகும்,

அமெரிக்க உதவி நிறுத்தத்தின் பின் நிகழும் நிகழ்ச்சியாதலால் — ஒரு வேளை இனிமேல் கொஞ்சம் மேற்குப் பக்கம் சாய்ந்தால், நிறுத்தப்பட்ட உதவி திரும்பக் கிடைக்கும் என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதோ என்று பலர் பேசிக் கொள்கிறார்கள். வெளிப்படையாகக் கேட்க முடியாவிட்டாலும் இது போன்ற சைகைகள் காட்டியாவது அமெரிக்கர்களைச் சமாதானப் படுத்த முயலுகின்றார்கள் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நடுநிசி, நல்லூர் கந்த சுவாமி கோவிலில் மணி ஒன்று அடித்தது. ஊர் அடங்கிவிட்டது. தெருக்களில் நாய்கள் குலைக்கும் சப்தம் கேட்டபடியே இருந்தது. மாலை வெளியே சென்ற கணவன் இன்னும் வீடு திரும்பவில்லை. அவளுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் படுத்துப்புரண்டாள். அழுது அழுது கண்களில் நீர் வற்றி விட்டது. ஊரிலுள்ள மக்கள் எல்லோரையும் தன் கரங்களால் அணைத்த நித்திராதேவி அவளை அரவணைக்க மறந்துவிட்டாள் போலும். எழுந்து விளக்கைத் தூண்டிவிட்டு மேசை மேல் இருந்த புத்தகம் ஒன்றை எடுத்துப் புரட்டினாள். அதில் புலன் செல்லவில்லை. புத்தகத்தை மேசை மேல் வீசி எறிந்துவிட்டு மீண்டும் படுக்கையில் புரண்டாள்.

அவள் கணவன் தியாகு ஓர் குடிகாரன். அத்துடன் சூதாட்டப் பிரியன். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. நல்ல செல்வமான குடும்பம். அவனது திருவிளையாடல்கள் முழுவதையும் இருந்து பார்க்காமல் கண்ணை மூடிவிட்ட பாக்கியசாலிகள் அவனது பெற்றோர். "உத்தியோகம் புருஷ லட்சணம்" என்பதற்கிணங்க தியாகு யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகமொன்றில் வேலை பார்த்து வந்தான்.

அவனுக்கு மனைவியாகும் பேறு மாலதிக்குக் கிடைத்தது. ஏழைக் குடும்பத்தில் பிறந்து, சிறு வயதில் தாய் தந்தையரை இழந்து சகோதரன் ஆதரவில் வளர்ந்தவள், அன்பின் இருப்பிடம். பண்பின் சிகரம். கணவன் சொல்லே "வேத வாக்கு" என்ற எண்ணத்துடன் செயலாற்றும் அபாக்கியவதி.

ஞாயிற்றுக்கிழமை அன்றுதான் யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த களியாட்ட விழாவின் இறுதி நாள். களியாட்ட விழாவிற்கு ஆயிரம் ரூபாவுடன் சென்ற தியாகு மீண்டும் 9-00 மணியளவில் திரும்பி வந்தான். புறப்படும் போது மனிதனாகச் சென்ற தியாகு, வீட்டிற்குத் திரும்பி வரும் போது நிற்க முடியாமல் வெறியில் தள்ளாடியபடியே வந்தான்.

"எடியே! மாலதி!" என அழைத்தபடி உள்ளே நுழைந்தான். கலைந்து கிடந்த தலை மயிர், கசங்கிய சட்டை, சிவந்த விழிகள், இந்த நிலையில் அங்கிருந்த நாற்காலியில் 'தொப்'என இருந்தான். பதறியபடி மாலதி என்ன செய்வதென்றறியாது அங்கு நின்று தவித்தாள்.

தியாகு குடிகாரனே தவிர மற்றவர்களைப் போலக் குடித்துவிட்டு மனைவியைத் துன்புறுத்துபவன் அல்ல, காலையில் எழுந்து சாப்பிடுவான். பின் கந்தோர். பின் மத்தியானச் சாப்பாடு. அதன் பின் இரவு நிறை வெறியுடன் நிதானமிழந்து வீடு திரும்புவான். சில வேளை இரவு சாப்பிடுவான். சில சமயங்களில் சாப்பிடாமலே, ஏன் உடுப்பு மாற்ருமலேயே, அப்படியே படுக்கையில் படுத்துவிடுவான்.

மாலதி அவனுக்குச் சமைத்துப் போடும் ஓர் இயந்திரமாகவே அங்கிருந்தாள். சமூகத்திற்கு அவள் தியாகுவிற்கு மனைவியே தவிர தியாகுவைப் பொறுத்தமட்டில் அவள் ஓர் சமையல்காரி போலவே வாழ்ந்து வந்தாள். உண்ண உணவு, உடுக்க உடை, அணிய நகை, எல்லாம் இருக்கின்றன. ஆனால் கணவனது அன்பு கடுகளவும் மாலதிக்குக் கிடைக்கவில்லையே! மாலதி ஆசையுடன் நெருங்கும்போதெல்லாம் அவன் விலத்தியே சென்று வந்தான். உள்ளத்தில் ஏதோ ஒன்றை வைத்துக் கொண்டுதான் அப்படி அலட்சியப் படுத்துகிறான் தியாகு என்பதை ஊகித்தாலும் நிச்சயப் படுத்த முடியவில்லை அவளால்.

ஒரு பெண் தன் மனதிலுள்ள ஆசைகளை—எண்ணங்களை வெளிப்படுத்திக் கூற முடியுமா? ஓரளவு செய்கையினல் காட்டலாம். கணவன் குறிப்பறிந்து நடக்காவிட்டால் சிவனேயென்று மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதுதானே! ஆண்களானல் மனதில் இருப்பதை அப்படியே பச்சையாகக் கூறிவிடுவார்கள்—பெண்கள்?

கணவன் எப்படி நடந்தாலும் சினம் கொள்ளாமல் பொறுமையாகச் செயலாற்றி வந்தாள் மாலதி.

## யாழ் வாணன்

இன்று திருந்தாவிட்டாலும் என்ருவது ஒரு நாள் தன் கணவன் திருந்தியே தீருவான் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது.



"என்னடி அப்படி உற்றுப் பார்க்கிருய்? இப்ப எனக்கு காசு வேணும். இப்போ போனல்தான் தோற்ற காசை எடுக்கலாம். இவ்வளவு நாளும் தோற்ற காசு முழுவதும் எடுத்துக் கொண்டு வர வேணுமடி!!" என்று பிதற்றினன் அவன்.

"கடந்த இரண்டு வருடங்களாகத்தானே இப்படிச் சொல்லிச் சொல்லித் தொலைக்கிறீர்கள்! எல்லாமே போய்விட்டதே. இப்போது இந்த வீடும் நகைகளும் தானே மிஞ்சி இருக்கின்றன."

"ஏன் உன் அப்பன் வீட்டுக் காசா? உன்னுடைய சீதனப் பணத்தை நான் செலவழிக்கவில்லை. என்னை எதிர்த்துப்பேசாதே. நேரம் போச்சு. பெட்டிக்குள் ஒரு ஐநூறு ரூபாய் இருக்கு. கொண்டுவா!!"

பேதை மாலதி இதற்கு மேல் என்ன செய்ய முடியும்? பணத்தைக் கொண்டு வந்து கொடுத்து விட்டுச் "சாப்பிட்டு விட்டுப் போங்கள்" என்ருள்.

"எனக்குச் சாப்பாடு இப்ப வேண்டாம், நீ போய்ப் படுத்துக் கொள். நான் போட்டுவாறன்" எனக் கூறியபடி அவளது கன்னத்தில் செல்லமாகப் போதையில் தட்டிவிட்டுத் தள்ளாடியபடியே வெளியேறினன்.

* * *

கோவிலில் இரண்டு மணி அடித்தது. விளக்கை அணைத்துவிட்டுப் படுத்தாள் மாலதி.

பொழுது விடிந்தது; அவளது வாழ்வு அல்ல.

"டக், டக், டக்," கதவு தட்டப்படும் சத்தம், மாலதி எழுந்து கதவைத் திறந்தாள்.

"இதுதானே தியாகராசன் வீடு?"

"ஆம்"

"நீங்கள் அவரது மனைவியா?"

"ஆம்".

"அவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்திருக்கின்றேன். மண்டையில் நல்ல காயம். நினைவில்லாமல் தெருவில் கிடந்தார்".

"ஆ!......அத்தான்".

மாலதி ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினள். அங்கு 3ம் வாட்டில் திரைச் சேலையால் மறைக்கப்பட்ட கட்டில் ஒன்றில் மூர்ச்சையுற்ற நிலையில் கிடத்தப்பட்டிருந்தான் தியாகு. தலையில் பெரிய கட்டுப் போடப்பட்டிருந்தது.

அங்கிருந்த தாதியைப் பார்த்து, "சகோதரி! அடி பலமானதா? உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லையே!" எனப்பதறியபடி கேட்டாள், மாலதி.

"பயப்பட வேண்டாம். அடி பலமானதுதான், இரத்தம் அதிகமாக வெளியேறி விட்டது. புது இரத்தம் ஏற்றியிருக்கின்ருேம். இன்னும் சிறிது நேரத்தில் மயக்கம் தெளியலாம்" என்ருள் தாதி.

மாலையிற் தியாகு மூடிய விழிகளைத்திறந்தான். மாலதி நீண்ட பெருமூச்சுவிட்டாள்.

"அத்தான்! என்னைப் பாருங்கள்".

"மாலதி!"

மேலே பேச முடியவில்லை. இருவரும் உணர்ச்சிவசப் பட்டனர். கண்கள் நீரைச் சொரிந்தபடியே இருந்தன.

"அத்தான்! என்ன நடந்தது?"

"மாலதி! பணத்துடன் களியாட்ட விழாவிற்குச் சென்றேன். 'கசினே' என்ற விளையாட்டில் ஈடுபட்டேன். மூவாயிரத்தைந்நூறு ரூபாய் வெற்றியடைந்தேன். அங்குள்ள மதுபானக் கடையில் மது அருந்தினேன். அங்கிருந்த நான்கு பேர் திடீர் நண்பர்களாயினர். நான் புறப்படும்போது, அவர்களும் தாங்களும் வீடு செல்வதாகக் கூறினர். ஒரு 'டாக்சி' பிடித்துக் கொண்டு வந்தோம். வழியில் ஒரு வீட்டில் சாராயம் அருந்தினோம். அங்கு ஏதோ சண்டைபிடித்ததாக ஞாபகம். அதன் பின் எனக்கொன்றும் தெரியாது. இப்போ நான் இங்கு இருக்கிறேன்".

"உங்களை அடித்துப் பணத்தையெல்லாம் அபகரித்துக் கொண்டு அனுதையைப் போலத் தெருவில் போட்டு விட்டுப் போய்விட்டார்கள், அத்தான். நான் செய்த பாக்கியம்தான் என் மாங்கல்யம் தப்பியது" என்ருள் மாலதி.

"உன்னைக் கொடுமைப் படுத்தியதற்குக்கடவுள் தண்டித்துவிட்டார். யாரோ ஒரு கொடியவள் என்னை வஞ்சித்து விட்டாள் என்பதற்காக உன்னைப் பழி வாங்கி வந்தேன். இன்று என் அகக் கண்கள் திறந்துகொண்டன. நான் ஏன் குடிகாரனக,சூதாடியாக மாறினேன்? எல்லாவற்றிற்கும் காரணம் ஒரு பெண். அக்கதையைச் சொன்னல்தான் என் மனப் பாரம் இறங்கும். அவளை மறப்பதற்காகவே நான் இப்படி மாறினேன்".

* * *

"அப்போது நான் கல்லூரி மாணவன். "கல்லூரிக் காதல் கல்லூரி வாசல்வரை" என்பார்கள், என்னைப் பொறுத்த மட்டில் அது சரியாகி விட்டது. என் கல்லூரி வாழ்க்கையிலும் ஒருத்தி குறுக்கிட்டாள். அவள் பெயர் தவமணி. அழகி. நாகபாம்பும் பார்ப்பதற்கு அழகாகத் தானே இருக்கிறது? அவளது கடைக்கண் வீச்சிலே என் மனதைப் பறிகொடுத்தேன். சுருக்கமாகக் கூறப் போனல் நாம் காதலரானேம். அவளது வீடு கல்லூரிக்குப் போகும் வழியிலேயே இருந்தது. அவளது தாய் கொஞ்சம் படித்தவர். அதனல் நாம் நெருங்கிப் பழகுவதைக் கண்டிக்கவில்லை. நாம் கல்லூரி செல்லும்போதும், வரும்போதும் ஒன்ருகவே செல்வோம்; வருவோம்.

அன்று ஒரு நாள். அவள் தாய் எங்கோ சாவீட்டிற்குச் சென்றிருந்தாள். என் காதலி மாத்திரம்தான் வீட்டில் இருந்தாள். கல்லூரிக்கு அன்று நாம் இருவரும் செல்லவில்லை. நாங்கள் சிட்டுக் குருவிகளானேம். சந்தர்ப்பம் எமது கட்டுக்கோப்பை மீறியது. இளம் பருவம். இருவரும் ஒருவரானேம்.

நாட்கள் மாதங்களாகி, ஒரு வருடம் போய்விட்டது. எங்கள் படிப்பும் முடிந்து விட்டது. நான் அவளை மனமாரக்காதலித்தேன். ஆனல் அவள் என்னைக் காதலித்தது பொழுதுபோக்கிற்காக என்பது பின் தான் என்னல் புரிந்து கொள்ள முடிந்தது.

அவள் தாயுடன் விடுமுறையைக் கழிப்பதற்காகக் கொழும்பு சென்ருள். அதன் பலன் அவள் திருமதி பத்மநாதன் ஆனுள். நான் சிறகொடிந்த பறவையானேன். அவளது கொழும்புப் பயணம் என் வாழ்க்கையில் ஓர் திருப்பத்தை உண்டாக்கிவிட்டது. அவள் அங்கும் காதலித்துத்தான் டாக்டர் பத்மநாதனைத் திருமணம் செய்து கொண்டாளாம்! அவளைப் போன்ற காமாந்தகாரிகளுக்குக் கொழும்பு சொர்க்க பூமியல்லவா?

(15-ம் பக்கம் பார்க்க)

ரிஷி லேகியம்
ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்
ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்
மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர வைக கால் அச்தி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பித்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண், கை கால், தீரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.
விபரமடங்கிய கேட்லாக் இனும்
15 நாள் டின் ரூபா 3-00
30 நாள் டின் ரூபா 5-75
தபால் செலவு /-95
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவி கொடுக்கும்வரை நல்லவர்கள் நிறுத்தியவுடன் ஏகாதிபத்தியவாதிகளா?

## உறவை முறிக்க முயலும் சக்திகளுக்கு இடமளியாதீர்!

## ஆட்சியாளருக்கு தமிழரசுத் தந்தையின் அறிவுரை

**அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு இதுவரை அளித்து வந்த உதவி நிதியை நிறுத்தி வைத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை, நாம் ஆத்திரப்படவோ, பரபரப்படையவோ வேண்டியுள்ளதொன்றல்ல.**

**சிறிய நாடாகிய இலங்கையிடம் பெரிய நாடாகிய அமெரிக்கா இன்னும் தாராள மனப்பான்மையுடன் நடந்திருக்கலாம். ஆனல், அப்படி அவர்கள் நடந்து கொள்ளவில்லையென்பதற்காக, இதுவரை அவர்கள் தந்த உதவியை ஏற்று வந்த நாம், அவர்களைத் தூற்றுவது அழகல்ல. சிறிய நாடாகிலும், நாம் பெரிய மக்கள் என்பதை அமெரிக்காவுக்கும், உலகுக்கும் நாம் எடுத்துக் காட்ட வேண்டும்.**

இவ்வாறு தமிழரசுத் தந்தையும், காங்கேசன் துறைத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெள்ளிக்கிழமை 22-2-63 அன்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் பங்குபற்றிப் பேசும் போது குறிப்பிட்டார்.



அவர் தொடர்ந்து பேசியதாவது:- அமெரிக்கா இலங்கையின் சுதந்திரத்தில் கைவைக்கப்பார்க்கிறதென்றும், நாங்கள் எமது சட்டங்களினுலேயே கட்டுப்பட்டுள்ளோமேயன்றி, அமெரிக்கரது சட்டங்களினுலல்லவென்றும் ஒருசிலர் கூறி வருகிறுர்கள். நாம் எமது சட்டங்களினுலேயே கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பது முற்றிலும் சரியே. இதை யாரும் மறுத்ததாக எனக்குத் தெரியவில்லை — அமெரிக்கா கூட மறுக்கவில்லை.

நமது நாட்டு எண்ணைக் கூட்டுறவு ஸ்தாபன சட்டத்தின் கீழ், இந்நாட்டில் வர்த்தகம் நடாத்தி வரும் எண்ணைக்கொம்பனிகளின் உடைமைகளை நாம் எடுத்துக் கொள்வதற்கு எமக்கு உரிமை இருக்கின்றது. அமெரிக்கா இந்த உரிமையைப் பற்றி வியாச்சியம் கொள்ளவில்லை.

எமது நாடு மதிக்கும் சர்வதேசச் சட்டத்தின் கீழ், ஒருவருடைய பொருளை அரசாங்கம் கையேற்கும் பொழுது, அவருடைய பொருளுக்கு ஈடாக, நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இந்தச் சர்வதேச நியதியை ஒதுக்கித் தள்ளியுள்ள நாடுகள் சிலவும் உள. ஆனல், நமது நாடு அத்தகைய நாடு அல்ல. அதுசட்டத்தினுல் ஆளப்படுவது; சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்புத் தருவது. அரசாங்கம் எவருடைய பொருளையோ, உடைமையையோ ஏற்றுக்கொண்டால், அவருக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கோரும் எமது சட்டத்தையும், சர்வதேச சட்டத்தையும் மதிக்கும் அரசியற் கட்சிகளைத்தான் இந்நாட்டு மக்கள் இதுவரை ஆட்சி பீடத்தில் அமர்த்தியுள்ளனர்.

முதலாவதாக ஐக்கிய தேசியக் கட்சியையும், அதன் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியையும் இந்நாட்டின் ஆட்சிபீடத்தில் மக்கள் அமர்த்தியுள்ளனர். இவ்விரு கட்சிகளும், அரசாங்கம் கையேற்கும் தனிநபரின் சொத்துக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்பதைத் தமது கொள்கைத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்றுள்ளனர். தனிநபரின் பொருளை அரசாங்கம் கையேற்கும் பொழுது நஷ்ட ஈடு வழங்கக் கூடாது என்ற கொள்கைத் திட்டமுடைய கட்சிகளை, இந்நாட்டு மக்கள் தொடர்ந்து ஏற்கமறுத்து வந்துள்ளனர்.

ஒருவருடைய பொருளை அரசாங்கம் கையேற்கும் பொழுது, அதற்கு வேண்டிய நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்பதில் நமது நாட்டுச் சட்டத்திற்கும் சர்வதேசிய சட்டத்திற்குமிடையே முரண்பாடு கிடையாது. இந் நிலையிலிருந்து அமெரிக்காவும் வேறுபடவில்லை.

ஆனல் அமெரிக்கா கூறிக் கொள்வது என்னவெனில், 'உங்கள் அதிகாரத்திற்குட்பட்ட சொத்துக்களுக்கு உங்கள் விருப்பப்படி எதுவும் செய்யலாம், அதே போல் எங்கள் அதிகாரத்திற்குட்பட்டவற்றை, எங்கள் விருப்பப்படியே நாம் உபயோகிப்போம்' என்பதே.

அதாவது, இலங்கை அரசாங்கம் எடுத்துக் கொண்ட, அமெரிக்கருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு நஷ்டஈடு வழங்கும் வரை, அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய உதவியைக் கொடுக்கப் போவதில்லையென்றுகும். நிச்சயமாக ஒரு நாடு தன் சொந்தப் பொருளையோ, பணத்தையோ பிறிதொரு நாட்டிற்குக் கொடுப்பதை நிர்ணயிப்பதில் அதற்குச் சுதந்திரம் இருக்க வேண்டாமா? இப்படிப்பட்ட ஒரு உரிமையை ஒரு நாட்டிற்கு மறுக்க சர்வதேச சட்டத்திலோ அல்லது வழக்கிலோ ஒன்றுமே கிடையாது. ஆகவே அமெரிக்காவின் செயலை இட்டு ஆத்திரப்படவோ, அன்றிப் பரபரப்படையவோ எமக்கு உரிமையில்லை.

அமெரிக்கா ஒரு பெரிய நாடு. அது எமது நாட்டைப் பொறுத்த வரையில், இன்னும் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டிருக்கலாம்; ஆனல் நடந்து கொள்ளவில்லை. நாம் சிறிய நாடாகினும், அமெரிக்காவுக்கும், உலகுக்கும் எமது பெருந்தன்மையை எடுத்துக் காட்ட வேண்டும்; எனவே அமெரிக்காவைத் தூற்றுவதை நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த நிலைமையில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதுதான் இன்று நமக்கு முன் உள்ள பிரச்சினை. நாம் அமெரிக்காவைத் தூற்ற முற்படுவதா? அவர்களை ஏகாதிபத்திய வாதிகள் என்றும் பேராசை பிடித்த மேற்கத்திவாதிகள் என்றும் கூறுவதுதான் சரியான வழியா? அவர்கள் நமக்கு உதவி கொடுக்கும் பொழுது நல்லவர்களாகவே தென்பட்டார்கள். உதவியை நிறுத்திய பின்னர்தான் ஏகாதிபத்தியவாதிகள் என்று கண்டு பிடித்தோமா? இதை விடுத்து, நாங்கள் பண்பு உள்ளவர்கள் என்று காட்டிக் கொள்வதுதான் சரியான முறை.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமையிலிருந்து, ஒரே ஒரு பாடத்தைத்தான் நாம் கற்றுக் கொள்ளலாம். அதாவது வரவு-செலவு திட்டத்தை சமன் செய்ய, வெளிநாட்டு உதவியை நம்பியிருக்கக்கூடாது. எமது பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க, நாம் நம்மில் தான் தங்கியிருக்க வேண்டும். தன்னிறைவு காண, [illegible] களையும் மனித சக்தியையும் நாம் பெற்றுள்ளோம். எமக்குத் தேவையானவை-விவேகம் நிறைந்த திட்டமும், கடுமையான உழைப்புமே.

இவ்விடத்தில் குறிப்பிடக்கூடியது ஒன்றுள்ளது. அதாவது: இன்று ஏற்பட்டிருக்கும் இச் சிறு பிணக்கைச் சாட்டாகக் கொண்டு, நமது நாட்டிற்கும் அமெரிக்கா முதலிய மற்றைய ஜனநாயக நாடுகளுக்கும் இடையே உள்ள நல்லுறவை முறிக்க இந்நாட்டிலுள்ள சில சக்திகள் முயல்வதை நாம் அறிவோம். ஆனல், நானே அல்லது எனது கட்சியோ இத்தகைய புத்திமதியை நாட்டுக்கு நல்க விருப்பமில்லை. குறைகள் சில உடையோராயினும், இச்சிறு பிணக்கை முன் வைத்து அமெரிக்க மக்களுடன் நாம் வேறுபடக் கூடாது. அதை விடுத்து சிறிய நாட்டினராயினும், நாம் பண்பில் பெரியவர்கள் என்பதை அமெரிக்காவிற்கும் உலகிற்கும் எடுத்துக் காட்டும் முகமாக நல்வழியில் செல்ல முயல்வோமாக.

## பருத்தித்துறை தமிழரசுக்கட்சிக் கிளை

இ. த. அ. கட்சியின் பருத்தித்துறைக் கிளைக் கூட்டம் 11—2—63 திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் தும்பளையில் திரு. க. வீரசிங்கம் ஆசிரியர் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்தில் திரு. கே. துரைரத்தினம் எம். பி. அவர்கள், கிளைகள் இருக்க வேண்டிய அவசியம் பற்றியும், கிளைகள் இயங்க வேண்டிய முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார். அடுத்த ஆண்டிற்கான செயற்குழுவும் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

தலைவர்: திரு. த. இராமநாதபிள்ளை, செயலாளர்: திரு. வ. சதாசிவம், உப-செயலாளர்: திரு. சி. நாகலிங்கம், தனதிகாரி: திரு. க. சதாசிவம், உபதலைவர்: திரு. ச. வீரசிங்கம்.

செயற்குழு உறுப்பினர்கள்: முத்தையா ஜோன், அ. அண்ணுமலை, வே. சிவரெட்னம், எச் ஜீ. அருளம்பலம் வ. சின்னத்துரை, சி. முருகேசு, வ. செல்லத்துரை, வ. நல்லையா. இந்தக் கிளை பருத்தித்துறை, புலோலி கிழக்கு, தும்பளை, கைக்கவளம் ஆகிய இடங்களை உள்ளடக்கி 'பருத்தித்துறைக்கிளை' என அழைக்கப்படும்.

### மருதங்கேணிக் கிளை

மருதங்கேணியில் தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டம் செம்பியன்பற்று ஐக்கிய பண்டகசாலைக்கு அருகாமையில் 13-2-63 புதன்கிழமை மாலை 6 மணிக்கு திரு. வே. சின்னப்புவின் தலைமையில் நடைபெற்றது. கீழ்க் கண்டோர் செயற்குழு அங்கத்தினராகத் தெரியப்பட்டனர்: திரு. வீ. கோகிலார் தலைவர், திரு. வே. சின்னத்தம்பி உபதலைவர், திரு. வே. இராசையா செயலாளர், திரு. வே. சின்னப்பு உபசெயலாளர், திரு. க. வைரமுத்து பொருளாளர், திருவாளர்கள்: செ. சினிப்பிள்ளை, வீ. இராசரெத்தினம், செ. ஐயாத்துரை, ச. சின்னத்தம்பி, மு. சின்னையா, மூ. கிட்டினபிள்ளை, த. சங்கரப்பிள்ளை, வே. சின்னப்பு, சி. சின்னப்பு ஆகியோரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## இராமக்கிளிக்குப் பாராட்டு

தென்னிந்தியா இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. இராமக்கிளி என்பவர் தொடர்ந்து 72 மணி நேரமாக காலி பொது மைதானத்தில் சைக்கிள் சவாரி செய்தார். இவருடைய திறமையை பாரதப் பிரதமர் ஜவர்கர்லால் நேரு கூட பாராட்டியிருக்கிறுர்.

தனது சைக்கிள் ஓட்டத்தின்போது குளிக்கவோ, உடைகளை மாற்றவோ, உணவு உட்கொள்ளவோ திரு. இராமக்கிளி கீழே இறங்கவில்லை. காலி பாராளுமன்ற உறுப்பினர் திரு. டபிள்யூ. தஹநாயக்காவின் முன்னிலையில் திரு. இராமக்கிளியின் சைக்கிள் சவாரி நடைபெற்றது.

மந்திரத்தின் சக்தியைக் காட்டுவதற்கான
**மாந்திரீக வேலைகள்**
செய்து கொடுப்பேன்.
விபரம் கேட்டு எழுதுக:
**பீ. எம். திஸாநாயக,**
கம்பளை.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.
தந்தி: சுதந்திரன் போன்: 3411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீராதி வீரன், விவேகி, அவன் தான்
# விக்கிரமாதித்தன்

பண்டிதர் முதல் பாமரர் வரை அறிந்த கதை விக்கிரமாதித்தன் கதை. பாட்டி கதையாகவும் கருதப்படுவதுண்டு. வேதாளம் முருக்கமரத்திலேறுவதும், பேசாமடந்தை பேசுவதும், கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தைகளும், பதுமைகள் கதை சொல்லுவதும் விக்கிரமாதித்தன் கதையின் முக்கியமான இடத்தைக் கைப்பற்றுவன.

ஆனால் இப்பொழுது வெளியாகி இலங்கைத்திரைகளில் ஓடிக்கொண்டிருக்கும் ஜெய்பாரத் புரொடக்ஷன் சாரின் 'விக்கிரமாதித்தன்' படத்தில் மேற்படி சம்பவங்கள் எதுவுமே கிடையா.

படித்தவன், பண்புள்ளவன், பகுத்தறிவுவாதி என்ற பட்டத்தைத் தட்டிக்கொண்டு போய் விடுகிறான் இப்போது வந்துள்ள விக்கிரமாதித்தன். பழைய பாட்டிக் கதையை மனதில் வைத்துக்கொண்டு விக்கிரமாதித்தனைப் பார்க்கச் செல்வோமானால் நிச்சயம் ஏமாந்து போவோம். இந்தப் படத்துக்கு தயாரிப்பாளர்கள் வேறொரு பெயரிட்டிருக்கலாம் என்றே தோன்றுகின்றது.

படம் தயாராவதற்கு 7 வருடங்கள் பிடித்திருக்கின்றன. இருந்த போதிலும் தொடர்பு முறிவுகள் சீராகக் கண்காணிக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கதே!

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். தான் விக்கிரமாதித்தன் வேடத்தில் தோன்றுகிறார். கதையில் விக்கிரமாதித்தன் காளி அருள் பெற்றவன், பல தாரமுடையவன் என்றெல்லாம் இருக்கிறது. ஆனால் பகுத்தறிவு வாதியான எம். ஜி. ஆர். சில விதிகளுக்கமையவே படத்தில் நடித்துள்ளார். ஏகபத்தினி விரதனாகவும், மூடநம்பிக்கைக்கு இடம் கொடுக்காத தற்கால விக்கிரமாதித்தனாகவும் காட்சி தருகிறார்.

## எமது விமர்சனம்

### யாழ்ப்பாணத் தமிழ்

முதல் காட்சியிலேயே விக்கிரமாதித்தன் தனது தேசசஞ்சாரங்களை விட்டு நெடிய தொடர் வசனம் பேசுகிறார். அப்போது யாழ்ப்பாணத் தமிழ் பேசுகிறார். (முன்பு சுதந்திரனில் செய்தி வெளியாகியிருந்தது) வேகமாகப் பேசப்படுவதால் பச்சு அதிகம் விளங்கவில்லை.

சண்டைக் காட்சிகளுக்குக் குறைவேயில்லை. புரட்சி நடிகரின் மாறுவேடங்களும் கச்சிதமாகவுள்ளன. பத்மினி விக்கிரமாதித்தனின் மனைவியாக வருகிறார். சுவைததும்ப நடித்துள்ளார். நகைச் சுவை தங்கவேலு 'இந்த உலகத்திலே' வருகிறார். வீரப்பா, ஸ்ரீ ரஞ்சனி, ராகினி, ஓ ஏ. கே. தேவர், ஈ. வி. சரோஜா, ஜி. சகுந்தலா முதலியோரும் நடித்திருக்கிறார்கள்.

கவர்ச்சியான நடனங்களும் இருக்கின்றன. ஆனால் அவசியமின்றி நடனங்களும், பாடல்களும் குறுக்கிடுகின்றன. பட்டுக் கோட்டைக் கலியாண சுந்தரம், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரின் பாடல்களும் உள்ளன. இசையமைப்பும் சிறப்பாக உள்ளது.

சில இடங்களில் ஒலிப்பதிவு தெளிவாகவேயில்லை. வசனங்களை விழுங்கிக்கொண்டு பின்னணி இசை மேலெழுகிறது.

சண்டைகள், இன்னிசை, நடனங்கள், நிறைந்த சிறந்த படம் விக்கிரமாதித்தன்.

—நாதன்

நாடக விமர்சனம்

# ஒன்றே குலம்

வேலணை வீரசிங்கம் அளித்த யாழ். கலை அரங்கினரின் "ஒன்றே குலம்" என்ற நாடகம் சென்ற 17ம் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

பீதாம்பரம் ஒரு பியோன். உடையார் உலகநாதரின் மகளைக் காலிகளிடமிருந்து காப்பாற்றி பின் காதல் கொண்டு பல தடைகளை மீறிக் கல்யாணம் செய்கிறார். ஒரு பியோனுக்கு தன் மகளைக் கொடுக்க மறுக்கக்கூடும் என்று கிளார்க் வேடம் போட்டு, புரோக்கர் பரமசிவத்தின் பொருத்தத்தால் கல்யாணம் நடக்கிறது.

உடையாரின் மருமகன் இலட்சிய வீரன் மார்க்கண்டன். தன் தந்தையைக் கொலை செய்தவர் தன் மாமாதான் என்பதை நிரூபிக்கிறான். இப்படியாகக் கதை செல்கிறது.


நல்ல கருத்துக்கள் பின்னணியில் இருப்பினும், கதையில் அவை வெளியாகவில்லை. கதை அமைப்புக் குறைவால் நாடகத்தின் கதை என்ன என்று கூற முடியாதிருக்கிறது.

நடிப்பைப் பற்றி அவ்வளவு கூற முடியாது. நாடக அமைப்பே சரியில்லாதிருந்ததால் ஓரளவு நடிக்கக் கூடியவர்களும் சோபிக்கவில்லை. சிவதாசன், துரைசிங்கம் இருவரும் ஓரளவு நன்றாக நடித்தனர்.

ஒலி ஒழுங்குகள் நன்றாயில்லாததால் பல இடங்களில் நாடகத்திற்கு உதவாதது டன் நின்றுவிடாது, ரசிகர்களுக்குத் துன்பமும் தந்தது. ஒளி அமைப்பு பற்றி விசேடமில்லை. ஒப்பனை சில இடங்களில் (புரோக்கர்) சரியாக இருந்தது. ஆனால் மற்ற இடங்களில் முகத்தில் எதையோ அப்பிவிட்டதுபோலத் தென்பட்டது.

இலங்கையில் தமிழ் நாடகங்கள் வளர வேண்டும் என்ற எண்ணம் பலரிடம் உண்டு. ஆதலால் குறைகளை ஓரளவு பொறுத்துக் கொள்வார்கள். ஆனால் கதையமைப்பே இல்லாமல், போதிய ஆயத்தமில்லாமல் நாடகங்களை அரங்கேற்றினால் அது ரசிகர்களின் பொறுமையைச் சோதிக்கத்தான் செய்யும். எனவே தயாரிப்பிலாவது நல்ல சிரத்தையெடுத்து பெயருக்கு ஏற்பட்ட குறையை நீக்குவர் என எதிர்பார்க்கிறோம்.


—மதி



தமிழரசு வாலிப முன்னணி மாநாட்டில் வாணி நாடக மன்றம் அளித்த "வாழ்வா இது" என்னும் நாடகத்தில் பங்கு பற்றியவர்கள்:- ஆர். சிவசோதி, வி. முருகதாசன், கே. அப்பாத்துரை, வி. கார்த்திகேசன், ஆர். ஞானகுரு, எஸ். தாமோதரம் பிள்ளை, கே. நவரத்தினம் ஆகியவர்களுடன் பருத்தித்துறை பாராளு மன்ற உறுப்பினர் க. துரைரத்தினம் அவர்களும், வல்வெட் டித்துறை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. வ. வ. இராமசாமிப் பிள்ளை அவர்களும் சேர்ந்து எடுத்த படம்.

# வில்லுப்பாட்டு பொன் விழா

தமிழகத்தின் பண்டைப் பெருமை வாய்ந்த வில்லுப் பாட்டுக் கலையை நகைச்சுவையுடன் இலங்கையில் நடாத்தி வரும் மட்டக்களப்பு மாஸ்டர் சிவலிங்கம் குழுவினர் தங்கள் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியின் 53வது மேடையேற்றத்துடன் பொன் விழாக் கொண்டாடினர்.



இசைக்குமரன் முருகப்பா

இவ்விழா மட்டக்களப்பு அரசடி மண்டபத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வித்துவான் பண்டிதர்



நகைச்சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம்

வீ. சி. கந்தையா, நாடகாசிரியர் எம். எஸ். பாலு, மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு. அன்புமணி, சிறுவர் கலைக் கழகத் தலைவி செல்வி வனஜா பரம். திரு. ஆர். டி. கிருபைரெத்தினம், கவிஞர் திமிலைத்துமிலன் ஆகியோர் குழுவினரைப் பாராட்டிப் பேசினர்.

வில்லுப் பாட்டுக் குழுவில் நகைச்சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம், இசைக் குமரன் முருகப்பா, கவிஞர் கா. சி. ஆனந்தன், திரு. இராபத்மநாதன், இளங் கவிஞர் செ. குணரெத்தினம், திரு. ஆர். டி. கிருபை ரெத்தினம், ஜீ. பாஸ்கரன், வி. சு. கதிர்காமத்தம்பி, வி. தட்க்ஷணாமூர்த்தி, சக்திதாசன் ஆகியோர் சேர்ந்திருக்கின்றனர்.

மட்டக்களப்பு, கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம், திருமலை, நீர்கொழும்பு, ஆகிய இடங்களில் வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

### சிவராத்திரியில்

கொழும்பு கப்பித்தாவத்தை செல்வ பாலவிநாயகர் ஆலயத்தில் 22-2-63ல் நடைபெற்ற சிவராத்திரி உற்சவத்தின்போதும், அதே நாள் இரத்தினபுரி சிவ ஆலயத்தில் நடைபெற்ற சிவராத்திரி விழாவின் போதும் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இக்குழுவினரால் இதுவரை அரங்கேற்றப்பட்ட நிகழ்ச்சிகள் வருமாறு:—

விண்ணுலகில் விபுலாநந்தர், வருகிறார் பாரதி, நாஸ்திகன் நல்லதம்பி, 'கௌபோய்' கந்தப்பன், வன்னியசிங்கம் புகழ், எதிர்ப்பு நாயனார் புராணம், நமக்கு மேலே ஒருவனடா.

இவற்றுக்கான பாடல்களை அமைத்தவர் கவிஞர் காசி ஆனந்தன். இசை அமைத்துப் பாடல்களைப் பாடுபவர் இசைக் குமரன் முருகப்பா.

# தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்தும் சிறுகதைப் போட்டி

இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக, இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒரு சிறு கதைப் போட்டியை நடாத்துகின்றது. இலங்கையிலுள்ள எழுத்தாளர்கள் அனைவரும் சாதி, மத, இன வேறுபாடின்றி இப் போட்டியில் பங்குபற்றலாம். போட்டியின் முக்கிய நிபந்தனைகள் பின் வருமாறு:—

கதைகள் எழுத்தாளர்களின் சொந்தக் கற்பனையாகவே இருக்க வேண்டும். மொழி பெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இருக்கக் கூடாது. ஏற்கனவே பிரசுரமான கதைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா.

கதைகள் தாளின் ஒரு பக்கத்தில், மையினால், தெளிவாக எழுதப்பட வேண்டும்.

எழுத்தாளர்களின் சொந்தப் பெயர், புனைபெயர், முகவரி முதலியவை தனித் தாளில் எழுதி இணைக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினரால் நியமிக்கப்படும் மூன்று பேரைக் கொண்ட நீதிபதிக் குழு, கதைகளைப் பரிசிலனை செய்யும். முதலாவது பரிசாக 250/= ரூபாவும், இரண்டாவது பரிசாக 150/= ரூபாவும், மூன்றாவது பரிசாக 100= ரூபாவும் வழங்கப்படும். மற்றும் ஏழு கதைகளுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

பரிசு பெறாத, பாராட்டுப் பத்திரம் பெறாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர், கதைகளை அனுப்பும் போதே, அவற்றுடன் போதிய தபால் முத்திரைகளை அனுப்ப வேண்டும்.

கதைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி: 1-5-1963.

கதைகள் அனுப்ப வேண்டிய முகவரி: செயலாளர், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம். 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

### ஹிந்திப் படக் கம்பெனியில் தமிழ் நடிகை

பழம் பெரும் நடிகை எஸ். பி. எல். தனலட்சுமியின் மகளான சோதிலட்சுமி பம்பாய் பிலிம்ஸ்தான் படக் கம்பெனியின் நிரந்தர ஹிந்தி நடிகையாக ஒப்பந்தம் பண்ணப்பட்டுள்ளார். ஆர். ஆர். பிக்சர்சாரின் 'பெரிய இடத்துப் பெண்'ணில் ஒரு சாதாரண கிராமப் பெண்ணாக அறிமுகப் படுத்தப்படுகிறார்.

பிலிம்ஸ்தான் தயாரிக்கும் ஒரு ஹிந்திப் படத்தை எம். வி. ராமன் டைரக்ட் செய்கிறார். இதன் வெளிப்புறக் காட்சிகள் விரைவில் சென்னைக்கு அருகில் தயாராகவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைத் தமிழர்களின் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் இச் சபையிலே சிறுபான்மைத்தமிழர் ஒருவரை அபேட்சகராக நிறுத்திய பொழுது அரசாங்கமும் சிறுபான்மைத் தமிழர் ஒருவரைப் போட்டிக்கு நிறுத்தியது. தேர்தலில் அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டவர் படுதோல்வியடைந்தார். அன்று முதல் இன்றுவரை அரசாங்கம் நாற்பதுக்கு மேற்பட்டவர்களைச் செனட்டர்களாக நியமித்து இருக்கிறது. அவர்களில் ஒருவராவது சிறுபான்மைத் தமிழராக இல்லை. அப்படி ஒருவரை நியமிக்க வேண்டும் என்று நினைக்கக் கூடவில்லை.

### அவர் விட்டுக் கொடுத்திருக்கலாமே!

அது மாத்திரமல்ல; சென்ற முறை நடந்த செனட்டர் தேர்தலில் திரு. சுப்பிரமணியம் என்ற சிறுபான்மைத் தமிழரைப் பிரேரிப்பது பற்றி அரசாங்க கட்சியினரால் பரிசீலிக்கப்பட்ட போது அவர் பெயர் நீக்கப்பட்டது. அதே சமயத்தில் திரு. ஆனந்த தஸநாயக்காவின் பெயர் பிரேரிக்கப்பட்டது. ஆனந்த தஸநாயக்கா அவர்கள் உண்மையில் சிறுபான்மைத் தமிழர்களிடம் அனுதாபமுடையவராக இருப்பாரேயானால்—அவர்களுடைய நன்மையில் அக்கறை கொண்டவராக இருப்பாரேயானால்—அவர் நிச்சயமாக எனக்குச் செனட்டர் பதவி வேண்டாம்; திரு. சுப்பிரமணியத்திற்கு அப்பதவியைக் கொடுங்கள் என்று கூறி, தனது பதவியை விட்டுக் கொடுத்திருக்க வேண்டும். அவர் அப்படி ஒன்றும் செய்யவில்லை. இப்பொழுது கூட நினைத்தால் அப்படிச் செய்யலாம். கௌரவ செனட்டர் ஆனந்த தஸநாயக்கா அவர்கள் என்ன நோக்கத்துடன் இப்பிரேரணையைக் கொண்டு வந்திருக்கிறாரென்று இச் சபையில் உள்ள கௌரவ அங்கத்தவர்களுக்கும், மக்களுக்கும் தெரியும்.

கனம் அக்கிராசனரவர்களே, நான் இவ்விஷயம் பற்றி மேலும் நீடித்துப்பேச விரும்பவில்லை. இவ்விஷயம் பற்றி விவாதிப்பதற்கு அரசாங்கத்திற்கு விருப்பமில்லைப்போல் இருக்கிறது. அதனால் தான் இப்பிரேரணையைப் பிரேரித்த கௌரவ செனட்டரை இங்கே காணவில்லை. ஆகையால் ஒன்று மாத்திரம் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இந் நாட்டிலேயுள்ள தமிழ் மக்களுக்கிடையில் மாத்திரமல்ல; சிங்கள மக்களிடையேயும் சாதி வித்தியாசம் இருக்கிறது. இதனைக்கௌரவ பிரதம மந்திரியோ, அல்லது மற்றைய மந்திரிகளோ, அங்கத்தவர்களோ அல்லது கௌரவ செனட்டர்களோ மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். இதனை மறைக்கவோ, மறுக்கவோ அவர்களால் முடியாது. இப் பிரச்சினை ஒரு தனிப்பட்ட இனப் பிரச்சினையல்ல. ஒருபொதுப் பிரச்சினை. ஆகையால் இதனை நீக்க அரசாங்கம் கவனம் எடுக்க வேண்டியது அவசியம். ஆகையால் தமிழர்களுக்குள்ளேயுள்ள சாதிப் பிரச்சினையை நீக்க வேண்டும் என்று பிரேரணை கொண்டு வருவதால் பிரயோசனம் எதுவும் ஏற்படாது. உண்மையிலேயே அரசாங்கம் இதனை நீக்க விரும்பினால் நிச்சயமாக சட்ட மூலம் இவற்றை நீக்க ஆவன செய்ய வேண்டும். இதற்காக தனி இலாகா ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று கூறி, கௌரவ செனட்டர் ஆனந்த தஸநாயக்கா அவர்கள்கொண்டு வந்த பிரேரணையை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்".

### அந்தரங்கம்

பிரேரணையை சபையில் கொண்டு வரப் போவதாக முன்னறிவித்தல் கொடுத்த செனட்டர் ஆனந்த தசநாயக்க, இறுதியில் பிரேரணையை வாபஸ் வாங்க வேண்டி வந்ததிலிருந்தும், சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சினையில் அரசாங்கம் காட்டும் அசிரத்தையிலிருந்தும் இதனுள் பெரிய அந்தரங்கம் மறைந்திருப்பது போல் தெரிகிறது.

இதற்கிடையில் யாழ்ப்பாணம் சிறுபான்மைத் தமிழர் மகாசபையினர் தங்களுக்குத் தாங்களே கரிபூசிக்கொண்டனர். பிரேரணையைப் பிரேரிக்கப் போகிறேன் என்று மார்தட்டி வீரம் பேசிய பின் புறமுதுகிட்டோடிய போர் வீரனையொத்த செனட்டர் தசநாயக்காவுக்கு யாழ்ப்பாணத்தில் விருந்து வைபவம் அளித்துக்கௌரவித்தனர். இத்தகைய விந்தையும் வேதனையும் கலந்த நிகழ்ச்சியினையிட்டு மனம் வெதும்பாதார் இருக்க முடியாது.

### வரவேற்பு ஏனோ?

செனட் சபை நடவடிக்கைகளிலிருந்து, சிறுபான்மைத் தமிழர்களின் அவல நிலையினைப் போக்க விசாரணை சபை ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று செனட்டர் ஆனந்த தசநாயக்கா கொண்டு வந்த பிரேரணையைத்திடீரென வாபஸ் பெற்று விட்டுள்ளார். அவர் அப் பிரேரணையை வாபஸ் செய்வதற்காகக் கொடுத்துள்ள காரணங்கள் சற்றேனும் பொருத்தமானவை என்றே தோன்றவில்லை.

அப்பாவிச் சிறுபான்மைத் தமிழர்களை ஆட்டிப் படைக்கும் சில சுயநலத் தலைவர்கள், தங்கள் இஷ்டப்படி ஏமாற்றுவதன் காரணத்தை மக்கள் தெரிந்து கொள்ளாமலில்லை. நன்மை பயக்கும் என்று கருதப்பட்ட ஒரு விசாரணை சபையை ஏற்படுத்துமுகமாக அமைந்த தீர்மானத்தை ஆவலுடன் மக்கள் எதிர்பார்த்திருந்த வேளையில், திடீரென அந்தப் பிரேரணையை செனட்டர் தசநாயக்கா வாபஸ் செய்து விட்டார். இதற்கு அரசாங்கத்தின் தூண்டுதல் பின்னணியாக அமைந்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த செனட்டர் தசநாயக்காவுக்கு 'சிறுபான்மைத் தமிழர்களின் முன்னேற்றங் கருதி உழைக்கும் மேதை' என்று பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. விருந்து வைபவங்களுடன் வரவேற்பும் கொடுக்கப்பட்டது. ஒரு பிரேரணையை கொண்டு வரப் போவதாக முன்னறிவித்தல் கொடுத்து விட்டு பின் சதவால் பேட்டி கண்ட பேடிகளின் பேச்சுக்குச்செவி சாய்த்து பிரேரணையை வாபஸ் வாங்கிய செனட்டர் தசநாயக்காவுக்கு வரவேற்பளித்தமை என்ன காரணத்தினாலோ தெரியவில்லை.

# ஆத்மீக வழிக்கு உதவும் சிவராத்திரி விழா

## பல இடங்களிலும் பக்தியுடன் கொண்டாடப் பெற்றது

"ஆத்மீகவழியை நாடுவோருக்கு சிவராத்திரி ஆணவமலங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு நல்ல வாய்ப்பைத் தருகிறது."

இவ்வாறு கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத். அருணசலேசுவர சுவாமி கோவிலில் சென்ற வெள்ளிக்கிழமை (22-2-63) மாலை 6 மணி தொடக்கம் வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற சிவராத்திரி விழாவில், மேற்படி சங்கத் தலைவர் திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்கள் பி. ஏ. தமது தலைமைப் பேருரையின் போது குறிப்பிட்டார்.

இவ்விழாவில் திரு. சு. பாலசிங்கம் அவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும், செல்வி மஞ்சுளா சத்திய வாகீஸ்வர ஐயரின் பக்திப்பாடல்களும், திரு. த. நல்லைநாதன் அவர்களின் சொற்பொழிவும், செல்வர்கள் வி. சுரேந்திரன், வீ. ரவிந்திரன் இருவர்களின் புல்லாங்குழல் வாசிப்பும், திருவாளர்கள் பரம் தில்லைராஜா எம். ஏ., அ. வேல்சாமி, வீ. சிவராசா ஆகியோரின் இன்னிசை விருந்துகளும், "கதாகாலாக்ஷேப மணி" தா. பொன்னம்பலம் அவர்களின் "திலகவதியார்" என்னும் பொருள் பற்றிய சங்கீதக் கதாப் பிரசங்கமும் இடம் பெற்றன.

அதன் பின் சுவாமி கழனி கங்காதீரத்திற்கு அம்பிகா சமேதரராய்ப் பக்த கோடிகளுடன் தீர்த்தமாடித் திரும்பிய பின்னர் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

### நல்லூர்

நல்லூர் தேவஸ்தான காவலரின் ஆதரவுடன் அகில இலங்கைப் பொது ஜன சேவைச் சங்க சமயப் பிரசார சபையினரால் சிவராத்திரி உற்சவ விழா தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்திலும், தேவஸ்தான மண்டபத்திலும் இரவு 6-45 மணி முதல் நிறைவேறிற்று. சபையினரின் உபதலைவர் திரு பொன் அப்புக்குட்டியவர்களின் ஆரம்ப உரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

திரு. க. முருகேசு ஆசிரியர், திரு. பொன் அப்புக்குட்டி, திரு. சி. க. நடராசா, செல்வி சாம்பசிவம் நாகபூசணியம்மாள், திருமதி தம்பிப்பிள்ளை நாகம்மா, ஆசிரியர் திரு. பொ. பூரணன், திரு. சி. பொன்னுத்துரை, சங்கச் செயலாளர் திரு. த. இராசரத்தினம் ஆகியோர் சமய அறிவுரைகள் ஆற்றினர். செல்வன் க. நாகேந்திரன் பக்திப்பாடல்கள் பாடினர். 23-2-63 காலை 4 மணியளவில் செயலாளரின் நன்றியுரையுடன் விழா நிறைவேறிற்று.

### நல்லூர் தெற்கு

நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகராலயத்தில் 22-2-63 வெள்ளிக்கிழமை பகல் 3-30 மணி முதல் 23-2-63 காலை 7 மணி வரையும் சிவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

### கைதடி

கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க நான்காவது மகாசிவராத்திரி விழா 22-2-63-ல் கைதடி ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் மாஜி கிராமச் சங்கத் தலைவரும், ஆசிரிய மணியுமான திரு. நா. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பண்டிதர் திரு. த. சுவாமிநாதன், வித்துவான் திரு. மு. சபாரத்தினம், திரு. ஆ. பொன்னையா, கிராமச் சங்கத் தலைவர் திரு. வே. சிவசுப்பிரமணியம் ஆகியோரின் உபந்நியாசங்களும், திரு. விஜயரத்தினம் அவர்களின் இன்னிசை விருந்தும், ஆசிரியர் திரு. சி. சரவணமுத்து அவர்களின் "வள்ளி திருமணம்" என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும், செல்வி பூமணி கோஷ்டியினரின் திருவாசகம் ஓதலும், செல்வன் ந முருகதாஸ், செல்வன் செ கந்தசாமி ஆகியோரின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெற்றன.

### கோண்டாவில்

கோண்டாவில் மேற்கு சைவ அபிவிருத்தி சங்க ஆதரவில் மகாசிவராத்திரி உற்சவம் வெகு பக்தியுடன் 22-2-63 வெள்ளிக்கிழமை இரவு முழுமையும் சிறீ காளி தேவி கணேச ஆலயத்தில் நடைபெற்றது.

கூட்டுப் பிரார்த்தனை சங்க அங்கத்தவர்களால் நடாத்தப்பட்டது. கண்ணப்ப நாயனார் சரித்திரம் பற்றி திரு. வை. நல்லையா அவர்களும், சிவராத்திரியின் மகிமை பற்றி திரு. எஸ். விஜயரத்தினமும் பேசினார்கள்.

# கடமை மறவாது உயிர் நீத்த...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காது, எதிர் நோக்கி நின்ற எல்லாத் தீமைகளையும் எதிர்த்து நின்று, வெற்றிகண்டு, அன்புள்ளோரையும் மற்றோரையும் கூடப் பகைத்துக் கொள்ளாது, தனக்குண்டாகும் அவமதிப்புக்களைப் பொருட்படுத்தாது, காங்கிரசின் வளர்ச்சியே உயிராகக் கொண்டு, இராப் பகல் உழைத்த ஓர் பெருந்தலைவர் இராஜலிங்கம்.

தன் குடி வாழ பிறர் குடி மாள என்னும் கருத்தில் பற்றில்லாதவர். மிக மானியாக வாழ்ந்தார். அவருக்குப் பகைவரில்லை. இன்று இந்த ஸ்தாபனங்கள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதற்கு, மூலகர்த்தாக்களில், இராஜலிங்கம் தலை சிறந்தவர் என்று கூறுதல் மிகையல்ல.

### சிறந்த சேவை

"இலங்கை இந்தியக் காங்கிரஸ்," "இலங்கை காங்கிரஸ் தொழிலாளர் சங்கம்" என்ற பெயரில் நடந்து வந்த, அரசியல் தொழிலியல் ஆகிய இரு சங்கங்களும், இனப் பாகுபாட்டைக் கொண்டிருப்பதாகப் பிறர் நினைத்ததால். அவைகளை முறையே "இலங்கை ஜனநாயக காங்கிரஸ்" "இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்" என மாற்றியமைப்பதில் பெரும் பங்கு கொண்டவர், இராஜா. இவ்விரு ஸ்தாபனங்களிலும் நிர்வாகக் காரியதரிசியாகவும், பொதுக் காரியதரிசியாகவும், தலைவராகவும் கடமையாற்றி, பிற நாடுகளுக்குத் தூது சென்று, துன்பத்திற்கு பரிகாரங்கண்டு, சிறந்த சேவை செய்தவர்.

பொதுவாக இந்த நாடும் நாட்டு மக்களும் ஒரு சமரச மனப்பான்மையுடைய தலைவரையும்; ஏழைப் பாட்டாளி மக்கள் ஓர் சிறந்த பங்காளனையும்; சிறப்பாக மலைநாட்டு மக்கள், ஒரு உண்மை நண்பனையும் நேர்மையான ஒரு வழிகாட்டியையும் — அவரது சேவை மிக மிக அவசியமான இந்தச் சந்தர்ப்பத்தில்—இழந்து விட்டனர். இச் சமூகத்திற்கே இது மாற்றுக்காண முடியாத நஷ்டம்.

### உயிர் நீத்தார்

11-2-1963 காலையில் தனையீன்ற தந்தையின் அரவணைப்பில், தான் பிறந்த சங்குவாரி தோட்டத்திலுள்ள தனதில்லத்தில், உயிர்நீத்தார் இத் தனித் தலைவர்.

புதன்கிழமை 13-2-63ல், சங்குவாரி தோட்டம் முற்றும் நிறைந்துநின்ற ஜனத்திரளில், அவர்கண்ட சரஸ்வதி வித்தியாலய மாணவர் அணிவகுத்து மனம் குமுற, இந்நாட்டு அரசப் பிரதிநிதிகள், பிற மந்திரிகள், பாராளுமன்ற அங்கத்தினர், பாரத நாட்டு அரசப் பிரதிநிதிகள், பிற நாட்டுப் பிரதிநிதிகள் இன்னும் இலங்கை நாட்டு பற்பல முக்கியஸ்தர்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மற்றும் தொழிற் சங்க பிரதிநிதிகள், பல நகரசபை நிர்வாகஸ்தர்கள், தோட்ட முதலாளிகள் போன்ற எண்ணிறந்த பிரமுகர்கள் பிரேதப் பெட்டியைப் பங்குபோட்டுச் சுமந்து செல்ல, அவரை இந்நாட்டுக்குத் தந்த சங்குவாரி தோட்டத்திலேயே, அவர் சுமந்து வந்த பூதவுடல், நல்லடக்கம் செய்யப்பட்டது.

### தந்தையும் மகனும்

அவரை இத்தகைய சிறந்த இடத்திற்குக் கொண்டு வந்த, பெருமைக்குரிய தகப்பனார் திரு. காளிமுத்து கங்காணி அவர்களுடைய நிலை, அந்த மூன்று நாட்களும் மனதைப் பிளக்கும் கலக்கத்தைப் பிறருக்கு ஊட்டி வந்தது. புத்திர சோகந் [illegible] மைந்தருள் முத்தியை இடத்தைப் பெற்ற சிறந்த தந்தையாகி விட்டார்.

'தந்தை மகற் காற்று முதவி அவயத்து
முந்தி இருப்பச் செயல்'

என்ற பொய்யா மொழியைக் கடைப் பிடித்து வெற்றிகண்ட தந்தை இவர். தெய்வத்துள் வைத்து மதிக்கத் தக்கவர். அந்த அருமை மகனும்

'மகன்தந்தைக்காற்றுமுதவி இவன்றந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்'

என்ற மெய் மொழியை, தமது போற்றத்தக்க அருஞ் செயலாக செய்து காட்டி, தனது பெற்றோரை மட்டுமல்ல, உறவினர், அன்பர், துணைவர் ஆகியோரையும், இந்நாட்டையும், கனம் பண்ணியுள்ளார் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

அன்பர் இராஜலிங்கத்தின் ஆத்மா சாந்தி அடைவதாக. கனவிலும், நினைவிலும் எங்களை வழிநடத்தி இந்நாட்டு மக்களுக்கு எங்களால் இயன்ற சேவையை செய்யத் துணை நிற்பதாக.

### அந்தோ!! அந்தோ!!

அன்று அழுது குன்றிய கண்கள், ஈரங்காயாத கன்னங்கள், வதங்கிய முகத்துடனும் அலங்கோலமாக காட்சிதந்த அவருடைய அருமை சகோதர சகோதரர்களின் குடும்பங்கட்கும் மற்றோருக்கும் அவருடைய சக்தி உறுதுணை நின்று காப்பதாக.

பாவையரோடு செம்பொன்
பற்று நீத் தெளிய
மாந்தர் பணியே மேலாம்
சேவையாய்த் தெளிந்தே
செய்தாய்! தியாகத்தால்
நீடுயர்ந்தாய்! சிவன்
பாலந்தோ!
மேவலேன்? விரைவாய் நீதி
விரும்பியோ?
சினந்தோ வாழ்வை?
மிகவுயர்ந்த
ஆவியைப் பிரித்தலாமோ!
அன்பனே!
இராஜலிங்கம்!
அந்தோ !! அந்தோ !!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ உண்ணும் உணவைப் பசித்தவனுக்கு அன்போடு அள்ளிக் கொடு!

## எனது கிராமம்

### புளியங்கூடல்

—சு. வ. ராசன்—

எனது கிராமம் புளியங்கூடல். இங்கு முன் புளிய மரங்கள் கூடலாக இருந்தபடியால் புளியங்கூடல் என்று பெயர் வந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 10 மைல்களுக்கு அப்பால் உள்ளது புளியங்கூடல். இங்கு சைவ மக்கள் வசிக்கின்றனர். இங்கு கமத்துக்கு தேவையான உழவு யந்திரங்களும் மற்றும் உபகரணங்களும் உண்டு. இங்கு 100 க்கு 95 ந்து விதம் கமக்காரரே. இவர்கள் புகையிலை, நெல், கத்தரி, மிளகாய், வெங்காயம் முதலியன பயிரிடுவர்.

இலங்கையின் மேல் மாகாணங்களில் எனது கிராமப் புகையிலைக்கு நல்ல மதிப்பு. எனது கிராமத்தின் இளம் கமக்காரர்கள் முந்தி நடந்த சத்தியாக்கிரகத்தில் தொண்டராகக் கடமையாற்றியவர்கள். இனி வரப்போகும் சத்தியாக்கிரகத்திலும் கூடுதலாகச் சேர்வதற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

எங்கள் கிராமம் ஊர்காவற்றுறை, வேலணை, சரவணை, சுருவில் ஆகிய நான்கு கிராமத்துக்கும் மத்தியில் உள்ளது. எந்தப் பொதுக் கூட்டம் வந்தாலும், எங்கள் நாற் சந்தியைத்தான் தேர்ந்தெடுப்பார்கள்.

இங்கு, பிரசித்திபெற்ற கோயில்கள் இரண்டு இருக்கின்றன. இங்கு வாசிகசாலையும், கடைகளும், நெல் அரைக்கும் மில்களும் உண்டு.

எனது கிராமம் ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்தது. இந்தத் தொகுதிப் பிரதிநிதி திரு. வி. ஏ. கந்தையா ஆவார். இவர் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்.

## வளர்மதி புதிய மருமக்கள்

3697 நா. நடராசா, திருக்கோவில், தம்பிலுவில்.

3698 ஜே. ஜெயக்குமார், சரஸ்வதி வில்லா, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

3699 ஹுசைன் ரபீக், 'வேவெவாட்', கல்ஹின்னை.

3700 ந. தேவக்குமார் நுவரேலியா.

3701 இ. மேரி மாகிறெற் ராஜம், பற்றிமா வீதி, மாதகல்.

3702 எம். ஏ. றசிதா, புதிய நகரம், அனுராதபுரம்.

3703 யா. அகமது, மக்குளடித் தெரு, வாழைச்சேனை.

3704 ஆர். இராமநாதன், 323, டாம் ஸ்ரீற், கொழும்பு.

3705 தனலெட்சுமி வைத்திலிங்கம், காளி கோவிலடி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி.

3706 அ. ரஞ்சிதராசா, பழைய மணியாறன் வீடு, உடுப்பிட்டி.




'வளர்மதி' சிறுகதை:

## வரதனின் வெற்றி

—நா. சிவதாசன், வேலணை—

தந்தையின் தீய பழக்க வழக்கங்களையெண்ணி வருந்துவான் வரதன். அவன் தந்தையை திருத்த எடுத்துக்கொண்ட முயற்சிகளெல்லாம் படுதோல்வியடைந்துவிடுகின்றனவென்று நினைக்கும் போதெல்லாம அவனின் அடி மனதினுள் "முயற்சி திருவினையாக்கும்" என்ற ஆன்றோரின் பொன்மொழி நன்ருகப் பதியும். ஒரு செயலை நிறைவேற்ற, பல தோல்விகள் ஏற்படுவது இயற்கை. ஆகையினால் தன்னுடைய முயற்சி கைகூட பல தோல்விகள் ஏற்பட்டாலும், தான் கலங்கிவிடுவதில்லையென்று உள்ளத்திற்கு உறுதி கூறுவான்.

தன்னால் தன் தந்தையைத் திருத்திவிட முடியும் என்ற நம்பிக்கை வரதனிடம் நன்ருக நிறைந்திருந்தது. அதற்கு அவன் தாயும் சில நேரங்களில் உதவி செய்து வருவாள். தாயினுடைய அறிவுரைகளையும் கேட்டுக் கொள்ளுவான். தந்தையினுடைய அட்டகாசங்களையெல்லாம் வரதனுக்குத் தாய் கூறும்போது அவனையறியாமல் கண்ணீர் வழிந்தோடும். அதைக் கண்ட தாய் அவனைவிட பலமடங்கு அழுது தீர்ப்பாள்.

ஒரு நாள் வரதனின் அப்பா நன்ருகக் குடித்துவிட்டு வீடு திரும்பும்போது, வழியில் பலருடன் சண்டை பிடித்துக் கொண்டே வந்தார். இதைக் கண்ட வரதன் இங்கு வந்ததும் சண்டை செய்வார் என்று எண்ணி மறைவான இடத்தில் ஒளிந்து கொண்டான். வரதனின் அப்பா வீடுசேர்ந்ததும் தாய்க்கு அளவிட முடியாத அடியும் பேச்சும் நடந்தது. அதைப் போல் தங்கை இந்திராவுக்கும் அப்படியே நிகழ்ந்தது. இதையெல்லாம் பார்த்த வரதனுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. கோபம் வந்தாலும் என்ன செய்ய முடியும் என்று எண்ணித் தன் கோபத்தை அடக்கிக் கொண்டான். மதுவின் போதை ஒழியுமட்டும் அடித்துத் தீர்த்தார்.

வீட்டின் பொறுப்புக்களையெல்லாம் வரதனே ஏற்று நடத்த வேண்டியிருந்தது. அதனால் அவன் பாடசாலைப் படிப்பை விட்டு அந்தக் கிராமத்திலேயே ஓர் கடையில் வேலைக்கு அமர்ந்தான். அங்கு அவர்கள் கொடுக்கும் ஐம்பது ரூபாயைக் கொண்டே சீவியம் நடத்த வேண்டியிருந்தது. இதனால் வீட்டில் வறுமை தாண்டவம் ஆடியது. வரதனின் தாயும் சில நேரங்களில் வயல்களில் களை பிடுங்கச் செல்வாள்.

வரதனின் தந்தை உழைப்பது குடிப்பதற்கே போதாது. வீட்டிற்கு ஒரு சதமேனும் கொடுப்பது கிடையாது. வீட்டைப் பற்றி ஒருகணமேனும் சிந்திப்பதில்லை. தன் மகன் வீட்டைக் கவனிப்பான் என்ற எண்ணத்தில் வீட்டைப்பற்றி எண்ணியதில்லை. தன் மகள் இந்திராவிற்கு ஏதேனும் வாங்கிக்கொடுப்பதும் கிடையாது. இதையெல்லாம் வரதனின் ஐம்பது ரூபாய்க்குள் செய்ய வேண்டியிருந்ததால் அப்பணம் செலவிற்குப் போதாமையினால் வருந்துவான். மற்றைய தங்கைகள்போல் தன் தங்கையும் புது உடை உடுக்காமல் கிழிந்த உடையுடன் பாடசாலைக்குச் செல்வதைக் காணும்போது அவன் மனம் வருந்தும்.

சில அறிவுள்ள மனிதர்கள் வரதனிடம், "நீ உழைத்து வீட்டைக் கவனிப்பதினால்தான் குடியிலே மயங்கிவிட்டார். ஆகையினால் அவரின் மயக்கம் தீர நீ சில நாட்களுக்கு இவ்வூரை விட்டு வேறு இடத்திற்குச் சென்று மறைந்துகொள். அதன் பின்பாகிலும் அவர் வீட்டைக் கவனியாது விட்டால் நாங்கள் திருத்துகின்ருேம்" என்று யோசனை கூறினர். அதுவே நல்ல யோசனையென்று வரதனும் ஒப்புக்கொண்டு அவ்வூரை விட்டே மறைந்துவிட்டான். தந்தை மகனைக் காணுததினால், பல இடங்களிலும் தேடியலைந்ததுதான் மிச்சமாகிவிட்டது. ஒரு இடமும் வரதனைக் காணவேயில்லை. அதன் துக்கத்தினால் வீட்டைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார். குடிப்பதற்குப் பணம் இல்லாததினால் அதையும் நிறுத்திக் கொண்டார்.

பல நாட்களின் பின் ஒரு நாள் வரதன் தன் வீட்டிற்கு வந்ததும் அங்கு தந்தையும் தாயும் தங்கையும் ஒன்று சேர்ந்து இருப்பதைக் கண்டதும் அவன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான்.

புது மனிதனுக வரதன் வந்து நிற்பதைக் கண்டதும் ஓடிச் சென்று வாரியணைத்து முத்தம் கொடுத்தனர் பெற்ருேர்கள். அதைக் கண்ட இந்திரா "அண்ணு!" என்று சந்தோஷத்துடன் கூவினுள். அவளே தந்தையினுடைய மாற்றத்தையெல்லாம் தமையனிடம் ஒன்றும்விடாமல் கூறி முடித்தாள். அதைக் கேட்ட வரதனின் அப்பா 'ஆமாடா தம்பி! நான் இப்போ இவ்வீட்டைவிட்டு வெளியே காலடி எடுத்து வைப்பதில்லை' என்றுதான் திருந்தியதைக் கூறினுர். அதற்கு வரதன் 'நீங்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே நான் இவ்வூரை விட்டு ஓடினேன். அந்த அருமையான யோசனை வெற்றியைத் தந்துவிட்டது' என்ருன். தன் மகனே தன்னைத் திருத்திவிட்ட செயலை மற்றையோர்க்கும் கூற வேண்டும் என அவர் மனம் எண்ணியது.

அவர் மகனிடம் கூறினுர்: 'மற்றைய தந்தைமார்களும் என்னைப் போலவே தீய பழக்க வழக்கங்களில் மயங்கிக் கிடக்கின்றனர். அவர்களை அவர்களின் அறிவுள்ள பிள்ளைகளே திருத்த முடியும். வேறு யாராலும் முடியாது!' என்று. பின் இருவரும் பேசிச் சிரித்து மகிழ்ந்தனர். தந்தையும் மகனும் சேர்ந்து குதூகலிப்பதைக் கண்டு வரதனின் தாயும் தங்கையும் அக் குதூகலத்தில் கலந்து இன்புற்றனர்.

**அனுப்பிவிட்டீர்களா?**

உங்கள்

**பெயர், விலாசம், அங்கத்துவ இலக்கம்**

முதலியவற்றை? அனுப்பாவிட்டால், விரைவில் அனுப்புங்கள்!

**அத்தாட்சிப் பத்திரம்**

அப்பொழுதுதான் கிடைக்கும்!




—சு. இராணி நவமணி—

ஒரு ஊரில் ஒரு ஏழைச் சிறுவனும் அவன் தாயும் விறகு வெட்டி விற்று வாழ்ந்து வந்தனர். அன்ெருருநாள் மாலை தாய்க்குச் சுகமில்லாததால், சிறுவன் தனியாகவே விறகு வெட்டச் சென்ருன். இதற்குமுன் தாயுடன் சென்ற பழக்கத்தில் தைரியமாகக் காட்டினுள் நுழைந்தான். சிறிது தூரம்தான் சென்ருன். அதன்பின் மிருகங்களின் உறுமலும், பட்சிகளின் பலவிதமான சத்தங்களும் அவனைப் பயமுறுத்தின. ஒருவாறு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மரத்தை வெட்டினுன்.

சிறிது நேரத்தில் இருட்டிவிட்டது. அவசரமாக, வெட்டிய விறகை இரு கட்டுகளாகக் கட்டிக் கொண்டான். இருட்டிவிட்டபடியால் அவனுக்குப் பாதை சரியாகத் தெரியவில்லை. ஒரு ஒற்றையடிப்பாதை வழியே வேகமாக நடந்துகொண்டிருந்தான். நேரம் செல்ல மிருகங்களின் உறுமலும் ஆந்தையின் அலறலும் எங்கோ ஒரு மரத்தில் வெளவால்கள் கூட்டமாக இருந்து கத்தும் சத்தமும், நரிகளின் ஊளையிடும் சத்தமும், காட்டுக் கோழிகளின் சத்தமும், வண்டுகளின் இரைச்சலும் அவனை உடல் நடுங்கச் செய்தன. அப்போது அவன் முதுகில் ஒரு செடி பட்டாலே போதும் அலறிவிடுவான். அந் நிலையில்தான் அவன் இயந்திரம் போல் நடந்துகொண்டிருந்தான்.

அப்போது அவன் முன், ஒருபக்கமிருந்து மறுபக்கமாக ஒரு பன்றி ஓடி மறைந்தது. அதைக் கண்டதும் அவன் 'அம்மா...' என்று அலறிவிட்டான். பயத்தால் உடலெல்லாம் நடுங்கியது. முகம் வெயர்த்துக் கொட்டியது. அதற்கு மேல் அவனால் ஒரு அடியும் எடுத்து வைக்க முடியவில்லை. அவ்விடத்திலேயே இருந்து சில நிமிடங்கள் யோசித்தான். இவ்வளவு நேரம் நடந்தும் வீட்டை அடையவில்லையே, மற்ற நாட்களில் சீக்கிரம் வீட்டை அடைந்துவிடுவோமே. நான் பாதை தவறி வந்துவிட்டேனு? நன்ருக இருட்டியும் விட்டதே. இப்போ என்ன செய்வது? பக்கத்தில் வீடுகளேதும் தெரிகிறதா என்று இந்த பெரிய மரத்தில் ஏறிப்பார்ப்போம். வீடு பக்கத்தில் இருந்தால் மெதுவாக வீடுபோய்ச் சேர்வது இல்லாவிட்டால் இன்றிரவை இந்த மரத்தில் கழித்துவிட்டு விடிந்ததும் வீடு போய்ச் சேர்வது' என்று தீர்மானித்துக் கொண்டு மரத்தில் ஏறிப்பார்த்தான்.

வெகு தூரத்தில் ஒரு வீட்டில் விளக்கு எரிவது தெரிந்தது. அதைக் கண்டதும் அவன் மிகவும் பயந்துவிட்டான். 'இது நமது கிராமமேயல்ல. நான் பாதை தவறி நடுக் காட்டிற்குள் வந்துவிட்டேன். இந்த நடுக் காட்டிற்குள் இருப்பது யாராக இருக்கும்? ஒருவேளை கள்வர்களோ?' என்று யோசிக்கலானுன்.

அப்போது அவன் கண்ட காட்சி—அந்தக் குடிசையில் இருந்து பலர் தீவட்டிகள் ஏந்தியவராய் குதிரையில் வந்துகொண்டிருந்தனர். சில நிமிடங்களில் சிறுவனை நெருங்கிவிட்டனர். சிறுவன் மரத்தின் அரைப்பாகத்திற்கு இறங்கி ஒரு பெரிய கொப்பில் அமர்ந்து வருகிறவர்கள் யார் என்று பார்க்கத் தயாரானுன். வேகமாக வந்த குதிரையிலொன்று சிறுவன் முன் வந்ததும் கால் இடறி விழப்பார்த்தது. ஆனுல் குதிரை விழவில்லை. அதன் மேல் அமர்ந்து வந்தவன் கீழே விழுந்துவிட்டான். மறுகணம் பின்னுல் வந்த குதிரைகளெல்லாம் வரிசையாக நின்றுவிட்டன.

பலர் இறங்கி விழுந்தவனைத் தூக்கினர். தலையில் பலமான அடிபட்டிருந்தது. விழுந்தவன் சில நிமிடங்களில் எழுந்தான். அவர்கள் பாதையில் கிடந்த விறகுக் கட்டுகளைக் கண்டு, "இந்த விறகுக் கட்டுகள் இங்கே எப்படி வந்தன? யாரும் இவ்வளவு தூரம் விறகு வெட்ட வரமாட்டார்களே? ஒரு வேளை யாராவது வழி தவறி வந்து விட்டார்களோ? எதற்கும் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, விறகுக் கட்டுகள் இரண்டையும் எடுத்து ஓரமாகப் போட்டுவிட்டுச் சென்றனர்.

—(தொடரும்)

அப்பொழுது தான் நீ வாழ்வாய்! — முகம்மது நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### திருகோணமலை தமிழர்முன்னேற்றக்கழக தீர்மானங்கள்

செவ்வாய்க்கிழமை 12—2—63ம் திகதி நடைபெற்ற திருகோணமலை த. மு. கழக பொது உறுப்பினர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் முன்னை நாள் தலைவரும் ஸ்தாபக அங்கத்தவருமான திரு. கே. ராஜலிங்கம் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு மிக மிக வருந்துவதோடும், அவர்களை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் த. மு. கழகம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது.

2. நகரசபை முதல்வருக்கு—கடந்த சில மாதங்களுக்கு முன் சிறிமாபுர பெயர்ப்பலகை பற்றிய விடயம் தங்கள் கவனத்துக்கும் நகரசபை உறுப்பினர் கவனத்துக்கும் கொண்டு வந்தோம். அப்போது தாங்கள் நகரசபைக்கும் சிறிமா புர பெயர்ப் பலகைக்கும் எதுவித தொடர்ப்பும் கிடையாதெனக் கூறினீர்கள். பின் நகரசபை உறுப்பினர் கூட்டத்தில் ஏற்பட்ட சர்ச்சையின்போது, சிறிமாபுர பெயர் பலகை பற்றிய விடயமாக அரசாங்க அதிபருக்குக் கடிதம் எழுதுவதாகக் கூறியது பற்றி அறிய நேர்ந்தது. புதிய இடந்துக்கு பெயர் சூட்டும் உரிமை நகர சபைக்கே உரிய தென அரசாங்க அதிபர் தெரிவித்து இருப்பதை நாங்கள் அறிந்தோம். ஆகவே நாங்கள் காலம் கடத்தாமல் அப் பெயர்ப்பலகையை அகற்றி அவ்விடத்துக்கு புதியதோர் தமிழ்ப் பெயர் சூட்டும்படி தங்களையும் மற்றும் நகர சபை உறுப்பினர்களையும் த. மு. கழகம் மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. எதுவித உதவியும் இல்லாமல் இருக்கும் வயோதிபர்களுக்கும், இரவில் நடைபாதையோரங்களில் துயில் கொண்டும், மழைக்காலங்களில் மரங்களின் கீழுமாக நின்று தவிக்கும் பிச்சைக்காரர்களுக்கும் இலங்கையில் பல்வேறு இடங்களிலும் உள்ளது போல, திருகோணமலையிலும் ஓர் வயோதிபர், ஓய்வு விடுதி அமைத்துக் கொடுக்கும்படி நகர சபையைத் த. மு. கழகம் மிக பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகிறது.

4. அரசாங்க கலாச்சார பகுதியினரால் வெளியூர் பொதுப்பிரயாணிகள் வந்து தங்கிச் செல்வதற்காக ஒதுக்கப்பட்ட திருகோணமலையில் உள்ள 'நீக்கல்சன் லொட்ஜ்' என்னும் விடுதியை தனிப்பட்டதோர் சமயத்தவர்களும் தனிப்பட்ட இனத்தவர்களும் உபயோகிப்பதை வன்மையாகக் கண்டிப்பதோடு, அவ்விடுதியை அவ்விடுதியை எல்லா சமயத்தவர்களுக்கும், எல்லா இனத்தவர்களுக்கும் உபயோகிக்க எவ்வித இடையூறுகளும் ஏற்படாத வண்ணம் செய்யும்படி கலாச்சார அமைச்சர் அவர்களையும் திருகோணமலை அரசாங்க அதிபர் அவர்களையும். த. மு. கழகம் கேட்டுக்கொள்ளுகிறது.

5. அரசாங்க மருத்துவமனையில் தற்போது இருக்கும் சீர்கேடுகளை அகற்றி பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளும் காலதாமதமும் ஏற்படா வண்ணம், மருத்துவர்களும், உதவி மருத்துவர்களும், மற்றும் உதவியாளர்களும், மருந்து கொடுப்பவர்களும், தாதிமார்களும் நன் முறையில் செயலாற்றிடும் வண்ணம் செய்யுமாறு மாவட்ட சுகாதார அலுவலகர் (டி. எம். ஓ) அவர்களை த. மு. கழகம் மிகப்பணிவன்போடு வேண்டிக் கொள்கிறது.

6. தமிழ் பேசும் மக்களின் துக்க நாளாம் மாசித் திங்கள் 4-ம் நாள் கறுப்புக் கொடியேற்றி அன்று துக்க தினமாக கொண்டாடியவர்களுக்கு த. மு. கழகம் தனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

---

### பள்ளிவாயல் திறப்பு விழா

கல்லோயாப் பள்ளத்தாக்கிலுள்ள சவளக்கடை என்னும் பட்டினத்தில் சென்ற 27-1-63-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5-30 மணியளவில் புதியதாய் அமைக்கப்பட்ட தொழுகைக் குரிய ஒரு பள்ளிவாயலான தப்லீஃ ஜமாஅத்தை ஜனுப் மௌலவி ஹசன் அவர்கள் முறைப்படி திறந்து வைத்தார். அவ்வமயம் கல்லோயாப்பிரதேசத்தில் சாய்ந்தமருது, கல்முனைக் குடி. மருத முனை ஆகிய கிராமங்களிலிருந்து குடியேறிய 5-ம் 6-ம் 7-ம் கிராம முஸ்லிம் மக்கள் அமோகமாகச் சமுகமளித்திருந்தனர்.

குடியேற்ற உத்தியோகஸ்தர் ஜனுப் எம். எச். காரியப்பர் அவர்கள் பேசுகையில், இப் பள்ளிவாயல் பல எதிர்ப்புகளின் மத்தியில், இப்பட்டின வியாபார ஸ்தாபகர்களின் அயராத முயற்சியினுலும், முஸ்லிம் கிராம மக்களின் ஒத்துழைப்பினுலும், இறைவனருளினுலும், நிறைவேறியதையிட்டு பெருமைப்படுவதுடன், இப் பகுதி-முஸ்லிம் மக்கள் "ஐங்காலத் தொழுகை" யைக் கடைப்பிடிக்கவும் இது வழி காட்டுமென்றும் கூறினுர்.

இறுதியாக, மௌலவி செய்யது இப்ருகிம் அவர்களின் ஹதீஸ்ஸூம் நிகழ்ந்தது.

---

### அண்ணு மறுமலர்ச்சிக் கழகம்

அண்ணு மறுமலர்ச்சிக் கழகத்தின் அமைப்புக் கூட்டம் கடந்த 17-2-63 ஞாயிறு மாலை 4 மணிக்கு, ராஜகிரி, செர்க்கியூலஸ் வீதி 25/1-ம் இலக்க இல்லத்தில் திரு. எஸ். கே. இராமய்யா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவரின் தலைமையுரைக்குப்பின் தோழர்கள் எஸ். மாசிலாமனி, ஜே. சூசைப்பிள்ளை, டீ. அய்யாவு, பி. வடிவேல், எஸ். அந்தோனி குரூஸ் மற்றும் பலர், கழகத்தின் வளர்ச்சிகுறித்துப் பேசினுர்கள். பின் வரும் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. எஸ். கே; இராமய்யா, துணைத் தலைவர். திரு. எஸ். அந்தோனிகுரூஸ், செயலாளர்: திரு. ஜே. ஜோசப், துணைச்செயலாளர்: எம். சுந்தரராஜ், பொருளாளர்: திரு. எஸ். மாசிலாமணி, பரிசோதகர் திரு. வீ. சின்னையா. 11 பேரைக் கொண்ட செயற் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

### கந்தரோடை சனசமூக நிலையம்

"சனசமூக நிலையங்களால் மக்கள் எவ்வளவோ முன்னேறலாம். அ[illegible] பொது மக்கள் அரசியல் கொள்கைகளால் பிளவு பட்டு இருப்பதுஉகந்ததல்ல. இனிமேல் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு இந் நிலையத்தின் முன்னேற்றத்துக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்". இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கந்தரோடை சன சமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பின்பு புதிய நிர்வாகிகளாக கீழ்க் கண்டோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. வி. தர்மலிங்கம் பா. உ. (உடுவில்), உப தலைவர்: திரு. எஸ். ஆர். பாலசிங்கம், செயலாளர்: திரு. அ. முருகையா, உப செயலாளர்: திரு. சி. கணேசவேல், பொருளாளர்: திரு. சு. கந்தசா[illegible], உப பொருளாளர்: திரு. இ. முருகையா, பொறுப்பாளர்கள்: திரு. ந. சின்னராசா, திரு. செ. இராசரெத்தினம், திரு. வி. மகாலிங்கம், திரு. க. துரைசிங்கம்.

மற்றும் 10 நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

---

### அம்பிகை பாலர் சங்கம்

ஞாயிற்றுக்கிழமை 3-2-63 மாலை 6 மணியளவில் வேலணை குறிப்புத் தொண்டர் சமுதாயவளர்ச்சிச் சங்க மண்டபத்தில் திரு. ஆ. பத்மநாதன் தலைமையில் அம்பிகை பாலர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சிறுவர்களின் இம் முயற்சியைப் பாராட்டித் தலைவர் பேசுகையில், 'வருங்காலம் வளம் பெற வேண்டுமென நீங்கள் கருதி இந்த முன்னேற்றப் பாதையை வகுத்துள்ளது மிகவும் போற்றுதற்குரிய' தென்று கூறினுர்.

சங்க நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. கோ. சுதந்திரபாலன், உப தலைவர்: திரு. க. மருதவாணன், இணைச் செயலாளர்கள்: திரு. பொ. ரவீந்திரன், திரு. சி. சந்திரசேகரன், பொருளாளர்: திரு. கோ. மகேந்திரன், உபபொருளாளர்: திரு. பொ. ஜெகதீஸ்வரன்.

நிருவாகசபை அங்கத்தவர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யயபட்டனர்: திருவாளர்கள் க. தேவராசா, சி. ஞானசேகரன், பொ. ஜெகநாதன், தெய்வேந்திரன், ச. வேலழகன், மு. சிவராசா, க. நவரத்தினம்.

தலைவர் தி. கோ. சுதந்திர பாலன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவெய்தியது.

---

### வேலணை திருக்குறிப்புத் தொண்டர் சங்கம்

வேலணை திருக் குறிப்புத் தொண்டர் சமுதாய வளர்ச்சிச் சங்கத்தின் கூட்டம் சங்க மண்டபத்தில் தலைவர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையில் 6-2-63 புதன்கிழமை மாலை 6 மணியளவில் ஆரம்பமாகியது. செயலாளர் திரு. ச. முருகேசுவினுல் சென்ற கூட்ட வரலாறு வாசிக்கப்பட்டு சபையோரினுல் ஏகமனதாய் ஏற்றுக் [illegible] தீர்மானங்கள் ஏகமனதாய் சபையில் நிறைவேற்றப்பட்டன:

(1) இச் சங்கத்தை ஓர் தொழிற் சங்கமாய்ப் பதிவு செய்தல் வேண்டும்.

(2) சங்க உறுப்பினர்களின் சந்தாப்பணம் அதிகமாகிவட்டபடியினுல், அப் பணத்தை வங்கியில் போட வேண்டும்.

(3) எமது சமுதாயத்தின் சார்பில் இச் சங்கத்தலைவர் திரு. க. திருநாவுக்கரசு அவர்களை சமாதான நீதிபதியாக்க வேண்டுமென தீவுப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. கந்தையாவையும் மற்றும் சம்பந்தப்பட்டோரையும் கேட்டுக் கொள்வது.

அதன் பின் திரு. ஆ. கணேசன், திரு. இ. கந்தையா, திரு ப. சின்னத்துரை, திரு. மு. சே. நடராசா, திரு சி. பொன்னுத்துரை ஆகியோரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவெய்தியது.

---

### தேன் தமிழ் மன்ற உறுப்பினர் கூட்டம்

கொடிகாமம் கட்டைபறித்தான் சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் 10-2-62 ஞாயிற்றுக்கிழமை தேன் தமிழ் மன்ற உறுப்பினர் கூட்டம், மன்றத்தின் உப தலைவர் செல்வன் க. காசிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் பின் வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) தமிழகத்தின் தலைசிறந்த தமிழ்ப் பேரறிஞரும், எழுத்தாளர், பேச்சாளரும், சமதர்மவாதியுமாகிய திரு. ப. ஜீவானந்தம் அவர்கள் இயற்கை எய்தியமை குறித்து எமது மன்றம் ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. பேச்சுத் தொண்டிற்கும், எழுத்துத் தொண்டிற்கும் மேலானது செயற்ருெண்டு எனக் கூறித் தமிழ் நாட்டில் தீண்டாமையை ஒழிக்கச் செயல் புரிந்த வீரர் ஒருவரைத் தமிழகம் இழந்துவிட்டது.

(2) தமிழ்மக்களின் கலை, கலாச்சாரம், இலக்கியம், இன்றைய அரசியல் நிலை, பொருளாதார நிலை ஆகிய பெரும் பிரிவுகள் அடங்கிய 'தேன் தமிழ் மலர்' ஒன்றை அதி விரைவில் வெளியிட்டு மிகக் குறைந்த விலையில் மக்களிடையில் பரப்ப வேண்டும். ஈழத்திலும், இந்தியாவிலும், உள்ள அறிஞர்கள், புலவர்கள் ஆகியோரின் கட்டுரைகள், கவிதைகள், கதைகள்யாவும் மலரில் இடம்பெறவேண்டும்.

## புனர் வாழ்வு!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பிறகுதான் நான் இப்படி மாறினேன். பெண்கள் மேல் ஆத்திரம் கொண்டேன். அதன் பலனைத்தான் நீ அனுபவித்தாய். உன்னைத் திருமணம் செய்து வைத்தாலாவது நான் திருந்துவேன் என என் பெற்ருேர் எண்ணினர். ஆனுல் நான் திருந்தவில்லை. உன்னைக்கொடுமைப் படுத்தினேன். உ[illegible]ணர்ச்சியற்ற மரக்கட்டை போல் உலாவினேன்.

தியாகு பேசப்பேச அவன் மனப்பாரம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்தது. மாலதி அருகினில் இருந்த 'பிளாஸ்கி'லிருந்து காப்பி கொஞ்சம் ஊற்றி அவனுக்குப் பருக்கினுள்.

"மாலதி! என்னை மன்னித்து விடு. நான் திருந்தி விட்டேன். உன் அத்தான் புனர் ஜன்மம் அடைந்து விட்டான். என் கண்மணி மாலதி மேல் ஆணையாக இனிமேல் மது அருந்த மாட்டேன். சூதாடமாட்டேன். இது சத்தியம்" என்ருன் தியாகு.

"அத்தான்! யார் யாரை மன்னிப்பது? தவறு இழைத்தவர் தம் தவறை உணர்ந்து திருந்தி நடக்க முற்படும் போது மன்னிப்பு என்ற பிரச்சினைக்கே அங்கே இடமில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். நடப்பவை நல்லவையாக இருக்கட்டும். இனிச்சற்று ஒய்வெடுங்கள்' என்ருள் மாலதி.

"நீ எனக்குக் கிடைத்த மங்காத மாணிக்கமடி மாலதி" எனக் கூறியபடி அவளது கையை இழுத்துத் தன் முகத்துடன் அணைத்துக் கொண்டான், தியாகு.

அவள் வாழ்வில் மலர்ச்சி ஏற்பட்டது போல வானிலும் விடிவின்மலர்ச்சி தென்பட்டது.

(யாவும் கற்பனை)


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரூேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரூேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

### சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



**மார்ச் மாதம் 8ந் திகதி ஆரம்பம்!**

**எல்பின்ஸ்டன்** (மருதானை) **றெக்ஸி** (வெள்ளவத்தை) **வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
**வேல்ஸ்** (கண்டி) **இம்பீரியல்** (மட்டக்களப்பு) **நெல்சன்** (திருகோணமலை)
**அசோகமாலா** (நீர்கொழும்பு) **கிங்ஸ்** (பதுளை) **ரீகல்** (நுவரேலியா)

ஜெமினி கணேசன் — சாவித்திரி — விஜயகுமாரி
சந்திரபாபு — அசோகன் — எம். ஆர். ராதா
எம். வி. ராஜம்மா - பத்மினி பிரியதர்சினி - கமல ஹாசன்
மற்றும் பலர் நடித்த

# பாத காணிக்கை

பாடல்கள்: கண்ணதாசன் — இசையமைப்பு: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பின்னணி: சௌந்தரராஜன், சுசிலா, ஜானகி, ஈஸ்வரி.

கொழும்பில்
100-வது வெற்றி நாள்!
**கெபிட்டல்**
(கொட்டாஞ்சேனை)

## சாரதா

இறுதி வாரம்!
**எல்பின்ஸ்டன் — றெக்ஸி**
ஜெமினி கணேசன் — சரோஜாதேவி
பாலையா — தங்கவேலு தோன்றும்

## பனித்திரை

---

**2-வது வெற்றிகரமான வாரம்!**

★ வாட்போர், மல்யுத்தம், சிலம்பம் முதலியவை மலிந்த படம்—
★ ஆடலும், பாடலும், அழகிய காட்சிகளும் நிறைந்த சித்திரம்—
★ சொல்லழகும், பொருளழகும் பொதிந்த பாங்கான ஓவியம்—

வீரதீரச் செயல்கள், மயிர்க்கூச்செறியும் சம்பவங்கள், கருத்தைக் கவரும் கலையம்சங்கள் அனைத்தும் கொண்ட அதி உன்னத திரைக்காவியம்

## சென்ட்ரல் லவினியா

(மருதானை) (நுகேகொடை)

**ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **ஜோதி** (திருகோணமலை)

ஜெய்பாரத் புரொடக்ஷன்சாரின்

# விக்கிரமாதித்தன்

புரட்சி நடிகர் **எம். ஜி. ராமச்சந்திரன்** — அகில உலக நாட்டியப் பேரொளி **பத்மினி**

தங்கவேலு — ராகினி — ஈ. வி. சரோஜா — ஸ்ரீரஞ்சனி
ஓ. ஏ. கே. தேவர் — பி. எஸ். வீரப்பா
முதலியோர் தோன்றும் உன்னத சித்திரம்
ஸ்டண்ட்: ஸ்டண்ட் சோமு



---

**ஆரம்பம்: மார்ச் 8-ந் திகதி வெள்ளி முதல்!**

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (மட்டக்களப்பு)

**ஸ்ரீகிருஷ்ண** (திருமலை) **மொடர்ன்** (பதுளை) **விஜிதா** (ஹட்டன்) **தீவொளி** (நுவரெலியா) **ஜெமினி** (ராகலை)



காளையரின் தோள்கள் விம்ம, கன்னியரின் உள்ளம் துள்ள பாரதத்தின் பண்பையும், வீரத்தையும் எடுத்துக் காட்டும் எழுச்சிமிகு காவியம்!

சிவாஜி கணேசன் * ஜெமினி கணேசன் * சாவித்திரி
குமாரி ருக்மணி * எஸ். வி. சுப்பையா * டி. கே. சண்முகம்
பாலாஜி * நாகையா * ஏ. கருணாநிதி
ஜெமினி சந்திரா * டி. பி. முத்துலட்சுமி
மற்றும் பலர் நடித்த

# கப்பலோட்டிய தமிழன்

பாடல்கள்: அமரகவி பாரதியார் — தயாரிப்பு-டைரக்ஷன்: பி. ஆர். பந்துலு — இசை: ஜி. ராமநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் மார்ச் மாதம் 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.